# உதயன்



www.onlineuthayan.com

26 பக்கங்கள் சுடர் 27 கதிர் 345 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 20 திங்கட்கிழமை (05/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## விடைபெறுகிறது 'ஜெட் லைனர்'

கொழும்பு, நவ.5

இலங்கைப் படைகளுக்கு கைகொடுத்த ஜெட் லைனர் துருப்புக்காவி கப்பலை மீள இந்தோனேஷியாவிடம் ஒப்படைக்க இலங்கைக் கடற்படை முடிவு செய்துள்ளது. இதன்படி இன்று காலை கொழும்பு துறைமுகத்தில் இருந்து ஜெட்லைனர் இந்தோனேஷியாவுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

போர்க் கருவிகளையும் இராணுவத்தினரையும் இடம் மாற்றுவதற்கு குறிப்பாக வடக்கு, தெற்குக்கு இடையேயான கடல்மார்க்க விநியோக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக இந்தோனேஷிய நிறுவனம் ஒன்றிடம் இருந்து இந்தக் கப்பல் குத்தகைக்கு பெறப்பட்டிருந்தது.

2006ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்பட்டு வந்த இந்தக்கப்பல் போர் முடிவடைந்த நிலையில் 6 ஆண்டுகளின் பின்னர் கடற்படையில் இருந்து நீக்கப்பட்டு அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்க முடிவுசெய்யப்பட்டது.

பார்க்க பக்கம் 4

## தமிழர் தாயகத்தில் படைகளை உடனடியாக அகற்ற வேண்டும்

### வலியுறுத்துகிறது அமெரிக்கா



கொழும்பு, நவ.5

தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கில் பொது மக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான இராணுவத் தலையீட்டை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் - என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மைக்கல் சிசன் தெரிவித்துள்ளார்.

போர்முடிந்தும் இலங்கையில் இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படவில்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவ அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தயாராகவே உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## அமெ. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு

கொழும்பு, நவ.5

டொச் வங்கிக்கு எதிரானஹெட்ஜிங்வழக்குகுறித்து அமெரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை சட்ட மாஅதிபர் மேற்

பார்க்க பக்கம் 4

# '13' ஒழிப்புக் கோஷத்தின் பின்னணியில் மஹிந்தவே

## போட்டுடைக்கின்றார் பொன்சேகா



கொழும்பு, நவம்பர் 5

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை, ஒரு திட்ட மிட்ட பழிவாங்கல் நடவடிக்கையெனத் தெரிவித்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, 13 ஒழிப்புக் கோஷத்தின் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷவே செயற்பட்டு வருகின்றார் என்றும் குறிப்பிட்டார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு கொண்டுவந்துள்ள அரசியல் குற்றவியல் பிரேரணை, நாட்டில் சர்ச்சையைக் கிளப்பியுள்ள 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது மேற்கண்டவாறு தெரிவித்த சரத் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-

சமுர்த்தி நிதியான 80 பில்லியன் ரூபாவைக் கொள்ளையடிக்கும் நோக்கில் தான் அரசு 'திவிநெகும' என்ற சட்டமூலத்

பார்க்க பக்கம் 4

**8** தற்போதைய உலக நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஐ.நா. சபை யின் பாது காப்புப் பேரவை இல்லை. தற்போதைய அமைப்பால் எவருக்கும் பயனில்லை - இந்தியா.

**9** சிரியாவின் வடபகுதியில் உள்ள வானூர்தித் தளத்தைக் குறி வைத்து தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் சிரிய கிளர்ச்சியாளர்கள்.

**10** தமது நாட்டின் மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்களின் அறிக்கையை நிராகரிப்பதாக ஐ.நாவுக்கான வடகொரிய பிரதிநிதி தெரிவிப்பு.

## அடுத்தமாதம் இலங்கைக்கு இந்திய இராணுவத் தளபதி

கொழும்பு, நவ.5

'இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளுக்கு எதிராக தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில், இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விக்ரம் சிங் அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பார்க்க பக்கம் 4

## நீதியரசர் தொடர்பான தெரிவுக்குழுவை சர்வதேசம் கண்காணிப்பது அவசியம்

### வலியுறுத்துகிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, நவ.5

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்ய சபாநாயகரால் நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தாம் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அவருக்கு நியாயம் கிடைக்கவே தாம் தெரிவுக்குழுவினூடாக நடவடிக்கை எடுப்போம் என்றும் இந்தத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு சர்வதேச - தேசிய கண்காணிப்பாளர்கள் அவசியம் என்றும் தெரிவித்தது.

அத்துடன், மேற்படி விடயம் சர்வதேசம் வரை கொண்டு செல்லப்பட்டுள்ளதால் நாட்டுக்கு நெருக்கடிகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் 4 இளைஞர்களின் சடலங்கள்

### காலியில் பயங்கரம்; நால்வர் கைது

கொழும்பு, நவ.5

காலி பிரதேசத்தில் நேற்றுக்காலை இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் நான்கு இளைஞர்கள் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர். குறித்த நான்கு இளைஞர்களும் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையிலேயே கொலைசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நால்வரை காலி - அக்மீமன பகுதியில் வைத்து பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். அத்துடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களையும் நடத்திவருகின்றனர்.

கடந்த 25ஆம் திகதி காலி டிக்ஷன் சந்தியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களே நேற்று கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

காலி - பொட்டால - பலகொடை பகுதியிலேயே குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பார்க்க பக்கம் 4

## அரசின் சர்வாதிகார வெளிப்பாடே நீதியரசருக்கு எதிரான பிரேரணை

### அனுமதிக்க முடியாது என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, நவ.5

குடும்ப ஆட்சி நடத்தும் மஹிந்த அரசின் சர்வாதிகாரப் பயணத்தின் வெளிப்பாடே நீதித்துறையை ஒடுக்கும் முயற்சியாகும் எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரதம நீதியரச

பார்க்க பக்கம் 4

## அனைத்து மக்களுக்கும் சமவுரிமை

### பிக்குகள் முன்னணி

கொழும்பு, நவ.5

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்கி அனைத்து மக்களுக்கும் சமவுரிமை என்ற சட்டத்தை உடனடியாகக் கொண்டுவந்து அரசு அதை அமுல்படுத்தவேண்டுமென தேசிய பிக்குகள் முன்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரிலும் தோள் கொடுத்தல்...



புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை, மந்துவில் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர். (ங)

## வெள்ளைச் சீருடையுடன் வீதியில் 'திருவிளையாடல்'

யாழ்ப்பாணம், நவ.5

பாடசாலைச் சீருடை அணிந்து கையில் மதுபானப் போத்தல்களோடு நின்று இளம் பெண்கள் மற்றும் மாணவிகளுடன் சேட்டையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 6 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகரிலுள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்களே இத்தகைய அநாகரிகச் செயலில் ஈடுபட்டுள்ளனர். நேற்றையதினம் குறித்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னரே இந்தத்திருவிளையாடலில் இறங்கியுள்ளனர்.

இந்த ஆறு மாணவர்களும் தமது பாடசாலையை அண்மித்துள்ள ஒழுங்கையில் நிலையெடுத்துக் கொண்டனர். பின்னர் கைகளில் மதுப் போத்தல்களை ஏந்தியபடி அந்த வழியால் சென்றுவரும் இளம் பெண்கள், மாணவிகளுடன் 'கிளுகிளுப்பான' வார்த்தைப் பிரயோகங்களுடன் தங்களது கைவரிசையைக் காட்ட முற்பட்டனர்.

இந்த நிலையிலேயே அந்தப்பகுதியூடாக ரோந்து சென்ற யாழ். பொலிஸாரிடம் 6 மாணவர்களும் கையும் மெய்யுமாகச்சிக்கினர். குறித்த மாணவர்கள் மது அருந்தியதை உறுதிப்படுத்த, அவர்களை பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்துள்ளனர். (ங-4)

## ஈரானுடனான உறவுகளை உடனடியாக நிறுத்தவும்

### இலங்கைக்கு அமெ. அறிவிப்பு

கொழும்பு, நவ.5

ஈரானுடன் மேற்கொண்டு வரும் அனைத்து விதமான கொடுக்கல் வாங்கல் உறவுகளையும் முற்றாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் எழுத்துமூலமான அறிவித்தலொன்றை இலங்கை அரசுக்கு விடுத்துள்ளது.

ஈரானிடமிருந்து இலங்கை மசகு எண்ணெயைக் கொள்முதல் செய்வதற்கு வசதியாக ஆறுமாதங்கள் என்ற சலுகைக் காலமொன்றை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியிருந்தது.

எனினும் இப்போது திடீரென ஈரானுடனான அனைத்து விதக் கொடுக்கல் வாங்கல்களையும் முற்றுமுழுதாக நிறுத்திவிடுமாறு இருவாரங்களுக்கு முன்னர் அமெரிக்காவால் இலங்கைக்கு அபாய அறிவிப்பொன்று விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரொருவர் தெரிவித்ததாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கடற்பிரதேசத்தில் நங்கூரமிட்டுள்ள கப்பல்கள் அனைத்தையும் அமெரிக்கா அவதானித்து வருவதாகவும் குறித்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எங்கிருந்து மசகு எண்ணெய் கிடைக்கிறது? என்பதை அவதானித்த பின்னரே இந்த அறிவிப்பை அமெரிக்கா விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அடுத்துவரும் வாரங்களில் இலங்கை பெரியளவிலான எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று அஞ்சப்படுகிறது. (ங-22)

### பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை

## ஹக்கீமின் உத்தரவுக்கமையவே மு.கா. எம்.பிக்கள் கைச்சாத்து

கொழும்பு, நவ.5

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையில் மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட விவகாரத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் இரட்டை வேடம் பூணுவதாகக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மு.கா. தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அறிவுறுத்தலுக்கமையவே குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டதை நன்கு அறிந்திருந்தும் கட்சியின் தீர்மானத்தை செயலாளர் நாயகம் வெளிப்படையாகவே கொச்சைப்படுத்த முனைவது பெரும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது என்றும் அப்பிரமுகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக தெரிய வருபவை வருமாறு:-

குற்றவியல் பிரேரணையில் மு.கா. கையொப்ப மிடுவது தொடர்பில் மூன்று தடவைகள் ஆராயப்பட்டுள்ளது.

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டங்கள் இரண்டில் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலியும் கலந்து கொண்டு கையொப்பமிடுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட தினமான நவம்பர் முதலாம் திகதி மு.கா. தலைவரின் இல்லத்தில் காலை 9 மணிக்கு மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மூன்றாவது தடவையாக நடைபெற்றது.

இதில் ஹஸனலி பங்குபற்றவில்லை. தவிர்க்க முடியாத காரணங்களுக்காகவே அவர் அன்று பங்குபற்றவில்லையாம். அன்றைய கூட்டத்தில் மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் பிரேரணையில் கையொப்பமிடவேண்டுமென தலைவர் ரவூப் ஹக்கீம் பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கமையவே நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸூம், பசீர் சேகுதாவூதும் கையொப்பமிட்டுள்ளனர்.

நீதியமைச்சர் என்ற வகையில் தன்னை கையொப்பமிட வேண்டாமென ஜனாதிபதி அறிவுறுத்தியதாகச் சுட்டிக்காட்டிய மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், அரசின் பங்காளிக்கட்சி என்ற வகையில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டாயம் கையொப்பமிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதன் பிற்பாடே தலைமைக்கு கட்டுப்பட்டு மேற்படி இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டனர் எனத் தெரியவருகின்றது.

'உதயனு'க்கு மேற்சொன்ன விடயங்கள் ஆதாரபூர்வமாக நேற்று தெரியப்படுத்தப்பட்டது. இது தொடர்பாகக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலரை தொடர்பு கொண்டு இதன் உண்மைத் தன்மையை அறிய முற்பட்டபோது அப்பிரமுகர்கள் 'உண்மை' என்பதை ஊர்ஜிதப்படுத்தினர்.

கட்சியின் செயலாளர் நாயகம் மு.காவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் ஏற்பட திட்டமிட்டு செயற்படுகின்றாரோ என்ற ஐயப்பாடு இதன் மூலம் எமக்கு ஏற்படுகின்றது.

இவரின் இரட்டை வேட செயற்பாடு அண்மைக்காலமாக அரங்கேறிவருகின்றது. அரசிடமும் இரட்டை வேடம் போடப்போய் மூக்குடைபட்டுள்ளதால் மக்கள் மத்தியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் தவறான கருத்துகளை ஊடகங்களுக்கு வழங்குகிறார் என அப்பிரமுகர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, மு.கா. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இவ்விவகாரம் காரணமாக இன்று அவசரமாகக் கூடுகின்றது. இக்கூட்டத்தில் செயலாளர் நாயகத்துக்கு எதிராகக் கடும் சொற்கள் பிரயோகிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக மு.கா. அதியுயர்பீட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். (முன்னர் வந்த செய்தி 17 ஆம் பக்கத்தில்)

### கேப்பாபிலவு மக்களை சொந்த இடங்களில்

## மீளக்குடியமர்த்தக் கோரி கூட்டமைப்பு நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம், நவ.5

கேப்பாபிலவு மக்களை அவர்களின் சொந்தக் காணிகளிலேயே குடியமர்த்த வேண்டும் என்று கோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு மக்களை அவர்களது சொந்த இடங்களை விடுத்து சூரியபுலம், சீனியாமோட்டை போன்ற காட்டுப் பகுதிகளில் அரசு வலுக்கட்டாயமாகக் குடியமர்த்தியிருந்தது. அவர்களை இரு மாதங்களில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதாகவும் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த உறுதிமொழிக்கு மாறாக கேப்பாபிலவு மக்களை சொந்தக் காணிகளில் குடியமர்த்தாது, அவர்களுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது அந்தக் காணிகளில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் வேறு ஒரு திட்டத்துக்காகவே அரசால் பயன்படுத்தப் படவிருந்தன.

எனவே கேப்பாபிலவு மக்களை அவர்களது சொந்தக் காணிகளில் குடியமர்த்த வேண்டும் என்று கோரி, நாம் நீதிமன்றின் உதவியை நாடவுள்ளோம்-என்றார்.

கேப்பாபிலவில் குடியமர்த்தப்பட்ட சுமார் 165 குடும்பங்களுக்கான வீடமைப்புப் பணிகளை மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-16)

## கொல்களமாகும் கோயிலாமனை

தென்மராட்சி, நவ.5

தென்மராட்சியில் மக்களின் கால்நடைகளைக் களவாடும் சிலர் அவற்றினை காவு கொள்ளும் கொல்களமாக கொடிகாமம் கோயிலாமனை பற்றைப் பகுதியை மாற்றியுள்ளனர். தாம் களவாடி வரும் கால்நடைகளை இந்தப் பகுதியில் உள்ள பற்றைகளில் வைத்துக் கொலை செய்கின்றனர். பின்னர் கழிவுகளையும் அங்கேயே விட்டுவிட்டுச் செல்கின்றனர். இதனால் அப்பகுதியில் குடியிருப்போர் பெரும் சுகாதாரச் சீர்கேட்டுக்கு ஆளாகின்றனர்.

இதுகுறித்து உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயனில்லையென்று மக்கள் தெரிவித்தனர். (ங-9)



2012 வரவு செலவுத் திட்ட உரையின் போது பிரகடனப்படுத்தியதற்கு இணங்க, ஊடகவியலாளர்களுக்கு மடிக் கணினிகளும் சிரேஷ்ட கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வட்டியற்ற வாகனக் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அலரி மாளிகையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இலக்கியப் பேரவையும் யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து 2010 -2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த இலக்கிய நூல்களுக்கான விருதினை வழங்கி கௌரவித்தது. இந்த நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் இலக்கியப் பேரவைத் தலைவர் கலாநிதி க.குணராசா மூத்த பத்திரிகையாளர் சின்னக்கண்ணு பெருமாளுக்கான சிறப்பு விருதினையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறந்த ஆய்வு நூலுக்கான விருதினை ஊடகவியலாளரும் ஏழுத்தாளருமான நெடுந்தீவு லக்ஷ்மனுக்கும் வழங்கி வைக்கின்றனர். (ங-13)

## புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இம்முறை விசேட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.5

வடமாகாணத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 2012 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 1647 மாணவர்களுக்கு சிறப்பு ஊக்குவிப்பாக தலா 5000 ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன்.

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டு தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:- வடமாகணத்தில் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஆசிரியர் நியமனம், கல்விக்கான நிதி ஒதுக்கீடு என பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இந்த வருடம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனை கல்வி அதிகாரிகளும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் கவனத்தில் கொண்டு மாணவர்களின் கல்வி நிலையை மேலும் உயர்த்த ஒத்துழைக்க வேண்டும்.-என்றார்.(ஐ-14)

## சாட்சிகள் இன்மையால் வழக்குத் தள்ளுபடி

யாழ்ப்பாணம், நவ.5

கைகலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கில் சாட்சிகள் மன்றில் தொடர்ந்து முன்னிலையாகாததால் 10 வருடங்களின் பின்னர் சந்தேகநபர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

2002 ஆம் ஆண்டு யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டு தரப்பினர் கைகலப்பில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் குரும்பசிட்டியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கின் ஆரம்பத்தில் சாட்சிகள் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்த போதும் பின்னர் வழங்கப்பட்ட தவணைகளில் அவர்கள் மன்றில் முன்னிலையாகவில்லை. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், வழக்குக்கு 10 வருடங்களாகத் தொடர்ந்து சென்று வந்தார். சாட்சிகள் இன்மையால் வழக்கு தொடர்ந்து

> வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

ஒத்திவைக்கப்பட்டு வந்தது.

கடந்த வாரம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபர் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் மூலமாக நீதிமன்றில் முன்னிலையானார்.

இந்த வழக்குத் தொடர்பில் இரண்டு சாட்சிகள் இருந்தனர். ஒருவர் வெளிநாடு சென்று விட்டார். மற்றையவர் இருப்பிட விலாசம் மாறிவிட்டார். அதனால் பொலிஸாராலும் காட்சிகளை மன்றுக்கு அழைக்க முடியவில்லை.

எனவே சாட்சிகள் மன்றுக்கு தொடர்ந்து சமுகமளிக்காத நிலையில் வழக்கை தொடர்ந்து விசாரிக்க முடியாது எனத் தெரிவித்த நீதிவான் சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுதலை செய்தார். (ஐ-4)

# கால்கடுக்கக் காத்திருந்து கௌரவம் பெற்ற மாணவர்

யாழ்ப்பாணம், நவ-05

மாணவர்களுக்கு பாராட்டு விழா என அழைக்கப்பட்ட பெற்றோர்களும் ஆசிரியர்களும் விருந்தினர்களின் வருகைக்காக சுமார் ஒன்றரை மணிநேரம் காத்திருக்க வைக்கப்பட்டனர். அத்துடன் தமது பிள்ளைகளின் பாராட்டு விழாவை காண முடியாதபடி. அவர்கள் மண்டபத்தின் வெளியே நிறுத்தப்பட்டனர்.

இதேவேளை சில மாணவர்களும் மண்டபத்தின் வெளியே விழா நேரம் முழுதும் கால் கடுக்க நின்று கௌரவம் பெற வேண்டியிருந்தது.

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தப் பாராட்டு நிகழ்வுகளுக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 1500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.இவர்களுடன் அந்தப் பிள்ளைகளுடைய பெற்றோர்களுக்கும், வகுப்பு ஆசிரியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

காலை 9 மணிக்கு விழா இடத்துக்கு சமுகம் தர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு காலை 6 மணிக்கே மண்டபத்துக்கு வந்துவிட்டனர்.

இதனால் நிகழ்ச்சி ஆரம்பமாகும் நேரத்துக்குச் சென்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருப்பதற்கு இடமில்லாமல் மண்டபத்துக்கு வெளியே பெற்றோருடன் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் திட்டமிடல் இல்லாத செயலினாலேயே மாணவர்கள் மண்டபத்துக்கு வெளியே கால் கடுக்க நின்று கௌரவம் பெற வேண்டிய நிலை ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் தெரிவித்தனர். இதேவேளை உரியநேரத்துக்கு அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரும் வரவில்லை. இதனால் நீண்டநேரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் மண்டபத்துக்கு வெளியே காத்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்தை விட தாமதமாகவே- அமைச்சரும் ஆளுநரும் வந்த பின்னரே- விழா ஆரம்பமானது.

அறிவிக்கப்பட்ட நேரத்தில் நிகழ்வு நடைபெறாததால் குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லாமல் மாணவர்கள் சோர்வடைந்ததையும் அவதானிக்க முடிந்தது. (ங-14)

# சிறுமி மீதான வன்புணர்வு வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு

யாழ்ப்பாணம், நவ.5

பதின்ம வயதுச் சிறுமிக்கு மயக்க மருந்து கொடுத்து வன்புணர்வு செய்தமை தொடர்பான வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக யாழ்.நீதிமன்று அனுப்பி வைத்துள்ளது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது.

2009ஆம் ஆண்டு இந்த வன்புணர்வுச் சம்பவம் இடம்பெற்றது. சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பதின்ம வயது சிறுமி ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டார்.

அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட சந்தேகநபர்கள், சிறுமியின் அண்ணனுடைய நண்பர்கள் என்று தம்மை அறிமுகம் செய்து கொண்டனர். அண்ணன் அழைத்துவரச் சொன்னதாகப் பொய்கூறி சிறுமியை காரைநகருக்கு பஸ்ஸில் அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வீடொன்றில் வைத்து மயக்க மருந்து கலந்த தேநீரை குடிக்கக் கொடுத்துள்ளனர். அதனைக் குடித்த சிறுமி மயக்கமடைந்து விட்டார். மறுநாள் காலையில் கண்விழித்த போதே தான் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதை சிறுமி உணர்ந்து கொண்டாள். இந்த நிலையில் அயலவர்களின் உதவியுடன் சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை மருத்துவ பரிசோதனையில் தெரியவந்தது. அது தொடர்பில் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணைகளின் போது இரண்டு இளைஞர்கள் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்களை சிறுமியினுடைய அண்ணனுக்கும் தெரியாது என்று தெரியவந்தது.

பின்னர் நீதிமன்றில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதன்போது சிறுமி தன்னை அழைத்துச் சென்ற இரண்டு சந்தேகநபர்களையும் அடையாளம் காட்டினார்.

நீதிமன்றில் வழக்கு விசாரணை தொடர்ந்தது.

பாதிக்கப்பட்டவர்கள் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஊடாக மன்றில் முன்னிலையாகினர். இந்நிலையிலேயே அந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-4)

## காணிப் பிரச்சினைக்குத் தீர்வு

வரணி, நவ.5

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் காணி இல்லாதவர்கள், காணி உறுதிப்பத்திரம் இல்லாதவர்கள் மற்றும் அரச காணிகளில் வசிப்போர் அனைவரும் நாளை மறுதினம் தத்தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தென்மராட்சிப் பிரதேச செயலகம் விடுத்துள்ளது. (ஐ-122)

## போக்குவரத்து சீரின்மையால் காரைநகர் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.5

காரைநகர் பகுதியில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்கள் காரைநகர் இறங்குதுறையில் பயணிகளை ஏற்றிச் செல்வதில்லை எனப் பயணிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். அதனால் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து சென்றே பஸ்ஸில் ஏற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தீவகத்திலிருந்து பாதை வழியாக காரைநகர் இறக்கிதுறையைச் சென்றடையும் பயணிகளே இந்த நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளனர்.

காலையில் படகுப் பாதையில் பயணிக்கச் செல்லும் பயணிகளை இறங்குதுறையில் கொண்டு சென்று இறக்குவிடும் பஸ்கள் மாலையில் அவர்களை ஏற்றுவதற்குச் செல்வதில்லை.

இந்த வருடத்திலிருந்து இந்த நிலைமை தொடர்வதாக பயணிகள் தெரிவிக்

> உரிய அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பயணிகள் விசனம் தெரிவித்தனர்.

கின்றர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பயணிகள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண முகாமையாளரிடம் ஒரு வாரத்துக்கு முன்னர் தொடர்பு கொண்டு கேட்டபோது, அது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். எனினும் தற்போதும் இறங்குதுறைக்கு பஸ்கள் தம்மை ஏற்ற வருவதில்லை என்று பயணிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# ருவாண்டாவில் காட்டிய அக்கறை ஏன் ஈழத் தமிழர்கள் மீது இல்லை?

## பான் கீ மூனிடம் இன்னர்சிட்டிப் பிரஸ் கேள்வி

ருவாண்டாவில் நடைபெற்ற இனப் படுகொலையின் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் அக்கறை காட்டிய ஐ.நா. சபை, ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் மாத்திரம் ஏன் மெத்தனமாகச் செயற்படுகிறது? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது 'இன்னர்சிட்டி பிரஸ்'.

ஐ.நாவின் உத்தியோக பூர்வ ஊடகமான 'இன்னர்சிட்டிப் பிரஸில்' மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையில் போர் முடிந்து மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும், அங்கு நடைபெற்ற இனப் படுகொலை சம்பந்தமாக எவரும் தண்டிக்கப்படவில்லை. ஆனால் ஆயிரக் கணக்கான மக்களை படுகொலை செய்த ருவாண்டா அரசு மீது நடவடிக்கை எடுப்பதில் ஐ.நா. சபை காட்டிய அக்கறையை முள்ளிவாய்க்கால் பகுதியில் தமிழ் மக்களை படுகொலை செய்தவர்களை தண்டிப்பதில் காட்டவில்லை. இந்தப் பாரா முகம் ஏன்? என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான்- கீ மூனிடம் இன்னர்சிட்டி பிரஸ் கேள்வியெழுப்பியுள்ளது.

பூகோள கால மீளாய்வு தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் நிலையில் ஐ.நா. சபையின் உத்தியோக பூர்வ ஊடகம் இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பது இலங்கை அரசை கடும் சீற்றத்துக்குள்ளாக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங)

## அரசின் ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ருக்கு எதிரான அரசின் செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாது என்றும் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் கலா நிதி ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிராக ஆளுந் தரப்பினரால் கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றவியல் பிரேரணை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பை தனக்குக் கீழ் கொண்டுவந்துள்ள நிறைவேற்று அதிகாரம் தற்போது நீதித்துறையையும் அடிமைப்படுத்த முயற்சிக்கின்றது. குடும்ப ஆட்சி நடத்திவரும் மஹிந்த அரசு தற்போது ஏகாதிபத்தியத்தை நோக்கி அதி தீவிரமாகப் பயணிக்கின்றது. அதன் வெளிப்பாடே பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றவியல் பிரேரணையாகும். பிரதம நீதியரசருக்கு எதிரான அரசின் செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாது.

அரசின் இவ்வாறான செயற்பாடுகள்தான் சர்வதேச தலையீடுகளுக்கு அழைப்புவிடும் வகையில் அமைந்துள்ளன. நிலைமை இவ்வாறிருக்க, அரசு ஏன் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது?

இந்த அரசிடம் தூரநோக்கு, தெளிவான இராஜதந்திரக் கொள்கை என்பன இல்லை. இவ்வாறானதொரு அரசே நாட்டை நிர்வகிக்கின்றது. இந்த நிலைமையை மக்கள் உணர்ந்து விரைவில் இவற்றுக்கு முடிவுகட்டவேண்டும் - என்றார்.

## தமிழர் ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பொதுமக்களின் செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீடு இன்னமும் உள்ளது. இதனை விலக்கிக் கொள்ள வேண்டும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு முன்வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் அதிகளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அண்மையில் வெளியிட்ட கருத்து பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்தநிலையில், அமெரிக்கத் தூதுவரும் அதே கருத்தை வலியுறுத்தியுள்ளார் என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

## விடை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

3000 படையினரை ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்லும் வசதிகளைக் கொண்ட இந்தத் துருப்புக்காவிக் கப்பல் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில், இலங்கைப் படையினரையும் பொருள்களையும் விரைவாக இடம்நகர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

திருகோணமலையில் இருந்து இந்தக் கப்பல் வாரத்துக்கு மூன்று தடவைகள் காங்கேசன்துறைக்கு படையினரையும் பொருள்களையும் ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. போர் முடிவடைந்தபின்னர் இந்தக் கப்பல் உள்நாட்டுச் சேவைகளிலும், கருத்தரங்குகள், விழாக்களை நடத்துவதற்கான மிதக்கும் அரங்கமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

கப்பலை இலங்கைக் கடற்படை திருப்பி அனுப்புவதற்கான காரணம் வெளிப்படுத்தப்படாத போதிலும் இதனை பராமரிப்பதற்கு பெருமளவில் ஏற்படும் செலவினமே காரணம் என்று கூறப்படுகிறது. (ஐ)

## அடுத்த மாதம்....

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இதன்போது, இரு தரப்பு இராணுவ உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்திய இராணுவத் தளபதி பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் இந்திய இராணுவ தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். எனினும் அவர் இலங்கையில் தங்கியிருக்கும் நாள்கள் தொடர்பில் இரு தரப்புகளும் தீர்மானிக்கும் என இராணுவத் தகவல்கள் தெரிவித்தன.

இந்திய இராணுவத் தளபதியின் இந்த விஜயத்தின்போது கூட்டுப் பயிற்சி, இராணுவ உபகரணம் மற்றும் பயிற்சிகள் தொடர்பில் இரு நாடுகளுக்கு இடையில் பேச்சு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## '13' ஒழிப்புக்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தைக் கொண்டுவந்துள்ளது. இந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசுக்குச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகத்தான் பிரதம நீதியரசரைப் பழிவாங்கும் நோக்கில் அது செயற்படுகின்றது.

இதன் ஓர் அங்கமாக பிரதம நீதியரசருக்கு எதிராகக் அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. அரசின் இந் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தனிப்பட்ட ரீதியிலான பழிவாங்கல் நடவடிக்கையாகும்.

அரசில் அங்கம் வகிக்கும் புலமையற்றவர்களே அந்தப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர். இது ஒரு பழிவாங்கல் நடவடிக்கையென மீண்டுமொரு தடவை கூறிக்கொள்கின்றேன்.

ஷிராணி பண்டாரநாயக்க நாட்டின் முதலாவது பெண் பிரதம நீதியரசராவார். எனவே,அவர் விடயத்தில் அரசு மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொண்டுள்ளது.

அதேவேளை, நாட்டிலுள்ள பிரச்சினைகளை மூடிமறைக்கும் நோக்கில்தான் அரச தரப்பினர் தற்போது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிப்பது குறித்துப் பேசுகின்றனர்.

சில அமைச்சர்களை ஏவிவிட்டு இதன் பின்னணியில் ஜனாதிபதிதான் செயற்படுகின்றார். நாட்டில் இன்று எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. இந்நிலையில் அரசு ஏன் இந்த விடயத்தைத் தூக்கிப் பிடிக்க வேண்டும்? மக்களைத் திசைதிருப்பவே அரசு இவ்வாறு செய்கின்றது. தற்போது இருக்கின்றது போல 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் இருக்கட்டும் - என்றார்.

## சுட்டுக்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து....

காலி - பலாங்கொடை பகுதியில் நேற்றுக்காலை இரு ஆயுதக் குழுவினரிடையே இடம்பெற்ற மோதலின்போதே நான்கு இளைஞர்கள் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த 25ஆம் திகதி காலி டிக்ஷன் சந்தியில் வர்த்தகர் ஒருவரின் கை, கால்களைத் துண்டாக வெட்டிக் கொலைசெய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களே இன்று (நேற்று) காலை இரு ஆயுதக் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

கொலைசெய்யப்பட்ட நால்வருள் இருவர் காலி - எக்கிலி கொடையைச் சேர்ந்தவர்கள். ஏனைய இருவர் மொரகொடவத்தை மற்றும் அம்பலவத்த ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளபோதும் குறித்த நபர்களின் விவரங்கள் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த நான்கு இளைஞர்களின் சடலங்கள் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வதற்காக காலி பொலிஸ் விசேட குழுவினரும், பொட்டாவல பொலிஸாரும் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

## நீதியரசர் ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை விவகாரம் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தை செயலிழக்கச் செய்ததாலேயே தற்போது நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை, அரசமைப்பு ஆகியவற்றுக்கிடையில் மோதல்நிலை தோற்றம் பெற்றுள்ளதுடன், பாரதூரமான நிலையையும் அடைந்துள்ளது. 17ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருந்திருந்தால் நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை, அரசமைப்பு ஆகியவற்றுக்கிடையில் மோதல்நிலை ஏற்பட்டிருக்காது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக அரசால் கொண்டுவரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்ய சபாநாயகரால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளது. இந்தத் தெரிவுக்குழுவில் நாமும் கலந்துகொள்வோம். பிரதம நீதியரசருக்கு எதிரான மேற்படி பிரேரணை தொடர்பில் நாம் சரி, பிழை பார்க்கமாட்டோம். அவருக்கு நியாயம் கிடைப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாக நடத்தப்படும விசாரணைகள் வெளிப்படையானதாக இருக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்.

மேற்படி விவகாரம் தற்போது சர்வதேச நாடுகளின் கவனத்திற்கும் சென்றுள்ளது. ஜெனிவாவில் நடக்கின்ற பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடரிலும் இது குறித்து பேசப்பட்டுள்ளது. அத்துடன், அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 20ஆவது கூட்டத்தொடரிலும் இது குறித்து கவனம் செலுத்துவதற்கு மேற்குலக நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன என்றும் அறியமுடிகின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான விவகாரம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதால் நாட்டுக்கு நெருக்கடி நிலைமை ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது - என்றார்.

## அனைத்து ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

னணி வலியுறுத்தியுள்ளது.

ஜே.ஆர்.ஜயவர்தனவின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு முடிச்சுப் போடவே அன்று இந்தியா 13 என்ற கயிற்றைப் பயன்படுத்தியது என்றும் அந்த முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படவேண்டுமெனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்ட பிள்ளையார் சுழி நாட்டில் இன்று பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

கோத்தாவின் கருத்துக்கு ஒத்தூதும் வகையில் அரசிலுள்ள கடும்போக்குடைய அமைச்சர்கள் சிலர் 13 ஐ ஒழிக்கவேண்டுமெனக் கோஷமெழுப்பி வருவதால் இந்தப் பிரச்சினை இன்று பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில், இது விடயத்தில் தேசிய பிக்குகள் முன்னணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையிலேயே அதன் தலைவர் தம்பர அமில தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜே.ஆர்.ஜயவர்தனவின் வெளிநாட்டுக் கொள்கைகள் மேற்குலகை நோக்கி நகர்ந்ததால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியா இனப்பிரச்சினையைப் பகடையாகப் பயன்படுத்தியது.

இதன் பிரகாரம் மாகாணசபை முறைமையை அறிமுகப்படுத்தி இலங்கைக்கு இந்தியா முடிச்சுப்போட்டது. குறிப்பாக, 1987ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தமானது எமது நாட்டுக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்டது.

எனவே, அது எமது நாட்டுக்குப் பொருந்தாத ஒன்று. அதை உடனடியாக நீக்கவேண்டும். தமிழர்களுக்காகத்தான் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது என்றால் அவர்களின் பிரச்சினைகள் இந்நேரம் தீர்ந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லையே. இந்த மாகாணசபை முறைமையில் பல குறைபாடுகள் உள்ளன. எனவே, அதை நீக்குவதுதான் சரி.

அவ்வாறு 13 ஆவது திருத்தம் நீக்கப்பட்டால் தமிழர்களின் - முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு என்னதான் தீர்வு என்ற கேள்வி எழுகின்றது அல்லவா?

அதற்கு ஒரு மாற்று வழிமுறை உள்ளது. அதாவது, அனைத்து மக்களுக்கும் சமவுரிமை வழங்கப்படவேண்டும். இது அரசமைப்பில் உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்காக அனைத்து மக்களுக்கும் சமவுரிமை என்ற சட்டத்தை அரசு கொண்டுவரவேண்டும்.

அம்பாந்தோட்டையில் பிறந்தாலும் சரி, அல்லது யாழ்ப்பாணத்தில் பிறந்தாலும் சரி அனைவருக்கும் சமவுரிமைகள் இருக்கவேண்டும். இவ்வாறானதொரு நிலைமை உருவாகினால் மட்டுமே நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட முடியுமென்று குறிப்பிட்டார் அவர். (ங)

## அமெ. நீதிமன்ற...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கொண்டு வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

டொச் வங்கியுடனான ஹெஜிங் உடன்படிக்கை மீறப்பட்டமை குறித்து அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அமெரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் விசாரித்தது.

அந்த மத்தியஸ்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளில் ஒருவர் இலங்கைக்கு சார்பாகவும் மற்றைய இரண்டு நீதிபதிகளும் எதிராகவும் கருத்துகளைக் கூறியிருக்கின்றனர்.

இதற்கமைய வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்வதற்குரிய வழிவகைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருகிறது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

டொச் வங்கிக்கு எதிராக ஹெஜிங் வழக்கில் அந்த வங்கிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி) 60 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டுமென அமெரிக்காவை தளமாகக் கொண்ட மத்தியஸ்த நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

உரிய நேரத்தில் கடனை செலுத்தாமல் விட்டமைக்கான வட்டியுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அக்கடனை செலுத்தவேண்டியிருக்குமென அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை இது எங்களுக்கு எதிரான தீர்ப்பாகும் நாம், இந்தத் தீர்ப்பைச் செல்லுபடியற்றதாக்கத் தேவையான நடவடிக்கைகள் பற்றி யோசித்து வருகிறோம் என சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

2007 இல் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்து கொண்டிருந்தபோது வங்கிகளிடம் இழப்பீடு பெறும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஹெஜிங் உடன்படிக்கையை செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தவறுகளுக்குப் பிராயச்சித்தம்; தக்கவேளை இது இந்தியாவுக்கு

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்து அரசியலில் ஒரு சர்ச்சையைக் கிளப்பிய வேளை, இந்தியா தனது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

வடகிழக்கு மாகாணம் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட போது, இந்தியா மௌனம் சாதித்தது போன்று தொடர்ந்து மௌனம் சாதிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இப்பிரச்சினையில் தற்பொழுது இந்தியாவின் மௌனம் கலைவது ஓரளவு தெரிகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இது ஒரு கௌரவப் பிரச்சினை. 13ஆவது திருத்தத்துக்குக் காரணமான ஜே.ஆர்– ராஜீவ் ஒப்பந்தத்துக்கு இந்தியா கொடுத்த விலை அதிகம். கொழும்பில் இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பில் துப்பாக்கிப்பிடியால் ராஜீவ் காந்தியை அடித்துக் கொலைசெய்ய முயற்சி எடுக்கப்பட்டது.

ராஜீவின் மரணத்துக்குப் பின்பு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஒதுங்கி இருந்த இந்தியா, போர் முடிவுற்ற பின்னர், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை அடிப்படையாக வைத்து 13+ மூலம் ஓர் அரசியல் தீர்வுக்கு முயற்சித்து வருகிறது.

இந்த நேரத்திலேயே 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். அமைச்சரவையில் உள்ள சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் 13க்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவதற்கான பாதையை அவர் திறந்து விட்டுள்ளார்.

எனினும் இந்தியா இதுவரை 13 தொடர்பாக இலங்கையிடம் பகிரங்கமாக எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை. எனினும் கடந்த சில தினங்களில், ஜெனிவா பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்திலும் இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஊடாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் பதிவுகள் தொடர்பாக கடந்த வியாழனன்று மீளாய்வுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது இந்தியா சமர்ப்பித்த அறிக்கையில்–

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அமுல்செய்வது தொடர்பாக இலங்கை அளித்த உறுதி மொழிகளின் அடிப்படையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவான ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்குத் துரிதமான நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. வட மாகாணசபைத் தேர்தல் குறித்தும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம், புதுடில்லியில் செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து வெளியிட்ட புதிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், 13ஐ அகற்றுவதை இந்தியா ஏற்காது என்று ஆணித்தரமாகத் தெரிவித்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

"இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்வு காணப்படவேண்டும் என்று ஒரு தரப்புக் கூறி வருகிறது. அதேசமயம், மற்றொரு தரப்பு அதற்கு முரணான கருத்தை வெளியிட்டு வருகிறது. இருந்தபோதிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" – என்று குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இந்தியாவின் கருத்து வெளிவந்து தெளிவை உண்டாக்கிய பின்னர், இலங்கை ஜனாதிபதி இப்பிரச்சினையில் இனியும் மௌனம் சாதிக்க முடியாது. அவரது அமைச்சரவையில் சிரேஷ்ட அமைச்சர்களாகக் கருதப்படும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன ஆகியோரின் கருத்து அரசின் கருத்தா அல்லது அவர்களின் தனிப்பட்ட கருத்தா என்பதைத் தெளிவுபடுத்தி ஆகவேண்டும்.

பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது செய்யமுடியாதுபோன ஒன்றைத்தான், உயர்மட்ட ஆசியுடன் இந்த அமைச்சர்கள் மூவரும் செய்ய முயற்சிக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் ராஜீவ் காந்தி அன்று மிகவும் உறுதியாக இருந்தார். பிரதமர் மன்மோகன் சிங்கும் மிகவும் உறுதியாகச் செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இலங்கையின் போர் வெற்றி பிரச்சினைக்குத் தீர்வு அல்ல என்பதை இந்தியா தற்பொழுது உணர்ந்துகொண்டுவிட்டது. உண்மையில் போர் வெற்றி அரசு மூச்சு விடுவதற்கான அவகாசமே என்பதனையும் அது இலங்கை அரசின் உயர் பீடத்துக்கு இடித்துரைக்க வேண்டிய வேளை இது.

13 + தற்பொழுது பூஜ்யமாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இல்லை என்ற அரசின் நிலைப்பாட்டின் வெளிப்பாடே. இலங்கை இனப்பிரச்சினையில் இது ஓர் ஆபத்தான நிலைமை ஆகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக உள்ள அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்க இந்தியா உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை வழங்காமல் இருக்க, இந்நாட்டு அரசு முந்திய பாதையில் நடந்தது போன்று இப்போதும் குள்ளநரித் தனமாகச் செயற்படவே முனையும் என்பதனை மறந்துவிடக் கூடாது.

உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன் என்ற நிலைக்கு, இப்போதைய இலங்கை அரசு நகர்வதைத் தடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. அதனை மறவாது இந்தியா இவ்வேளை செயற்பட வேண்டும். அப்போது தான் முன்னர் விட்ட தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்வதாக அமையும்.

# பிரதி நிதியமைச்சராக சரத்அமுனுகம; வெளிநாட்டு நிதியைப் பெறுவதற்கே

## பொருளியல் நிபுணர்கள் கருத்து

**பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்கவே சரத் அமுனுகமவிடம் பிரதி நிதியமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**



கொழும்பு, நவ.5

சரத் அமுனுகமவுக்கு திடீரென பிரதி நிதியமைச்சர் பதவியை வழங்கியிருப்பது வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெறுவதற்கே என்று பொருளியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட அமைச்சரான கலாநிதி சரத்அமுனுகம நவம்பர் முதலாம் திகதியிலிருந்து பிரதி நிதியமைச்சராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதுவரையிலும் பிரதிநிதியமைச்சராகப் பதவிவகித்து வந்த கீதாஞ்ஜன குணவர்த்தனவுக்கு வேறொரு துறையில் விரைவில் பிரதியமைச்சர் பதவி வழங்கப்படக்கூடுமெனவும் தெரியவந்துள்ளது.

மேலும், கலாநிதி சரத்அமுனுகம வகித்துவரும் சிரேஷ்ட அமைச்சர் பதவிக்கு மேலதிகமாகவே இந்தப் பிரதி நிதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பதவியை முதலாம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து சரத் அமுனுகம பொறுப்பேற்றுக்கொண்டார்.

மஹிந்த அரசில் கடந்த சில வருடங்களாக செல்வாக்கற்ற அமைச்சர்களில் ஒருவராகக் கணிக்கப்பட்டிருந்த சரத் அமுனுகமவுக்கு திடீரென பிரதி நிதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருப்பது பெரும் ஆச்சரியத்தை அரச வட்டாரங்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்கவே சரத் அமுனுகமவிடம் பிரதி நிதி அமைச்சர் பொறுப்பை வழங்கியுள்ளதாக அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சர்வதேச நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்ட சரத் அமுனுகமவை பிரதி அமைச்சராக்கியதன் மூலம் வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ள அரசு முயற்சி எடுத்துள்ளதாக பொருளியல் நிபுணர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, வரவு -செலவுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னராகவே அமைச்சரவை மாற்றமொன்றை மேற்கொள்வதற்கு அரசு திட்டமிட்டிருந்தது. எனினும் அத்தகைய அமைச்சரவை மாற்றத்தை டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதியில்- வரவு-செலவுத்திட்ட விவாதம் முடிவுற்றதன் பின்னர்- அரசு ஒத்திவைத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ங-22)

## சின்னக்கடையில் திருட்டு; மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ.5

யாழ். சின்னக்கடைப் பகுதியில் 3 கடைகளை உடைத்து சுமார் 60ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த மூன்றுபேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது சின்னக் கடைப்பகுதியிலிருந்த மூன்று கடைகளிலிருந்தும் சுமார் 60 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்கள் திருடப்பட்டு விட்டன என்று குறித்த கடைகளின் உரிமையாளர்கள் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதனடிப்படையில் விரைந்து நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் குருநகரைச் சேர்ந்த மூன்று பேரைச் சந்தேகத்தின் பேரில்கைது செய்தனர். சந்தேக நபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ங-4)

## பிறப்பு, இறப்பு, திருமணம் தொடர்பான சான்றிதழ்கள் "சில நிமிடங்களில்" 2013 ஜனவரி முதல் நடைமுறை

**பிரதேச செயலகங்களிலும், மாவட்ட செயலகங்களிலும் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் ஏற்கனவே கணினிமயப் படுத்தப்பட்டுள்ளன.**

கொழும்பு, நவ.5

2013 ஜனவரி முதல் நாட்டின் எந்தவொரு இடத்திலிருந்தும் பிறப்பு, திருமணம் மற்றும் மரணச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பொது மக்கள் சில நிமிடங்களிலேயே பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான செயற்றிட்டமொன்றினை நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை முழுவதிலுமுள்ள 250 பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகங்களிலும் ஒரு சில நிமிடங்களுக்குள் இந்த சான்றிதழ்களின் பிரதிகளை வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் தற்போது கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. எனவே இத்தகைய கணினிச் செயற்பாட்டின் மூலமாக சான்றிதழ்களின் பிரதிகளை சில நிமிடங்களிலேயே மக்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.பீ.ஜே. செனவிரத்னவின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலகங்களிலும், மாவட்ட செயலகங்களிலும் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் ஏற்கனவே கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ங-22)

# வங்கி வேலைக்கு 5 லட்சம் பெற்ற மோசடி நபர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், நவ.5

அரச வங்கிகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் நீதிவானின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் பெயரைப் பயன்படுத்தியே சந்தேக நபர்கள் இருவரும் பண மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வேலை பெற்றுத் தருவதாக ஆசை காட்டி இரு சகோதரர்களிடம் 5 லட்சம் ரூபா பணத்தை சந்தேக நபர்கள் கோரியிருந்தனர். எனினும் சகோதரர்களுக்குச் சந்தேகம் ஏற்படவே அவர்கள் அங்கஜன் இராமநாதனின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டனர். இதன்போதே அவர்கள் மோசடி வேலையில் ஈடுபடுவது தெரியவந்தது. உடனடியாக இதுகுறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் மோசடி நபர்களின் வார்த்தைகளை நம்பியது போன்று நடித்த சகோதரர்கள், முற்பணமாக அவர்களிடம் 2 லட்சம் ரூபா பணத்தை தருவதாக ஒப்புக் கொண்டனர். குறித்த பணத்தை பஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை கொண்டு வந்து தருமாறு சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். அதன்படி பணத்தை சந்தேக நபர்கள் இருவரும் பெற்றுக் கொண்ட போது, சம்பவ இடத்திலேயே வைத்து அவர்களை இரகசியப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு பேரும் மானிப்பாயைச் சேர்ந்தவர்களென்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிவானின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ங-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தில் மூழ்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்

புதுக்குடியிருப்பு,நவ.5

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மழை, வெள்ளம் தேங்கிநிற்கும் பகுதிகளில் இயங்கி வருகின்றது புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம். இதனால் பயன் பெறச் செல்லும் பொதுமக்கள் வெள்ள நீருக்குள்ளாலேயே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் கடந்த போர் இடர்கள் காரணமாக முற்றாக அழிவடைந்துள்ளது. இந்த நிலையில் பிரதேச செயலகம் ஒரு கட்டடத்திலும் திட்டமிடல் பிரிவு இன்னொரு கட்டடத்திலும் இயங்கிவருகின்றன.

பிரதேச செயலர் பணிமனைக்கு தமது தேவைகளை நிறைவு செய்வதற்குச் செல்லும் மக்களுக்கென கட்டடங்களுக்கு வெளியில் இருக்கைகள் போடப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக பெய்த மழை காரணமாக செயலகத்துக்கு வருகை தந்த பொதுமக்கள் மழைக்கு குடைகளை ஏந்தியவாறும், நனைந்த நிலையிலும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

செயலகத்திலிருந்து திட்டமிடல் பிரிவு அலுவலகம் அமைந்துள்ள பகுதிக்குச் செல்லும் பாதை நீர் தேங்கியுள்ளதுடன் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது. இதனால்அலுவலர்களும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-400)



புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் அடையாள அட்டை மற்றும் வேறு தேவைகளுக்கான புகைப்படங்களை இலவசமாக வழங்கும் பொருட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (க-400)

# 50 வீடுகள் கையளிப்பு

அக்கராயன்,நவ.5

துணுக்காய் தேறாங்கண்டலில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் மக்களிடம் கடந்த முதலாம் திகதி கையளிக்கப்பட்டுள்ளன.

யுஎன்- ஹபிற்றாற் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகளே கையளிக்கப்பட்டுள்ளன. துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யு.என். ஹபிற்றாற் நிறுவனப் பிரதிநிதி யோஸி 50 வீடுகளையும் மக்களிடம் கையளித்தார். துணுக்காயில் மக்கள் மீள் குடியேற்றம் நடைபெற்று 3 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் 50 வீடுகள் தேறாங்கண்டல் கிராமத்தில் முதலாம் கட்டத்தில் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மக்களின் நீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு இரு பொதுக் கிணறுகளும் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. (த-18)

# நெற்பயிர்கள் அழிவடைந்ததால் கிளி.விவசாயிகள் நெருக்கடியில்

அக்கராயன், நவ.5

கடும் மழை காரணமாக பயிர்கள் அழிவடைந்ததால் கிளிநொச்சி விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே விதைப்பு மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களில் மழை வெள்ளம் தேங்கி நின்றமையால் ஓரளவு முளைத்த நெற்பயிர்கள் அழிவைச் சந்தித்துள்ளன. இதனால் மீளவும் விதைப்பை மேற்கொள்ள வேண்டிய அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுடன் மேலும் செலவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே வங்கிகளில் பெற்ற கடன்களை திருப்பச் செலுத்த முடியாத நிலையிலுள்ள இவர்கள் மேலும் கடன்பெற வேண்டிய தேவை யேற்பட்டுள்ளது.



**விதை நெல்லுக்கும் இங்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் மீள விதைப்புக்களை மேற்கொள்வதிலும் தடைகள் காணப்படுகின்றன.**

இதைவிட விதை நெல்லுக்கும் இங்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் மீள விதைப்புக்களை மேற்கொள்வதிலும் தடைகள் காணப்படுகின்றன.

சில விவசாயிகள் தமது வயல்களில் பயிர்கள் அழிவடைந்த பகுதிகளுக்கு நெல்லை முளைகட்டி விதைப்பதையும் காண முடிகின்றது.

இதேவேளை அநேகமான விவசாயிகள் தமது பயிர்களைக் காப்புறுதி செய்யாமையால் பயிர் நட்டத்தைக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற முடியாத நிலையிலுள்ளனர்.

காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தப்படாமையே இதற்கான பிரதான காரணமெனக் கூறப்படுகின்றது.

இதேவேளைகிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 58 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# கொட்டப்படும் கழிவுகளால் சூழல் மாசடையும் அபாயம்

அக்கராயன், நவ.5

கிளிநொச்சிக் குளத்தின் வான்பகுதியில் கொட்டப்படும் கழிவுகளினால் வயல் நிலங்கள் அசுத்தம் அடைவதுடன் நீர்வடிமானமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் சேரும் கழிவுகளை கொட்டும் பகுதியாக நீண்டகாலமாக உமையாள்புரம் பகுதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கழிவுகளை அகற்றும் பணிக்குப் பிரதேச சபை பொறுப்பாக இருக்கின்றது. இருந்த போதிலும் கடந்த சில நாள்களாக கிளிநொச்சிக் குளத்தின் வான்பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு அவை வெள்ளத்துடன் வயல் நிலங்களுக்கு கொண்டு செல்லப்படும் நிலமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கொட்டப்படும் கழிவுகளால் டெங்கு போன்ற தொற்றுநோய்கள் பரவுவதற்கான அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-18)

# நிவாரண உதவியின்றி வேணாவில் மக்கள் அவதி

மீள்குடியமர்ந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் எந்தவித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை என வேணாவில் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மீள்குடிய மர்த்தப்படும் போது வழங்கப்பட்ட நிவாரணப் பொதி தவிர வேறு எவையும் இன்று வரை வழங்கப்படவில்லை என்கின்றனர் இவர்கள்.


புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் இருந்து 204 குடும்பங்களும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களில் 155 குடும்பங்களும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

மிகவும் வறுமைக்கோட்டுக்குள் வாழும் இந்தக் குடும்பங்கள் தற்போது பெய்துவரும் கடும்மழையால் நாளாந்த செயற்பாடுகளுக்கும், உணவைப் பெற்றுக் கொள்வதற்கும் இடர்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இது தொடர்பாக அந்தப்பகுதி கிராம சேவையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் நலன்புரி நிலையங்களில் இருந்து வருகைதந்த 204 குடும்பங்களுக்கு நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்கு வழங்கப்படவில்லை. நிவாரணம் கிடைத்ததும் வழங்கப்படும்- என்றார். (ஐ-400)

# மக்களுக்கு பயன்தராத மாங்குளம் பஸ் தரிப்பிடம்



மாங்குளத்தில் அமைந்துள்ள பயணிகள் பஸ் தரிப்பிடம் மக்களுக்குப் பயனில்லாத வகையில் காணப்படுகின்றது.

மாங்குளம் ஒரு மையப் பகுதியாகும். பல்வேறு இடங்களிலிருந்தும் முல்லைத்தீவு, மல்லாவி ஆகிய பிரதேசங்களுக்கு செல்வதற்கும் பயணிகள் இங்கு கூடுகின்றனர். ஆனால் உரிய வகையில் பஸ் தரிப்பிடம் இல்லாமையால் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

மாங்குளம் சந்தியிலிருந்து மேற்குத் திசையில் பஸ் தரிப்பிடம் ஒன்றுள்ளது. அதன் மேல் கூரைக்கு இடப்பட்ட தகரங்கள் கடும் காற்று மழையினால் தூக்கி எறியப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனால் மழை பெய்யும் போது பயணிகள் ஒதுங்குவதற்கு இடமில்லாது தவிக்கின்றனர். அத்துடன் கடைகளின் ஓரங்களிலும் மரநிழலின் கீழும் தங்கிய பின்னர் தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

அத்துடன் முல்லைத்தீவு செல்லும் பயணிகளும் பஸ் தரிப்பிடமில்லாமையால் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க- 415)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

புதுக்குடியிருப்பு, நவ.5

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆறு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 3 ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு 7 ஆயிரத்து 600 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

'திவிநெகும' திட்டத்தின் கீழ் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தத் தென்னங்கன்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, மந்துவில், இரணைப்பாலை மற்றும் கோம்பாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு தலா இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கச்சான் பயிரிடும் குடும்பங்களுக்கு விதைக் கச்சானும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு விவசாயிக்கும் பயிர் செய்யும் நிலப்பரப்புக்கேற்ப 10 கிலோ வீதம் விதைக் கச்சான் வழங்கப்படுகின்றது. (ஐ-400)

## வாழ்வாதார உதவி

புதுக்குடியிருப்பு, நவ.5

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 45 குடும்பங்களுக்கு 'சோஆ' நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கான இந்த உதவித் திட்டத்தில் தொழில் சார் உபகரணங்களும் வீட்டுப்பாவனைப் பொருள்களும் வழங்கப்பட்டன. (ஐ-400)

# கால்நடைகள் கட்டுப்படுத்தப்படாமையால் பெரும்போக நெற்செய்கை பாதிப்பு

அக்கராயன், நவ. 5

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கட்டுப்பாடுகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக் குழுக்கூட்டத்தில் இதுதொடர்பாக முடிவு எடுக்கப்பட்டும் இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் நகரப் பகுதி உட்பட கமநல சேவைப் பிரிவுகளிலும் கால்நடைக் கட்டுப்பாடு இறுக்கமாக இல்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வயல்களுக்குள் நுழையும் கால்நடைகள் நெற்பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

கால்நடை வளர்ப்பவர்களும், பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதேவேளை கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரவைகள் சில இடங்களில் இல்லாததாலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்தி பயிரழிவுகளைத் தடுக்க கமநல சேவை நிலையங்கள், கமக்கார அமைப்புகள் அக்கறை காட்ட வேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுள்ளனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாணசபை தேர்தலுக்கான

# அரசு–மு.கா. ஒப்பந்த இரகசியம் ஜனாதிபதித் தேர்தல் வரை கசியாது

### இருதரப்பு முக்கிய பேச்சு 9 இல்

மட்டக்களப்பு, நவ.5

கிழக்கு மாகாணசபை ஆட்சியமைப்பதற்காக அரசும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் செய்து கொண்ட இரகசிய இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்காக எதிர்வரும் 9ஆம் திகதி இரு தரப்புக்கு மிடையில் முக்கிய பேச் சொன்று இடம்பெறவுள்ளது. இருதரப்பும் செய்துகொண்ட இந்த இணக்கப்பாட்டு ஒப் பந்தம் இதுவரை காலமும் மக்களுக்குப் பகிரங்கப் படுத்தப்படவில்லை. இந்த நிலையில் கட்சிக்குள் ஏற்பட் டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக அடுத்த ஜனாதி பதித் தேர்தல்வரை இந்த ஒப்பந்தம் தொடர்பான தக வல்கள் கசியவிடப்படமாட் டாது எனத் தெரியவருகின் றது. இந்தத் தகவலை உறுதி செய்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸின் செயலாளர் ஹஸனலி யுடன், நாம் தொடர்புகளை மேற்கொண்டபோதும், அவை பயனளிக்கவில்லை.

அரசுக்கும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள மேற் படி முக்கிய பேச்சில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட கட்சியின் பிரதி நிதிகள் குழு கலந்து கொள் ளும்.

> அரசுக்கும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெற வுள்ள மேற் படி முக்கிய பேச்சில், ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கி ரஸ் சார்பில் அதன் தலைவர் அமைச் சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட கட்சியின் பிரதி நிதிகள் குழு கலந்து கொள்ளும்.

ஆளும்தரப்பு சார்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிரி சேன, ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, பொருளா தாரப் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த் தன உள்ளிட்டோர் கலந்து கொள்வர்.

கிழக்கு மாகாண ஆட் சியை அமைப்பதற்கு அர சுக்கு ஆதரவு வழங்குவதற் காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசுடன் செய்து கொண்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு உறுதி யளித்துள்ளதால், அதனை நடைமுறைப்படுத்துவதற் கான காலம் தற்போது உரு வாகியுள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனடிப் படையில்தான் இரு தரப்பு பேச்சு இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந் துள்ளன. இந்தநிலையில், குறித்த ஒப்பந்தம் தொடர் பில் முஸ்லிம் காங்கிரஸ் நாட்டு மக்களுக்கு தெரியப் படுத்தாத நிலையில், கட் சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக் கடி நிலைமையின் காரண மாக இந்த இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை இரகசியமாகப் பாதுகாப்ப தற்கு அது நடவடிக்கை களை மேற்கொண்டு வரு கின்றது.

(ச-சி)

## இரத்தம் சிந்தி திருடிய கள்வன்



மட்டக்களப்பு புதிய காத் தான்குடியில் அமைந் துள்ள வீடொன்றில் திரு டன் இரத்தம் சிந்தி திருடிய விசித்திர சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு காத்தான்குடி விடுதி வீதி, 6ஆம் ஒழுங்கை யில் அமைந்துள்ள வீடொன் றில் நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த ஓட்டோவின் பற்றரி திருடர்களினால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுக்குத் திருட வந்த திருடனின் காலில் இருந்து அதிகமான இரத்தம் வெளியேறியுள்ள தால், திருடன் நடமாடிய, எல்லா இடங்களிலும் அதி கமான இரத்தக் கறைகள் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர் பில் காத்தான்குடிப் பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்ட தையடுத்து, குறித்த திரு டனை கண்டுபிடிக்க காத் தான்குடிப் பொலிஸாரினால் மோப்ப நாய்கள் வரவழைக் கப்பட்டு சோதனையிடப் பட்டது. (ச)

# பதவி உயர்வுகள் பெறுவதில் தாமதம்

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விசனம்

மட்டக்களப்பு,நவ.5

கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட திணைக்களப் பரீட்சையின் பின் இது வரைக்கும் திணைக்களப் பரீட்சை நடத்தப்பட்டாமையினால் பதவி உயர்வு பெறுவதில் தாமதம் ஏற்படுவதாகத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக, 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட திணைக் களப் பரீட்சையில் அளவையிடுதலும், மட்டுப்படுத்த லும் பரீட்சையில் சித்தியடைந்தவர் களுக் கான செய்முறைப் பரீட்சை நடத்தப் படாமையால் பதவி உயர்வில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

> 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட திணைக் களப் பரீட்சையில் அளவையிடுதலும், மட்டுப்படுத்தலும் பரீட்சையில் சித்திய டைந்தவர்களுக்கான செய்முறைப் பரீட்சை நடத்தப்படாமையால் பதவி உயர்வில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, 2010 ஆம் ஆண்டில் மத்திய அரசால் நடத்தப்பட்ட திணைக் களப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் பதவியுயர்வு பெற மாகாண சபையால் கட்டாயமாக்கப்பட்ட 'திணைக்கள ஒழுங்கு விதி பிரமாணங்கள்' எனும் பாடம் சித்தியடைய வேண்டியுள்ளது.

இப்பாடத்துக்கான பரீட்சை 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்னும் நடத்தப் படவில்லை.

எனவே, தொழில்நுட்ப உத்தியோகத் தர்கள் பதவி உயர்வு பெறுவதற்குத்தேவை யாக உள்ள மேற்கூறப்பட்ட பாடங்க ளுக்கான பரீட்சையை கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு நடத்த வேண்டும்.- என்றனர். (ச)

# சட்டவிரோத ஆயுதத்தை கையளித்தால் சன்மானம்

### மட்டு.நகரில் துண்டுப் பிரசுரம்

எருவில்,நவ.5

மட்டக்களப்பில் சட்ட விரோத ஆயுதங்களை கைய ளிக்குமாறும், அதற்கு சன் மானம் வழங்கப்படும் என்றும் தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத் தில் ஆயுதங்களை வைத்தி ருப்போர் அல்லது ஆயுதங் களை தமது வதிவிடங்களில் கண்டோர், அது குறித்து அரு கிலுள்ள படை முகாம்களிலோ அல்லது பொலிஸ் நிலையங் களிலோ தெரியப்படுத்தி சன் மானத்தைப் பெற்றுச் செல்லு மாறு துண்டுப் பிரசுரங்கள் ஒட் டப்பட்டுள்ளன.மட்டக்களப்பு நகரின் பல்வேறு இடங்களில் இந்த துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.



துப்பாக்கிகளையோ, துப் பாக்கிகளின் உதிரிப்பாகங் களையோ,வெடிபொருள்களையோ வைத்திருப்பது சட்டவிரோத மாகும். அவ்வாறானவர்களை கண்டுபிடித்தால் பிணையில் வரமுடியாத தடுப்புக்காவல் வழங்கப்படும்.

ஆகவே நீங்கள் கண்டெ டுத்த துப்பாக்கிகளோ, அல்லது ஏதேனும் ஆயுத உபகர ணங் கள் உங்கள் வசம் இருந்தால் அருகில் உள்ள பாதுகாப்பு படைமுகாமுக்கோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ தெரியப்படுத்தி அதற்குரிய வெகுமதிகளை பெற்றுச் செல் லுங்கள்.

ஆயுதங்கள் தொடர்பிலான தகவல்கள் வழங்கினால் அவற்றை பாதுகாப்புப்படை யினர் கவனமாக அகற்றுவர் என்று துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கண் டெடுக்கும் ஆயு தங்களுக்கான வெகுமதித் தொகைகள் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் அதில் காணப்படுகின்றன.

இந்த துண்டுப்பிரசுரம் யாரால் வெளியிடப்பட்டது. யார் இதற்கு உரிமை கோருகின்றனர் என்ற எந்தவித விளக் கங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-31)

## அரிசி மலை கடற்கரை...



கிழக்கில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் இடமாக திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டையிலுள்ள அரிசி மலை கடற்கரை பிரதேசம் மாறிவரு கின்றது. (ச)

## நூதனசாலை நிர்மாணப் பணியை பார்வையிட்டார் ஹிஸ்புல்லா

மட்டக்களப்பு,நவ.5

மட்டக்களப்பு மாவட்டத் தின் காத்தான்குடியில் அமை யவுள்ள இலங்கையில் முத லாவது இஸ்லாமிய நூதன சாலைக்கான கட்டட நிர் மாண வேலைகளை பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக்கும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பார்வையிட்டனர்.



பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் முயற்சியால் இஸ்லாமிய நூதனசாலைக் கட்டடம் ஒரு கோடி ரூபா செலவில் நிர் மாணிக்கப்படுகின்றது. இந்த நூதனசாலைக்கான கட்டட நிர்மாண வேலைகளை துரித மாக மேற்கொள்ளுமாறு அதி காரிகளுக்கு பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா உத்தர விட்டுள்ளார்.

இஸ்லாமிய நூதனசாலை யில் வைப்பதற்காக 1920ஆம் ஆண்டு காத்தான்குடி பிர தேசத்தில் நடைபெற்ற திருமணத்தின்போது, மணப் பெண் பாவித்த சாறியும் மணமகன் அணிந்த தொப்பி யும் பாத்திரமும் பிரதி அமைச் சரிடம் றஹீம் ஆசிரியர் என் பவர் வழங்கியமை குறிப் பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளம் உடைப்பெடுத்ததால் விவசாயத்துக்கு பாதிப்பு

துணுக்காய், நவ.5

பாண்டியன்குளம் பிரதேசத்திலுள்ள குளத்தின் அணைக்கட்டில் உடைப்பு ஏற்பட்டு நீர் வெளியேறியதால் தமது விவசாய நடவடிக்கைகளுக்கு எதிர் காலத்தில் பாதிப்பு ஏற்படுமென விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் பகுதியில் மூன்று முறிப்பு, கொம்பு வைத்தகுளம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள கணுக்காய் குளத்தின் அணைக்கட்டில் உடைப்பேற்பட்டு நீர் வெளியேறியுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கணுக்காய் குளம் 9 அடி உயரத்துக்கு நீரைக் கொள்ளும் திறன் வாய்ந்தது. அண்மையில் பெய்த கன மழையின்போது குளம் நிரம்பியதுடன் அணைக்கட்டிலும் உடைப்பு ஏற்பட்டது. இதனால் நீர் கிராமங்களுக்குள் உட்புகுந்தது. கடந்த 30 ஆம் திகதி நள்ளிரவு வேளையில் இது இடம் பெற்றது.

கடல் அலை போன்று பெரும் சத்தத்துடன் நீர் வெளியே பாய்ந்து கொண்டிருந்தது. உடனடியாக இராணுவத்தின் 612 ஆவது படைப்பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து பிரிகேடியர், சமல் பெரேராவின் கட்டளைக்கு ஏற்ப சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் சம்பிக்க கத்திரி ஆராச்சி தலைமையில் சென்ற இராணுவத்தினர் மக்களை ஓர் இடத்தில் தங்க வைத்தனர். தொடர்ந்து உடைந்த அணைக்கட்டைச் சீர் செய்வதில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். இரவு பகலாக 75 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மண் மூடைகளின் உதவியுடன் வெளியேறிவரும் நீரைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். மறுநாள் குளப்பகுதிக்கு முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிருந்தாகரன் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

மேலும் இராணுவத்தினரால் 5 ஆயிரம் உரப்பைகள் மண்மூடைகளைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் 50 வெற்றுத் தார் பீப்பாக்களை மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.தனிநாயகம் வழங்கியுள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் ம.தயானந்தனும் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

உடைப்பெடுத்த குளத்தின் மூலமாக 100 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்ச முடியுமென்பது குறிப்பிடத்தக்கது. (க-415)


**காணி, வீடு விற்பனைக்கு**

நாவலர் வீதி, பாப்பையா கடைச்சந்திக்கு அருகில்
100m தூரத்தில் மருதடி லேனில்
வேலைமுடியாத நிலையில் உள்ள வீடு
சுற்று மதில், கிணறு என்பவற்றுடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 0646218

(25080)(6-7-8)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற விவசாய விரிவாக்கல் அலுவலகர்)



கைதடி வடக்கு கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகரத்தினம் கடந்த (02.11. 2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரசுவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் நவரத்தினம், செல்வராசா, சபாபதிப்பிள்ளை, தவமணிதேவி, செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சயந்தன், மாலதி, சேந்தன், வினோதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்திமதி, ஜெயபார்தன், சசிதேவி, ஷாலினி ஆகியோரின் மாமனும், துலக்சிகா, ஜெனோசா, விதுசன், அரவிந்த், அனுராம், மதுரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2012) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் கைதடி வடக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கைதடி வடக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

(சி/4558)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# லொறி தடம் புரண்டதால் போக்குவரத்தில் தடைகள்

கிளிநொச்சி முரசுமோட்டை ஏ-35 வீதியில் உரம் ஏற்றிச் சென்ற லொறியொன்று தடம்புரண்டதில் ஏ-35 வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியின் முரசுமோட்டை ஞானவைரவர் ஆலயத்தை அண்மித்த பன்னங்கண்டிப் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த உடையார் கட்டு கமநல சேவை நிலையத்துக்கு உரம் ஏற்றிச் சென்ற லொறியொன்று நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் பாலம் உடைந்து வீழ்ந்ததால் தடம் புரண்டது. சாரதி மயிரிழையில் உயிர் தப்பிக் கொண்டார்.

குறித்த சம்பவம் இடம்பெற்றதையடுத்து ஏ-35 வீதியின் போக்குவரத்துக்கள் முரசுமோட்டை 3 ஆம் கட்டைச் சந்தி ஊரியான் 3 ஆம் யுனிற் ஊடாக மாற்றப்பட்ட போதும் 3 ஆம் யுனிற் கிராமிய வீதி சேதமடைந்ததைத் தொடர்ந்து குறித்த வீதியின் போக்குவரத்து நிறுத்தப்பட்டு சிறிய ரக வாகனங்கள், அம்புலன்ஸ் என்பவற்றுக்கே போக்குவரத்து அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் நிலைய வாகன போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்ணீர் அஞ்சலி — சிவானந்தன்



முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தின் பழைய மாணவரும், தென்மராட்சி கல்வி வலயத்தின் முன்னாள் கல்விப்பணிப்பாளருமாகிய சிவானந்தன் அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (25087)(9.14)

யா/கோவிலாக்கண்டி ம.அ.சங்கத்தினர் அதிபர்,
மகாலட்சுமி வித்தியாலயம் ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி ஸ்ரீபிரியா கிறிஸ்ரி நிரஞ்சன் அவர்களின் அன்புத்தாய்

**திருமதி சிறீஸ்கந்தராஜா**

**அன்னம்மா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(25083)(8-14)

கிராம உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா சிறீஸ்கந்தராஜா



மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், இல.36, புனித ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கை, வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சிறீஸ்கந்தராஜா நேற்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சிறீஸ்கந்தராஜாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜோசேப்பு - கைராசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பு மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், சிவகுணம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான போல் இராசையா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீபிரியா (பட்டதாரி பயிலுநர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ரவிசங்கர் மற்றும் தற்சுதன் (அன்ரன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யேக்கப் கிறிஸ்ரி நிரஞ்சனின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை , முல்லைத்தீவு) அன்பு மாமியும், டெலின் நெவின்சியா, ஷெரின் நிவேத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2012) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி ஆராதனையின் பின்னர் யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.36, புனித ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (25086)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை

### திருமதி கனகம்மா கந்தசாமி



கடந்த 01.11.2012 இறைவனடி சேர்ந்த நியூராம் கென்ஸ்ரக்ஸன் உரிமையாளர் கே.பற்குணராஜா அவர்களின் அன்புத்தாயார் திருமதி கனகம்மா கந்தசாமி அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அம்பாள் மரக்காலை, 261, பருத்தித்துறை வீதி, வீரகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.**


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி



யாழ். போதனா
வைத்தியசாலையில் கால்
நூற்றாண்டுக்கும் மேல் அரிய
சேவையாற்றி ஓய்வுபெற்ற காது,
மூக்கு, தொண்டை சத்திர
சிகிச்சை நிபுணர்

***சின்னத்தம்பி***
***சிவசுப்பிரமணியம்***

அவர்களின் மறைவு குறித்து
மனநெகிழ்ந்து
துயர்பகிர்கின்றோம். மேலும்,
அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் உறவுகளுக்கும்
உற்றவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.

காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை.

(25081)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குடாநாட்டு தனியார் விடுதிகளின் கட்டணங்கள் திடீரென அதிகரிப்பு

வலி.வடக்கு,நவ.5

அண்மைக் காலமாக குடாநாட்டுக்கு வரும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. இதனைப் பயன்படுத்தி பல தனியார் விடுதிகள் தம்முடைய வாடகைக் கட்டணங்களை பல மடங்கு உயர்த்தியுள்ளதாகக்குறை கூறப்படுகின்றது.

கடந்த மாத இறுதியில் தொடர்ந்து மூன்று தினங்கள் விடுமுறை என்பதால் அதன்போது அதிகளவான தென்னிலங்கைப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். அதன் பின்னரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றது. இதனைப் பயன்படுத்தி தம்முடைய விடுதி வாடகையை தனியார் விடுதிகள் உயர்த்திவிட்டன.

இதன் பிரகாரம் பஸ் ஒன்றில் வரும் பயணிகள் அனைவரும் ஒரு நாள் தங்கிச் செல்ல 3 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரைஅறவிட்டு வந்த தனியார் விடுதிகள், திடீரென பத்தாயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை தமது கட்டணத்தை உயர்த்தியுள்ளன. இவ்வாறு திடீரென தனியார் விடுதிக் கட்டணங்கள் உயர்வடைந்ததால் சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். (ஙு-86)



இணுவில் பொது நூலகத்தினரால் பாடசாலைகள், பொது இடங்கள் என்பவற்றில் ''வாசிப்பால் நாம் உயர்வோம்'' எனும் தெருவெளி ஆற்றுகை பரவலாக அளிக்கை செய்யப்பட்டு வருகிறது. வாசிப்பின் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் அடைவுகளையும் நகைச்சுவையோடு வெளிப்படுத்தும் இந்த ஆற்றுகையை அரங்கேற்ற விரும்பும் பாடசாலைகள், பொது நிறுவனங்கள் என்பன இணுவில் பொது நூலக நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஙு)

# வெள்ளத்தால் பயிர்கள் அழியும் நிலை

தென்மராட்சி, நவ.5

வரணி பகுதியில் உள்ள வயல்களில் வெள்ளம் வழிந்தோட முடியாததால் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்போக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

ஆரம்பத்தில் புழுதி விதைப்பு மேற்கொண்ட விவசாயிகள் மழை பெய்யவில்லையே என்று ஏங்கினர் ஆனால் இப்போது கடும் மழை கொட்டித் தீர்த்ததால் வரணிப் பகுதியில் உள்ள வயல்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. இதனால் அந்தப் பகுதியில் உள்ள நெற்பயிர்கள் யாவும் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் மழைகாலத்துக்கு முன்னர் வாய்க்கால்களை புனரமைக்குமாறு விவசாயிகள் கோரியிருந்தனர். ஆனால் அவ்வாறு வாய்க்கால்கள் புனரமைக்கப்படவில்லை. அதனால் வயல்களில் தேங்கியுள்ள வெள்ளம் வழிந்தோட முடியவில்லை. இதனாலேயே வயல்களில் மழை நின்றும் வெள்ளம் வற்றவில்லை.

இவ்வாறு தொடர்ந்தும் வெள்ளம் வயல்களில் தேங்கி நிற்பதால் பெரும்போக நெற்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ஙு-9)

### யாழ். பொலிஸ் நிலையங்களில்

# தமிழ்ப் பொலிஸார் இல்லையா? உடனடியாக முறைப்பாடு செய்க

**பொலிஸ் நிலையங்களில் 24 மணி நேரமும் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் கடமையில் இருத்தல் வேண்டும். இது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமான விடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**



யாழ்ப்பாணம், நவ.5

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் செல்லும் போது அங்கு தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் கடமை புரியவில்லை என்றால்,அது குறித்து உடனடியாக மக்கள் முறைப்பாடு செய்ய முடியும். இத்தகைய முறைப்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு, நீதிமன்றம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு ஆகியவற்றில் பதிவு செய்ய முடியும். இதன் மூலம் குறித்த பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த பொலிஸாரை பணியமர்த்த வாய்ப்பு ஏற்படும். - இவ்வாறு தெரிவித்தார் சிரேஷ்ட சட்டத்தரணி புஞ்சிஹேவா.

அண்மையில் யாழ்ப்பாணம் தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் நடத்தப்பட்ட மொழிப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் நிலையங்களில் 24 மணி நேரமும் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் கடமையில் இருத்தல் வேண்டும். இது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானவிடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவிர தமிழ்ப் பகுதிகளில் ஆகக்குறைந்தது தமிழ் மொழி தெரிந்த ஒரு பொலிஸாராவது இருக்க வேண்டும் என்பது அரசின் பணிப்புரை. இதற்கமைவாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொது மக்கள் முறைப்பாடு செய்யச் செல்லும் போது அங்கு தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாது விடின் அது அப்பட்டமான மனித உரிமை மீறல் தான். ஏனெனில் குறித்த நபர் தனது தாய் மொழியில் முறைப்பாட்டை செய்ய முடியாத நிலையால் அவரது மொழி உரிமை அங்கு மீறப்பட்டுள்ளது.

எனவே உடனடியாகவே சம்பந்தப்பட்ட நபர் இது தொடர்பாக குறித்த பொலிஸ் நிலையம், முறைப்பாடு செய்யச் சென்ற திகதி, முறைப்பாட்டு இலக்கம் தொடர்பான தகவல்களை அரச கரும மொழிகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, உயர்நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் முறையிட முடியும்.

வடக்கு கிழக்கில் உள்ள பல பிரதேசங்களில், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் செல்லும் மக்கள் மொழி தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளை இப்போதும் எதிர்கொள்கிறார்கள். ஆனால் இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தெரியப்படுத்துவதில்லை. இதன் காரணமாகவே இத்தகைய பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன - என்றார். (ஙு-14)

# நல்லூரில் திடீரென இடிந்தது மாடி

திடீரென மாடிக் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததால் மக்கள் பெரும் அச்சமுற்றனர். இந்தச் சம்பவம் அண்மையில் நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது-

குறித்த மாடிக் கட்டடத்தின் கீழ்ப்பக்கமாகவுள்ள கடை ஒன்றில் இளைஞர்கள் சிலர் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அந்தக் கட்டடத்தின் மேல்மாடி அறையின் முன் பக்கம் பலத்த சத்தத்துடன் உடைந்து கீழே வீழ்ந்தது.

விமானத் தாக்குதல் நடந்தது போல பொலு பொலுவென கட்டடத்தின் கூரைகள், மரங்கள், கற்கள் எல்லாம் கீழே சரிந்தன. நல்ல வேளையாக இளைஞர்கள் சத்தம் கேட்டவுடனேயே அங்கிருந்து ஓடிவிட்டதால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த சத்தம் பெரிதாக எழுந்ததால் நல்லூர் ஆலயச் சூழலை அண்டியுள்ள மக்கள் ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டதாகக் கருதி அங்கு கூடினர். பின்னரே அவர்களுக்கு கட்டடம் தானாக இடிந்து வீழ்ந்த விடயம் தெரிய வந்தது. (ஙு-288)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் அபிவிருத்திக்கென நேசன் லங்கா பினான்ஸ், நிதி உதவி செய்துள்ளது. யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத்தின் செயலாளர் வரதராஜா, சங்கத்தின் மூத்த உறுப்பினர் சிவா ஆகியோரிடம் மேற்படி நிதியை, நேசன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தின் சுன்னாகக் கிளை முகாமையாளர் எஸ்.அஞ்சலோ வழங்கினார். இந்த நிகழ்வில் குறித்த நிறுவனத்தின் நெல்லியடி கிளை முகாமையாளர் இ.இராஜேஸ், சுன்னாகம் கிளை உதவி முகாமையாளர் ரி. நிருபன், நிறைவேற்று உத்தியோகத்தர்களான கு.சாந்தரூபன், இ.கஜனன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஙு-288)

# இளைஞனுக்கு இரங்கியவர் இழந்தார் மோதிரத்தை

தனக்கு மதுபானத்தை வாங்கித் தந்தவரின் மோதிரத்தையே இளைஞர் ஒருவர் 'அபேஸ்' செய்த சம்பவம் ஒன்று அண்மையில் கைதடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

கைதடியைச் சேர்ந்த 'குடிமகன்' ஒருவர் வழமை போன்று மதுபானசாலைக்குச் சென்றுள்ளார். அப்போது அங்கு மறைவில் நின்ற இளைஞர் ஒருவர், இவரை அழைத்தார். '' எனக்கு தெரிந்த ஆள்கள் மதுபானச் சாலைக்கு அருகில் நிற்கின்றார்கள். எனவே நான் மதுபானத்தை வாங்கினால் வீட்டிலே சொல்லிவிடுவார்கள் எனக்கு போகப் பயமாக இருக்கிறது. எனவே எனக்கும் மதுபானத்தை நீங்கள் வாங்கித் தரமுடியுமா?'' என்று கெஞ்சிய அந்த இளைஞர் மதுபானம் வாங்க பணத்தை கொடுத்தார். மனம் இரங்கிய குடிமகனும் மதுபானத்தை வாங்கி வந்து இளைஞரிடம் கொடுத்தார்.

[illegible] அந்த இளைஞர், ''நீங்களும் வாங்கோ. [illegible]'' என்றார். முதலில் குடிமகன் மறுத்த போதும், பின்னர் இளைஞனின் அன்புத் தொல்லைக்காக சிறிதளவு மதுவை வாங்கிக் குடித்தார். அவ்வளவுதான். சில கணங்களில் குடிமகன் மயங்கி விழுந்து விட்டார்.

கணவரைக் காணததால் அவரைத் தேடிய, மனைவியும், பிள்ளைகளும் மறுநாள் அதிகாலை மதுபானச் சாலைக்கு பின்பக்கமாக மயங்கிய நிலையிலேயே அவரைக் கண்டு வீட்டுக்கு தூக்கி சென்றார்கள். மயக்கம் தெளிந்த பின்னரே தன்னுடைய 60 ஆயிரம் பெறுமதியான மோதிரம் பறிபோன விடயம் அவருக்குத் தெரியவந்தது.

இது குறித்து சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் தென்பகுதி இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தான் திருடிய மோதிரத்தை தென்பகுதியிலுள்ள வங்கி ஒன்றில் அடைவு வைத்துள்ளதாகக் குறித்த சந்தேக நபர் ஒப்புக் கொண்டுள்ளார். பொலிஸார் தொடர்ந்தும் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ஙு-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் ஐ.நா. வின் தற்போதைய செயற்பாடுகள்

## பாதுகாப்புப் பேரவையின் புதிய தலைவர் சொல்கிறார்

நியூயோர்க்,நவ.5

தற்போதைய உலக நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பாது காப்புப் பேரவை இல்லை. தற்போதைய அமைப்பால் எவருக்கும் பயனில்லை. நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் அந்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது என்று இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

பாதுகாப்புப் பேரவைத் தலைவரின் பதவி சுழற்சி முறையில் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படும். அதன்படி இந்த முறை தலைவர் பதவியை இந்தியா சார்பில் ஐ.நாவுக்கான நிரந்தர இந்தியத் தூதர் ஹர்தீப் சிங்பூரி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ள ஹர்தீப்சிங் பூரி, அங்கு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய ஐ.நா. பாதுகாப்புப் பேரவையானது, சிரியா போன்ற பிரச்சினைகளில் நில ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பிளவுபட்டிருக்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புப் பேரவை திறம்படச் செயற்பட வேண்டும் என்றால் அது விரிவுபடுத்தப்பட்டு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் இருந்து மேலும் சில நாடுகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

தற்போதைய அமைப்பால் யாருக்கும் எந்தவித பலனும் இல்லை. ஐ.நா. பாதுகாப்புப் பேரவை நிரந்தர உறுப்பினர் நாடுகளுக்கான வீட்டோ அதிகாரம் தொடர்ந்து வழங்கப்படும் பட்சத்தில் அதுகுறித்த முழுமையான விவாதம் தேவை - என்றார்.

# ஜனநாயகத்தை பலவீனப்படுத்த முயலும் எதிர்க்கட்சியை வெற்றிபெற விடமாட்டோம்

## சோனியா சூளுரை

டில்லி, நவ.5

ஜனநாயகத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கும் எதிர்க் கட்சிகளை வெற்றிபெற விடமாட்டோம்என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா தெரிவித்தார். டில்லியில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அங்கு கூடியுள்ள ஏராளமான தொண்டர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். எமது கட்சி அதிகமான சிறந்த தலைவர்களை வழங்கியுள்ளது. நாம் மதசார்பின்மையைக் கடைப்பிடிக்கிறோம். இதில் யாரும் எமக்குச் சமமானவர்கள் அல்லர். காங்கிரஸ் கட்சி செய்த சாதனைகளை ஏற்றுக்கொள்ள பலர் மறுக்கின்றனர். எதிர்க்கட்சிகள் தொடர்ந்து நாடாளுமன்றத்தை முடக்குகின்றன. அவர்கள் விவாதத்துக்கு வர தயங்குகின்றனர். எதிர்க்கட்சியினர் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் அவர்கள் தொடர்ந்து தவறான குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின் றனர். எதிர்க்கட்சியினர் ஜனநாயகத்தைத் தோற்கடிக்க முயற்சி செய்கின்றனர். அவர்களை வெற்றிபெற மாட்டோம். ஊழல் குறித்து பேசு பவர்கள் ஊழல் வாதிகளாக உள்ளனர். -என்றார்.

# 4 ஆவது உலக தெலுங்கு மாநாடு டிசெம்பர் 27 இல் திருப்பதியில்

## ஆரம்பித்து வைக்கிறார் பிரணாப்



திருப்பதி, நவ.5

திருப்பதியில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 3 நாள் நடைபெறவுள்ள 4ஆவது உலக தெலுங்கு மாநாட்டை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

திருப்பதியில் ஆந்திர மாநில கலைத் துறை இயக்குநர் பிரசாத் நேற்று முன்தினம் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டியின் போது மேலும் தெரிவித் ததாவது:-

திருப்பதியில் எதிர்வரும் வரும் டிசெம்பர் 27, 28, 29 ஆகிய திகதிகளில் 4 ஆவது உலக தெலுங்கு மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டுக்கு ஆந்திர அரசு 25 கோடி ரூபா ஒதுக்கி உள்ளது. குறித்த மாநாடு திருப்பதி அடுத்த அவிலாலா ஊராட்சி ராஜீவ் நகர் பகுதியில் நடைபெறவுள்ளது. இதற்காக 90 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள் ளது. இதில் 6 அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. 1975ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் முதலாவது மாநாடு நடை பெற்றது. அதைத் தொடர்ந்து 1980 இல் 2ஆவது மாநாடு கோலாலம்பூரிலும், 1990 இல் மொரீசியஸ் நாட்டில் 3 ஆவது மாநாடும் நடை பெற்றன. இந்தநிலையில், 4 ஆவது மாநாடு 1995 இல் தென்னாபிரிக்காவில் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் அது பல்வேறு காரணங்களால் ரத்தானது. இதனையடுத்து 22 ஆண்டுகளின் பின்னர் தற்போது திருப்பதியில் மாநாடு நடத்தப்பட உள்ளது. வெளிநாட்டில் வசித்துவரும் தெலுங்கு மொழி பேசுபவர்களில் 292 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முன்பதிவு செய்துள்ளனர்-ஏன்றார்.



டில்லியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கிய டில்லி முதல்வர் ஷீலா தீட்சித்.

# ஐ.எஸ்.ஐ .உளவாளி குஜராத்தில் கைது

குஜராத்,நவ.5


குஜராத் மாநிலத்தில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யுடன் தொடர்புடைய உளவாளியை பொலிஸார் கைது செய்தனர்.

நௌசாத் அலி என்ற பெயருடைய அவரை அகமதாபாத் நகரில் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலில் பேரில் குற்றப் பிரிவுப் பொலிஸ் உதவி ஆணையாளர் ஷர்மா தலை மையில் பொலிஸார் கைது செய்து விசாரித்தனர். அதன்போது ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரைச் சேர்ந்தவர் என்று குறித்த உள வாளி கூறினார்.

அவர் நாட்டுக்கு எதிரான பல்வேறு சதிச் செயல்களில் ஈடுபட்டு வந்தது தெரிய வந்தது.

# இரட்டைச் சகோதரிகளை பிரித்தால் ஒருவரின் உயிருக்கு ஆபத்து

## இந்திய மருத்துவ ஆலோசனைக்குழு



பீகார் மாநிலம் பாட் னாவைச் சேர்ந்த தலை ஒட்டிப்பிறந்த இரட்டைச் சகோதரிகளான சபா, பராவை பிரித்தால் உயி ருக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்திய மருத்துவ ஆலோசனைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். ஆரம்பத்தில் இவர்களை தனித் தனியாகப் பிரிக்க முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் கே.எஸ். ராதாகிருஷ்ணன் தீபக்மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

அப்போது மேற்படி சகோதரிகளை தனியாகப் பிரித் தால் பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யும் படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டனர்.

இதையடுத்து, அகில இந்திய மருத்துவ ஆலோசனைக்குழு மருத்துவம னையின் நரம்பியல் மருத்துவர்கள், பேராசிரியர்களான எம்.வி. பத்மா, அரவிந்த் சதுர்வேதி, டொக்டர் எஸ்.எஸ்.காலே ஆகிய 3 பேர் அடங்கிய குழு கடந்த மாதம் கடந்த 21 ஆம் திகதி பாட்னா சென்றனர்.

தலை ஒட்டிப்பிறந்த சகோதரிகளை பரிசோதனை செய்தனர். இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதில் இருவரையும் பிரித்தால் அவர்களில் ஒருவர் உயிரிழப்பது நிச்சயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் சகோதரிகளின் உடல் இரண்டாக இருந்தாலும் அவர்களில் ஒருவருக்குத்தான் சிறுநீரகம் உள்ளது. இருவரது மூளைக்கும் பொதுவான ஒரே ஒருபெரிய இரத்தக் குழாய் மட்டுமே செல்கிறது. எனவே இவர்களை பிரித்தால் ஒருவர் நிச்சயம் உயிரிழப்பார். அதே நேரத்தில் உயிர் பிழைப்பவரின் நிலைமையும் கவலைக்கி டமாகும்.

எனவே அவர்களை தனியாகப் பிரிப்பது சரியல்ல. மேலும் இதற்கு அவர்களது பெற்றோரும், சகோதரரும் ஒப்புக் கொள்ளவில்லை.

மாறாக இவர்களின் உடல் நலனைப் பராமரிக்க பீகார் அரசு மாதந்தோறும் உதவி தொகை வழங்க வேண்டும் என்று அவர்களது குடும்பத்தினர் கோரியுள்ளனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேவர் குருபூசையில் கலந்துகொண்டோர் மீது பெற்றோல் குண்டு வீச்சு

## 3 பேர் சாவு

மதுரை, நவ.5

பசும்பொன் முத்து ராமலிங்கதேவரின் குருபூசையில் கலந்து கொண்டு திரும்பியோர் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதில் மாணவர் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். மதுரை மாவட்டம் சிந்தாமணி அருகே உள்ள புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த 20 பேர் பசும் பொன்னில் உள்ள தேவர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி விட்டு ஊர் திரும்பிக்கொண்டிருந்தனர்.

அப்போது மதுரை சிந்தாமணி அருகே ஒரு கும்பல் அவர்களது வாகனத்தை வழிமறித்து அடுத்தடுத்து பெற்றோல் குண்டுகளை வீசியது. இதில் 20 பேரும் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் படுகாயமடைந்த 20 பேரில் மூவர் நேற்றுக் காலை உயிரிழந்தனர். உயிரிழந்தோரில் ஜெயபாண்டி என்பவர் கல்லூரி மாணவர்.

# சிவசேனா தலைவர் பால் தாக்கரே உடல் நிலை கடுமையால் பாதிப்பு



மும்பை,நவ.5

சிவசேனா கட்சித் தலைவர் பால் தாக்கரேவுக்கு உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் வட மாநிலங்களில் வெகு கோலாகலமாக நடக்கும் தசரா விழாவின்போது அரசியல் தலைவர்கள் மக்கள் முன்பு, பண்டிகை கோலாகலத் தைப் பகிர்ந்து கொண்டு, நற்செய்திகள் சொல்லுவார்கள்.

அவ்வாறு வருடாவருடம் மும்பை சிவசேனா கட்சித் தலைவர் பால் தாக்கரே மக்களை சந்தித்து உரையாற்றுவது வழக்கம்.

ஆனால் இந்தமுறை மக்களைத் சந்திக்க முடியாதவாறு பால்தாக்கரே உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் பால்தாக்கரே, காணொலி உரையாடல் மூலம் மக்களைச் சந்தித்து உரையாற்றியிருக்கிறார்.

அப்போது தனது உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், தன்னால் நிற்கவோ, நடக்கவோ முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார். தனக்குப் பின்னர் தன் மகனுக்கும் பேரன் ஆதித்யா தாக்கருக்கும் கூட இதே போன்று, மக்கள் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மும்பையில் பால்தாக்கரே மகன் உத்தவ் தாக்கரே சிவசேனா கட்சிசட்டசபை உறுப்பினர்களுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

# சின்மயியின் முறைப்பாடு தொடர்பாக கைதானவர் வீட்டில் சோதனை

சமூக இணையத் தளங்களான 'டுவிட்டரில்' தன்னைப்பற்றி அவதூறு பரப்பியதாக பாடகி சின்மயி கொடுத்த முறைப்பாட்டில் [illegible] வீட்டில் சோதனை நடந்தது.

பாடகி சின்மயி அளித்த முறைப்பாட்டின்பேரில், சென்னை சைபர் கிரைம் பொலிஸார் அவிநாசியைச் சேர்ந்த ராஜன் என்கிற ராதாமணாளன் என்பவரை கைது செய்தனர். [illegible] அரச அலுவலகத்தில் நகர வளர்ச்சித் துறையில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும் அவர் மீது குற்றவியல் வழக்குப் பதிவு செய்யப்பட்டதால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இந்தநிலையில் கடந்த முதலாம் திகதி அவிநாசி கைகாட்டிப்புதூரில் உள்ள அவரது வீட்டில் சோதனையிட்ட பொலிஸார், மடிக்கணினி, குறுந்தகடுகள், இணையத் தள இணைப் புக்கான மோடம் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு சிரியாவில் உள்ள விமானத்தளம் மீது தாக்குதல்



சிரியாவின் வட பகுதியில் உள்ள வானூர்தித் தளம் ஒன்றைக் குறிவைத்து பெரியளவிலான தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக சிரிய கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரியாவின் இரண்டு முக்கிய நகரங்களான அலெப்போ மற்றும் டமஸ்கஸ் ஆகியவற்றின் கேந்திர பாதுகாப்பு நிலையமாக இந்தத் தளம் அமைந்துள்ளது.

கட்டார் டோஹாவில் எதிர்க்கட்சிகளுக்கிடையே முக்கிய சந்திப்பொன்றை சிரிய அரசு மேற்கொள்ளத் திட்டமிருந்த ஒரு நாளைக்கு முன்னதாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐந்து பிரிவுகளாக ஒரே நேரத்தில் போராளிகள் எறிகணை செலுத்திகள் மோட்டார் குண்டுகள் உட்பட பெரியளவிலான ஆயுதங்களைக் கொண்டு தாக்கும் காட்சிகள் காணொளியாகப் பதிவு செய்யப்பட்டு இணையத்தளங்களில் காட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அலெப்போ நகரத்தின் தென்மேற்கு பிராந்தியத்தில் உள்ள பிரதான வீதி போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாக அதிகளவிலான சிரிய படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்ற இதேவேளை சரியான சேத விவரங்கள் குறித்து இதுவரை எந்தவிதமான தகவல்களும் வெளியாக வில்லை என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

## பாக். சமூக சேவகி மீது துப்பாக்கி சூடு

பாகிஸ்தானின் பிரபல சமூக சேவகி மார்வி சர்மத் மீது மர்ம நபர்கள் திடீர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமை ஆர்வலராக உள்ள மார்வி சர்மத், பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையினரான இந்து, கிறிஸ்தவ மற்றும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் நலனில் அக்கறை செலுத்தி வந்தார்.

இந்தியர்கள் உடுத்துவது போன்று சேலை மற்றும் பொட்டு அணிந்து காட்சியளிக்கும் அவர், இந்தியாவுக்கு ஆதரவானவர் என்ற கருத்து அங்குள்ள பிரிவினைவாதிகளிடம் உண்டு.

இந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு அவர் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது காரில் வந்த மர்ம நபர்கள் அவரது வாகனத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

எனினும் சர்மத் கார் டிரைவர் சாதுர்யமாக செயற்பட்டு காரை வேகமாகச் செலுத்தியதால் சர்மத் உயிர் தப்பினார்.

## மியன்மார் வன்முறைகள் குறித்து மக்கள் சகிப்புத்தன்மையுடன் செயற்பட வேண்டும்

### சூகி கோரிக்கை



மியன்மாரின் மேற்கு பிராந்தியத்தில் இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் இனக் கலவரங்கள் குறித்து மக்கள் சகிப்புத் தன்மையுடனும் சுய கட்டுப்பாட்டுடனும் செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி ஜனநாயக வாதியான ஆங்சாங்சூகி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வன்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்க அவர் மறுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் மியன்மாரில் இடம்பெற்ற வன் முறை காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆராயாமல் எவருக்கும் சாதகமான கருத்துக்களை கூறுவது ஏற்புடையதாக இருக்க முடியாது.

அவ்வாறு கூறும் பட்சத்தில், தமது பதவியை துஷ்பிரயோகம் செய்வதாகி விடும்.

அண்மையில் மியன்மாரில் ஏற்பட்ட மதக்கலவரத்தில் 90 பேர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் பௌத்த மதத்தவர்களும் உள்ளனர்.

எனவே ஒரு சாராருக்கு சாதகமாக பேசுவது அல்லது கருத்துக்களை வெளியிடுவது நல்லதல்ல-என்றார்.

## மூளையே இல்லாமல் 3 வருடம் வாழ்ந்த சிறுவன் உயிரிழப்பு



அமெரிக்காவில் கொலரடோவைச் சேர்ந்த ஒரு தம்பதிக்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு மூளை இல்லாமல் பிறந்த சிறுவன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கொலரடோவைச் சேர்ந்த மேற்படி தம்பதிகளுக்கு பிறந்த குழந்தையின் பெயர் நிகோலஸ் கோக்.

அவனுக்கு தலைப் பகுதியில் மூளை என்ற பாகமே இல்லாமல் இருந்தது.

ஆனால் இவ்வாறு பிறக்கும் குழந்தைகள் பிறந்த ஒரு சில நொடிகளிலேயே மரணித்துவிடும். ஆனால், அந்த விதியை உடைத்து நிகோலஸ் கோக் வாழ்ந்து வந்தான்.

எவ்வித மருத்துவ உபகரணங்களும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அவனது சீரான உடல் இயக்கங்களுக்காக அதிகமான மாத்திரைகளை, உணவை விட அதிகமாகச் சாப்பிட்டு வந்தான்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்ததாக அவனது பாட்டி தெரிவித்துள்ளார்.

அவனுடன் வாழ்ந்த வாழ்க்கை அற்புதமானது. அவன் அன்பு என்றால் என்னவென்பதையும், வாழ்க்கை என்றால் என்ன என்பதையும் கற்றுக் கொடுத்தான் என்று அவனது பாட்டி குறிப்பிட்டுள்ளார்.

உலகில் பிறக்கும் பத்தாயிரம் குழந்தைகளில் ஒருவருக்கு ஏற்படும் குறைபாடு இது என்பது குறிப்பிடத் தக்கது.

## பத்திரிகைகள் மூலம் நோய் அபாயம் பிரிட்டன் சுகாதார மையம் எச்சரிக்கை

மருத்துவமனைகளில் உள்ள பத்திரிகைகளின் மூலம் தொற்று நோய் பரவும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

தனியார் மருத்துவமனையில் மருத்துவர்களை பார்ப்பதற்காக காத்திருக்கும் நேரத்தில் வரவேற்பு அறைகளில் பத்திரிகைகளை வைத்திருப்பார்கள்.

நோயாளிகள் பலரும் அவற்றைத் தொட்டு படிப்பதால், பலருக்கும் நோய் தொற்றும் அபாயம் உள்ளதாக பிரிட்டனின் தேசிய சுகாதார நிலைய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பிரிட்டனின் டோர்செட் மாவட்டத்தில் லைம்ரெஜிஸ் பகுதியில் உள்ள பல் மருத்துவமனை ஒன்றில் கடந்த 2004 ஆம் ஆண்டு வெளியான பத்திரிகைகள் நோயாளிகள் படிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தன.

**பழைய பத்திரிகைகளின் மூலம் பறவைக் காய்ச்சல், பன்றி காய்ச்சல் போன்றவை ஏற்படலாம்.**

இதுபோன்ற பழைய பத்திரிகைகளின் மூலம் பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்றவை ஏற்படலாம்.

எனவே ஒரு வாரத்துக்கு உட்பட்ட பத்திரிகைகளை மட்டுமே வைக்குமாறு மருத்துவமனைக்கு பிரிட்டன் சுகாதார மையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

## வெள்ளத்தில் இருந்து காப்பாற்றும் நிலக்கீழ் சுரங்கம் ஜப்பானில்

ஜப்பானின் டோக்கியோ எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சிறிய அரச கட்டடம் ஒன்றும் பின்புறம் நிலத்துக்குக் கீழ் சுரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள காற்பந்து மைதானம் மற்றும் பனிச் சறுக்குப் பூங்கா ஆகியவற்றின் நிலத்துக்குக் கீழ் மிக ஆழமாக நிலக்கீழ் சுரங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது ஜப்பானிய பொறியியலின் மகத்தான படைப்பாகும்.

மேற்படி சுரங்கம் எதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது என்பது இதை விட ஆச்சரியமான ஒரு விடயமாகும். அதாவது ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் வாழும் சுமார் 13 மில்லியன் மக்களையும் அங்கு வருடாந்தம் ஏற்படும் சைக்கிளோன்புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு என்பவற்றில் இருந்து இந்த சுரங்கம் பாதுகாக்க வல்லது.

சுமார் 4 மைல் ஆழமுள்ள குறித்த சுரங்கம் ஐந்து மாடிக் கட்டம் ஒன்றைவிடப் பல மடங்கு பெரியதாகும். டோக்கியோவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் வெள்ளம் இந்தச் சுரங்கம் வழியே வழிந்து சென்று விடும் வகையில் இது அமைக்கப்பட்டுள் ளது. இந்தப்பணிக்காக போயிங் 737 ரக விமானத்தில் பயன்படுத்தப்படும் ஜெட் எஞ்சினுக்கு சமனான எஞ்சின்கள் மூலம் இயக்கப்படும் 4 டர்பைன்கள் செயற்படுத்தப்படுகின்றன.

## உலகின் பிடித்த விலங்கு புலி: 73 நாடுகளின் மக்கள் தெரிவு

உலகின் மிகவும் பிடித்த விலங்காக 73 நாட்டு மக்கள் இணைந்து புலியைத் தெரிவு செய்துள்ளனர்.

உலகம் முழுவதும் இந்திய இனம், இந்தோசீனா இனம், சுபத்திரன் இனம், சைபீரியஸ் இனம், பாலி இனம், ஹாஸ்பியன் இனம், ஜவான் இனம் என்ற எட்டு வகையான புலி இனங்கள் இருந்தன.

ஆனால் 1940ஆம் ஆண்டில் பாலி இனமும், ஹாஸ்பியன் இனமும், 1970ஆம் ஆண்டில் ஜவான் இனமும் முற்றிலும் அழிந்தன.

ஆண்டுதோறும் பல்வேறு நாட்டு மக்களிடம் வாக்குகள் சேகரித்து உலகின் பிடித்த விலங்கை, விலங்கியல் நடத்தை ஆய்வாளர்கள் தெரிவு செய்வர். இந்த ஆண்டு உலகின் பிடித்த விலங்காக புலி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

உலகின் பிடித்த விலங்கைத் தெரிவு செய்ய, விலங்கியல் நடத்தை ஆய்வாளர் கேண்டி டிசா என்பவர் வாக்கு சேகரித்தார்.

இதில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், சீனா உட்பட 73 நாடுகளைச் சேர்ந்த, 50 ஆயிரம் பேர் வாக்களித்தனர். வாக்கு சேகரிப்பில் 21 சதவீத பேரின் ஆதரவோடு உலகின் மிகவும் பிடித்த விலங்காக புலி தெரிவு செய்யப்பட்டது.

20 சதவீத ஆதரவோடு நாய் இரண்டாம் இடத்தையும் 13 சதவீத ஆதரவோடு டொல்பின்கள் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

## பெண்களுக்கு ஆதரவாக ஜேர்மனியில் இணையத்தளம்

ஜேர்மனியில் பெண்களுக்கு ஆதரவாக தோன்யா டிச்செட்ர் (வயது 41) என்ற பெண் புதிய இணையத் தளம் ஒன்றை ஆரம்பித்தார்.

www.modernabolitionist.org/ என்ற இணையத்தில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள், பெண் கடத்தல், பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் திருமணமான பெண்களுக்கு குடும்ப வன்முறை போன்ற குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யலாம்.

இதுதொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார் தோன்யா.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுபோன்றதொரு இணையத்தள சேவை ஜேர்மனிக்குத் தேவை. ஏனெனில் இங்கு பெண்களில் 25 சதவீதம் பேர் தமது கணவர்களால் மிகுந்த கொடுமைகளைச் சந்திக்கின்றனர்.

புளோரிடாவின் மியாமியைச் சேர்ந்த தோன்யா, பிராங்க்பர்ட் வந்து குடியேறினார். அவர் ஜேர்மனி வந்து பல்வேறு கொடுமைகளை சந்தித்ததாகவும் இதுவே பெண்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டது - என்றார்.

(வ)



ஜப்பான் சென்றுள்ள புத்தத் மத தலைவர் தலாய் லாமாவுக்கு அவரது ஆதரவாளர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

## காதலிக்கு ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்க ஜிம்பாப்வே பிரதமருக்கு நீதிமன்று உத்தரவு

ஜிம்பாப்வே நாட்டின் பிரதமர் மோர்கன் சுவான்கிர், காதலிக்கு ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மோர்கன் சுவான்கிர், லொகார் டியா. கரிமாட்டு சன்கா என்ற பெண்ணைக் காதலித்தார். அவரைக் கடந்த வருடம் அதிகாரபூர்வமற்ற முறையில் திருமணம் செய்தார்.

இந்த நிலையில், அவர் மற்றொரு பெண்ணைக் கடந்த செப்ரெம்பரில் முறைப்படி திருமணம் செய்தார்.

இதை அறிந்த அவரது காதலி கரிமாட்டுசன்கா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

மேற்படி வழக்கை விசாரித்த நீதிமன்றம் பிரதமர் மோர்கன் காதலியைக் கைவிட விட அவருக்கு ஒரு கோடி ரூபா நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டது.

நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டதுடன் காதலிக்கு ஒரு கோடி ரூபா வழங்க மோர்கன் ஒப்புக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் தொடர்பில்

# ஐ.நா. அறிக்கையை நிராகரித்தது வடகொரியா

தமது நாட்டின் மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்களின் அறிக்கையை நிராகரிப்பதாக ஐ.நாவுக்கான வடகொரிய பிரதிநிதி கிங் சொங் தெரி வித்தார்.

தமது நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான பதிவுகள் குறித்து பெருமை அடைவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடகொரியாவில் பரந்தளவான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக ஐ.நாவால் நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதி மார்சூகி தரூஸ்மன் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அரசியல் சிறை முகாம்களின் பரந்தளவான பயன்பாடு மோசமான சிறைச்சாலை நிலைமைகள் சிறைக் கைதிகள் கட்டாய தொழில் மற்றும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் உடல் ரீதியான தண்டனைகளும் அவர்களுக்கு வழங்கப்படுவதாக ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலை யில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை என வட கொரிய பிரதிநிதி தெரிவித்தார்.

**உடல் ரீதியான தண்டனைகளும் அவர்களுக்கு வழங்கப்படுவதாக ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலை யில் இந்தக் குற்றச்சாட்டுக் கள் அடிப்படை அற்றவை என வட கொரிய பிரதிநிதி தெரிவித்தார்.**

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தமது நாட்டுக்கு எதிரான கொள்கைகளை இந்த அறிக்கை பிரதிபலிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (வ)

# பக்கோவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும்

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவிப்பு**

ஐவரிகோஸ்ட்டின் முன்னாள் ஜனாதிபதி லோரன் பக்கோவிற்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்ச்சைக்குரிய ஜனாதிபதித் தேர்தலை அடுத்து கொலை, பாலியல் வன்புணர்வு உட்பட மனிதாபிமானத்துக்கு எதிரான நான்கு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

மேற்படி தேர்தலில் தாம் தோல்வியடைந்ததை ஏற்றுக் கொள்ள பக்கோ மறுப்பு தெரிவித்ததை அடுத்து இடம்பெற்ற வன்முறை களில் சுமார் மூவாயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

எனினும் மேற்படி வன்முறைகளுக்கான பொறுப்பை ஏற்பதற்கு 67 வயதான லோரன் பக்போ மறுப்புத் தெரிவித்துள்ளார்.

உலகில் முன்னணி கொக்கோ உற்பத்தி செய்யும் ஐவரி கோஸ்டில் தமது ஆட்சியை கவிழ்ப்பதற்கு முன்னாள் காலனித்துவ நாடான பிரான்ஸ் சதி செய்ததாக அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (வ)

## நைஜீரிய முன்னாள் இராணுவத் தளபதி சுட்டுக் கொலை

நைஜீரியாவில் முன்னாள் இராணுவத் தளபதி மம்மன் ஷுவாவை அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டுக் கொன்றனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் 1960ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரை ஒடுக்கியதில் முக்கிய பங்காற்றியவர் இராணுவத் தளபதி மம்மன் ஷுவா.

இவர் மைடுகிரி நகரில் உள்ள தனது வீட்டில் வெள்ளிக்கிழமை விருந்தினர்களை வரவேற்றுவிட்டு, மசூதிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் சிலர் அவரை நோக்கி கண் மூடித் தனமாகச் சுட்டனர். இதில் மம்மன் ஷுவாவும், விருந்தினர் ஒருவரும் உயிரி ழந்தனர். இந்தத்தாக்குதலில் ஈடுபட்டது 'போகோ ஹராம்' என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது.

## ஐ.நா.இராணுவத்திலிருந்து உகண்டா படைகள் வாபஸ்

ஐக்கிய நாடுகளின் உதவியுடன் செயற்படும் சர்வதேசத் திட்டங்களில் இருந்து தமது படையை மீளப்பெற உகண்டா தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான விடயத்தை ஐக்கிய நாடுகளுக்கு அறிவிக்கும் நோக்கில் உயர் அதிகாரியொருவரை அரசு அனுப்பியுள்ளதாக சிரியாவின் பாதுகாப்பு அமைச்சர் முருளி முக்காஸா தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக சோமாலியா, மத்திய ஆபிரிக்கா, கொங்கோ குடியரசு போன்ற நாடுகளில் மேற்கொள்ளப் படும் ஐக்கிய நாடுகள் அமைதி படைத் தரப்பினரின் நடவடிக்கைகள் பாதிப்புகு உள்ளாகும் என்று சர்வதேச ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் போராளிகளின் தாக்குதல் காரணமாக ஐந்து இலட் சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனப்படுகொலையாக அறிவிக்குமாறு ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் மனு

**டில்லியில் நடைபெற்ற சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தை**

டில்லியில், 1984 ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக நடந்த கலவரத்தை, இனப்படுகொலையாக அறிவிக்கக்கோரி ஆஸ்திரேலிய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர், இந்திரா டில்லியில் 1984 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து, சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் மூண்டது. இதில் நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். குறித்த கலவரத்தை இனப்படு கொலையாக அறிவிக்கக் கோரி ஆஸ்திரேலிய நாடாளு மன்றத்தில் அந்தநாட்டில் வாழும் சீக்கியர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினரான வாரன் என்ட்ஷ், மேற்படி மனுவை நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தார். ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சீக்கியர்கள், 4 ஆயிரத்து 500 கையெழுத்து அடங்கிய பட்டியலை கான்பெர்ரா நகரில் ஊர்வலமாகச் சென்று வாரன் என்ட்ஷிடம் கையளித்தனர். அதன் பின், இந்த மனு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில், இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே ஆஸ்திரேலிய அரசு இந்த சம்பவத்தை இனப்படு கொலையாக அறிவித்து மேற்படி விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க இந்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று இந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.


இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி

தீராத இருமல், சளி,இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்


Manufactured By: (சி-4512) யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:

**SITHARA PRODUCTS** சிவா நறுமணப் பூங்கா

Puttalam Road, Chilaw இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(Reg.No:- 6382) AR/No.228 (குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்) T.P. 021 222 2567


# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 ★ 02 ★ 1933 |  | 05 ★ 11 ★ 2011 |

அமரர் **கந்தையா செல்வராசா**

கடந்த 05.11.2011 அன்று இறைவனடிசேர்ந்த **கந்தையா செல்வராசா** அவர்களின் ஓராண்டை நினைவு கூரும் முகமாக அன்னாரது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்கேட்டுக்கொள்கின்றோம்.

*சிவபுரம்,*
*பரந்தன்.*

அம்பிகாவதி (மனைவி)
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(24232)

# உன்னத சேவையினால் உயர்வு பெற்ற ஆசான்களை மகாஜன சமூகம் பெருமையுடன் வாழ்த்துகின்றது

## பிரதீபா பிரபா விருது



திரு.சு.சயந்தன்
(BA, PGDE, MED)



திருமதி செள.விசுவலிங்கம்
(Trained Maths)



திருமதி ச.ஜெயக்குமார்
(Trained Primary)

தேசிய ஆசிரியர் தின நினைவாக (2012) கௌரவ ஜனாதிபதி அவர்களால் "தேசத்தின் பிள்ளைகளுக்கு நீங்கள் செய்த அபரிமிதமான சேவையைக் கௌரவித்து வழங்கப்படுகின்ற உயர்விருது "**ஆசிரியர் பிரதீபா பிரபா விருதை**" எங்கள் பிள்ளைகளினதும் கல்லூரியினதும் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிவரும் நீங்கள் 09.10.2012 அன்று ஜனாதிபதி அவர்களின் கரங்களால் பெற்று வந்துள்ளீர்கள். உங்களது பணி மேன்மேலும் கல்லூரியில் சிறக்க வாழ்த்துகின்றோம்.

## அதிபர் தரம் 2 - II பதவி உயர்வு



திரு.ம.மணிசேகரம்
(BSc.PGDE)



திரு.சி.தேவகுமாரன்
(BA, PGDE, MED)



திரு.வை. விஜயபாஸ்கரன்
(BCom (Hons)PG DE, MED)



திரு.இ.துரைசிங்கம்
(BCom, PGDE, MED)

அதிபர் சேவை போட்டிப் பரீட்சையிலும் நேர்முகத் தேர்விலும் உயர் புள்ளி பெற்று **அதிபர் தரம் 2- II** நிலைக்கு பதவி உயர்வு பெற்று 02.10.2012 அன்று **அலரி மாளிகையில் கௌரவ ஜனாதிபதி** அவர்களிடம் நியமனத்தைப் பெற்று வந்துள்ளீர்கள். நீங்கள் எங்கள் பிள்ளைகளினதும் கல்லூரியினதும் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி மேன்மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று கல்லூரியின் உயர்ச்சிக்காக பாடுபட வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலையில் இருந்து 2012 இல் **ஆசிரியர் பிரதீபா பிரபா விருதை** மூவரும் **அதிபர் தரம் 2- II பதவி உயர்வை** நால்வரும் பெற்றிருப்பது கல்லூரியின் அபிவிருத்தியின் உயர்நிலையை தடம்பதித்து நிற்கின்றது. அந்த வகையில் உங்கள் அனைவரையும் பாடசாலைச் சமூகம் பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றது.

**பாடசாலைச் சமூகம்,**
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.


(சி/4530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(24)

இந்தியாவின் பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி எவ்வளவு குள்ளமாக இருந்தார்? பெயரும் புகழும் பதவியும் பெறவில்லையா?



குள்ளமாக உள்ளவர்களுக்கு எப்படித் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறதோ, அப்படியே மிக உயரமாக உள்ளவர்களுக்கும் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது.

'நாம் ஏன் இவ்வளவு உயரமாக வளர்ந்து விட்டோம்? வாசற்படியில் தலை இடிக்கிறது. மற்றவர்கள் நம்மைப் பார்க்கும்போது, ஏதோ ஒரு இராட்சதனைப் பார்ப்பது போல் பார்க்கிறார்களே' என்ற மனப்பான்மை வாட்டுகிறது.

உயரமாக வளர்ந்துவிட்ட பெண்கள் தமக்கு ஏற்ற உயரமான கணவன் கிடைக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறார்கள், கிடைக்கமாட்டானோ என்று பயப்படுகிறார்கள்.

இப்போதெல்லாம் பொதுவாகவே எல்லோரும் உயரமாக வளருகிறார்கள். ஜப்பானியர்கள்கூட சர்வ சாதாரணமாக ஆறடி உயரம் வளருகிறார்கள். கை கால்களை நீட்டித் தேகப் பயிற்சி செய்கிறவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்பவர்கள் உயரமாக வளருகிறார்கள். இவர்கள் உயரமாக வளர்ந்திருப்பதற்கு பெருமைப்பட வேண்டும்.

மிக உயரமான நடிகர் அமிதாப்பச்சன் தனக்கு சினிமாவில் சான்ஸ் கிடைக்குமா என்று சந்தேகப்படவில்லை. ஒல்லியாக இருந்தால் என்ன?உயரமாக இருந்தால் என்ன? நடிப்பும் குரலும் தான் முக்கியம் என்று எண்ணினார். ஒரு நிறுவனத்தில் பெரிய வேலையில் இருந்தார். அதைக்கூட உதறித் தள்ளிவிட்டு சினிமாவில் புகுந்தார்.

உயரமாவது, குள்ளமாவது? மனம் தான் உயர்ந்திருக்க வேண்டும். அது எப்போதும் தாழ்ந்து இருக்கக்கூடாது.

சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் பல வியக்கத்தக்க உண்மைகள் புலப்படும்.

எத்தனையோ உயரமான உலக அழகிகள் குள்ளமான மனிதர்களைக் கவர்ந்து இழுத்து காதலித்திருக்கிறார்கள். ரோமாபுரியை ஆண்ட சீசர் தன்னைவிட உயரமான பெண்ணையே காதலித்தான்.

கிளியோபாட்ரா தன்னைவிட அழகில் குறைந்த அந்தோனியைக் காதலிக்கவில்லையா? உயரமான பெண்கள் கூடக் குள்ளமான தனது காதலர்களுடன் எப்படிக் காதல் கொள்வது, என்பதைப் புரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அழகில்லாத பெண்கள்கூட தமது குறைகளைப் போக்கிக் கொள்ள முடியும்.

'அவள் அழகியல்ல. ஆனால் அவளிடம் ஏதோ ஒரு கவர்ச்சி இருக்கிறது' என்று சிலர் ஒரு பெண்ணைப்பற்றி பேசுவது சாதாரணம்.

அழகில்லாத பெண்கள் தாழ்வு மனப்பான்மை கொள்வானேன்? அவர்கள் ஆடை அணியும் வகையில் ஒரு கவர்ச்சியை உண்டாக்க முடியும். அவர்கள் பேசும் விதத்தில் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்த முடியும். அவர்கள் நடக்கும் ஸ்டைலில் ஒரு தனிக் கவர்ச்சி இருக்கும். அவர்கள் சிரிக்கும் போது மற்றவர்களிடம் இல்லாத கவர்ச்சி ஏற்படக்கூடும். இதைப் புரிந்து கொண்டு செயற்பட்டால், எந்தப் பெண்ணும் தன் குறையைப் போக்கிக் கொள்ள முடியும்.

தாழ்வு மனப்பான்மையை விரட்ட மனதில் எப்போதும் துணிவை வளர்க்க வேண்டும். எதற்கும் அஞ்சக்கூடாது. மனச்சாட்சியைத் தவிர.

உண்மையிலேயே பெரும் பணக்காரர்கள் ஆடம்பரமான ஆடைகளை அணிவதில்லை. விலை மிகுந்த கார்களைப் பயன்படுத்துவதில்லை. எளிய உடைகளை அணிவார்கள். மலிவான கார்களைப் பயன்படுத்துவார்கள். ஆனால் அவர்களின் வங்கி வைப்பு கணக்கு மட்டும் பெரிதாகிக் கொண்டே போகும். பணத்தைப் பெறுவதில்தான் அவர்கள் கவனம் பதிந்திருக்கும். மற்றதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்.

படிக்காதவர்கள் கவலைப்பட வேண்டாம். பள்ளிக்குப் போய் படித்தால் தான் படிப்பா? இல்லை. படிக்காதவர்கள் மேதைகளாகி இருக்கிறார்கள். படிப்பு இல்லாமலே இவர்கள் தமது மூளையை வளர்த்திருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர் பள்ளிக்கூடத்தில் படிக்காதவர். அவர் எழுதிய இலக்கியங்களைப் படிக்காத பள்ளிக்கூடமோ, கல்லூரியோ உண்டா?

ஃபோர்டு படிக்காதவர்தான், கார்களைக் கண்டு பிடித்து பெரும் பணக்காரர் ஆகவில்லையா?

எடிஸன் படிக்காதவர். எவ்வளவு பெரிய விஞ்ஞானி? நம்ப முடிகிறதா? ஆனால் உண்மை.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# மகிழ்ச்சி இழக்கப்படுகின்றது மனச்சோர்வு ஏற்படும்போது

## உளநல மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

கிளிநொச்சி,நவ.5

மனச்சோர்வு ஏற்படும் போது மகிழ்ச்சி இழக்கப்படுகின்றது. இதனால் மகிழ்ச்சிக்காக சிலர் வைத்தியம் பெற வருகிறார்கள். அதாவது மற்றவர்கள் தம்மை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று வவுனியா ஆதார வைத்தியசாலையின் உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாசன் தெரிவித்தார்.

உளநல நாள் நிகழ்வு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்கள் மகிழ்ச்சியாக உள்ளார்கள். அதாவது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். அவர்கள் வளர வளர மகிழ்ச்சியை இழக்கின்றார்கள். தற்போது பிள்ளைகளின் நிகழ்ச்சி நிரலில் மகிழ்ச்சி என்பது இல்லை.

எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கப் போகின்றீர்கள் எனக் கேட்டால் வைத்தியராக, பொறியியலாளராக, கணக்காளராக என்று தமது எதிர்காலம் பற்றி கூறுகின்றார்களே ஒழிய, எவரும் மகிழ்ச்சியாக இருக்கப் போவதாகக் கூறுவதில்லை.

மனிதவாழ்வு தற்போது சவாலாக மாறியுள்ளது. நாம் திடமாக இல்லாவிட்டால் அடிக்கடி குழப்பப்படுவோம். தொலைக்காட்சி நிகழ்வுகள் தாங்கள் நினைக்கும் திசைகளில் பிள்ளைகளைக் கொண்டு செல்கின்றன.

நாம் திடமாக இருப்பதற்கு முதலில் இல்லை, முடியாது என்று சொல்லப்பழக வேண்டும். கேட்பதற்கெல்லாம் ஆமாம் போடக் கூடாது. எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. நாம் வெளிப்படையாக பேசப் பழக வேண்டும். தங்களைத் தாங்களே சரியாகக் கணிக்கப்பழக வேண்டும்.

பரீட்சையில் 9ஏ எடுக்க நினைத்த மாணவர் ஒருவர் 8ஏ எடுத்து விட்டால் தற்கொலைக்கு முயற்சிக்கின்றார். இது எமது கல்வித் திட்டத்தில் உள்ள குறைபாடாகும்.

எல்லோரும் நற்பண்புகளுடன் சில பலவீனங்களையும் கொண்டவர்கள். அதனை சரியாக கணிக்க வேண்டும். அடுத்து நிறைவான மனப்பாங்கு வேண்டும். எப்போதும் குறைகாண்பதாகவும் இருக்கக்கூடாது. நிறைகளை முதலில் பார்க்க வேண்டும்- என்றார்.

(எ-405)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை பொது நூலகத்தில் இடம்பெற்ற நூலக கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்கள். (எ-7)

# பெண்களின் கல்விக்கு முன்னுரிமை கொடுத்த பெருமை திருக்குடும்ப கன்னியர் மடத்தைச்சாரும்

## கல்விப் பணிப்பாளர் புகழாரம்

யாழ்ப்பாணம்,நவ.5

ஆரம்ப காலங்களில் பெண்களின் கல்வி முறைமை ஒடுக்கப்பட்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் பெண்களின் கல்விக்கு முன்னுரிமை கொடுத்து சேவையாற்றிய பெருமை யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையைச் சாரும் என்று வடமாகாண கல்விப்பணிப்பாளர் வி. செல்வராஜா தெரிவித்தார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலை 150 வருடங்கள் சேவை யாற்றியுள்ளமை மட்டுமல்லாது ஒரு தேசிய பாடசாலையாகவும் உயர்ந்துள்ளது.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே செல்வராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் சங்க கால இலக்கியங்களை எடுத்துக்கொண்டால் பெண்களின் கல்விப்பங்கு குறைவாக இருந்ததையே காண முடியும்.

அதே காலத்தில் தான் ஔவையார் போன்ற கல்விப் புலனாளர்களும் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளனர். [illegible] கல்வி எனும் நிலை [illegible] போது ஆண்கள் அதிகமாகவும் பெண்கள் மிகக்குறைவாகவும் கல்வியில் ஈடுபட்டனர்.

கத்தோலிக்க மக்களிடையேயும் தமது பெண் பிள்ளைகளும் கல்வி கற்க வேண்டும் எனும் ஆதங்கம் ஏற்பட்டது. அதன் விளைவாக ஆண்கள், பெண்கள் என தனித்தனி பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன.

அவ்வாறான சூழலில் உருவாக்கப்பட்ட யாழ். திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலை 150 வருடங்கள் சேவையாற்றியுள்ளமை மட்டுமல்லாது ஒரு தேசிய பாடசாலையாகவும் உயர்ந்துள்ளது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் அளப்பரிய சேவையாற்றியமை முக்கிய காரணமாகவுள்ளது என்றார்.

(எ- 14)

# சொல்வதெழுதுதல் போட்டி முடிவுகள்

வலிகாமம்,நவ.5

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கிலதினத்தையொட்டி இடம் பெற்ற சொல்வதெழுதல் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

தரம் -6

பவதாரணி கருணாதரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கவிஷா சுதாகரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கண்ணதாசன் சியாமளன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி),

தரம் -7

எமரன்சியா ஜேம்ஸ் மருதநாயகம் (இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), சங்கீராணி கோவிந்தராஜன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), மதுசாலினி ஜெயசிங்கம் (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் - 8

சோபஷினி சுதர்சன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஸ்ரீஹர்சன் லோகேஸ்வரன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சூரியகுமார் சேயோன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

தரம் -9

அனோஜா சத்தியசீலன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), நிசோதா நந்தகுமார் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சஜானா ஜேசுராசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).(தொடரும்) (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம்,'நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பல்கலைக் கறையான்கள்

அரசியல் சாக்கடையில் சிக்கி வடபகுதித் தமிழர்களின் உயர் கல்விமையமான யாழ்.பல்கலைக்கழகம் சீரழிந்து வருவதை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

விரிவுரையாளர்கள் மற்றும் மூதவை உறுப்பினர்களுக்கான நியமனங்கள், மாணவர் மீதான பாரபட்ச நடவடிக்கைகள், 'அணைவானவர்களுக்கு' அள்ளி வழங்கப்படும் புள்ளிகள் எனப் பல விடயங்களில் யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் அரசியல் புகுந்து விளையாடுவது பற்றி ஏற்கனவே அரசல் புரசலாக தகவல்கள் வெளிவந்திருந்தன. ஆயினும் பல்கலைக்கழகத்தில் இயங்கும் ஓர் அமைப்பு அதனை உத்தியோகபூர்வ அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருப்பது இந்தப் பிரச்சினையின் கனதியை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தோடு கைகோர்த்து வலுச்சேர்த்த பெருமை யாழ்.பல்கலைக்கு உண்டு. எண்பதுகளில் விடுதலைப் போராட்ட அமைப்புக்களின் அரசியல் பாசறையாக விளங்கியதும் பல்கலைக்கழகம்தான். அதன்பின்னர் குடாநாடு படைத் தரப்பின் இரும்புப் பிடிக்குள் சிக்குண்டு ஊரடங்கு வாழ்வுக்குள் முடங்கியிருந்த போது, அந்த முள் வேலியை தாண்டி மக்களின் பிரச்சினையை உலகறியச் செய்ததில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பங்கு மிகப் பெரியது. பொங்குதமிழ் நிகழ்வு மூலம் மக்கள் சக்தியை உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவாகத் திரட்டிய பெருமையும் இதற்குண்டு.

தமிழர் உரிமைக்கான குரலை பல்கலைக்கழக சமூகத்தில் பலவீனமாக்க பல வருடங்களாகவே அதிகார சக்தி தன் அடிவருடிகள் மூலம் முயன்று கொண்டே இருந்தது. ஆயினும் அதில் எதுவுமே பலிக்கவில்லை. 2000 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் மிகக் குறைந்தளவானோரை யாழ்.மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். பின்னர் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்களின் தொகையை விட இரு மடங்கனாவர்கள் விசேட அனுமதி மூலம் உள்வாங்கப்பட்டார்கள். இந்த விசேட அனுமதியை அரசின் வாலைப் பிடித்துக் கொண்டிருக்கும் அமைச்சரே பெரிய மனது பண்ணி பெற்றுக் கொடுத்ததாக சித்திரிக்கப்பட்டது. தியேட்டருக்குள் விசேட அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு அமைச்சரின் போதனை பெற்ற பின்னரே பல்கலைக்கழகத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். '' உங்களுக்கான நியமனங்களைப் பெற்றுத் தந்தமைக்காக எல்லா ஊடங்களிலும் அவருக்கு ஒரு பக்கத்துக்கு பாராட்டி வாழ்த்துகிறோம் என்று நீங்கள் விளம்பரம் செய்ய வேண்டும்'' என்றும் ஆலோசனை கண்டிப்போடு வழங்கப்பட்டது.

அடுத்து வரும் நாள்களில் எல்லாம் பாராட்டி வாழ்த்துகிறோம் வரும் என்று எதிர்பார்த்திருந்த அரச கட்சியினர் இலவு காத்த கிளிகள் ஆனது தான் மிச்சம். கடைசி வரை அமைச்சரைப் பாராட்டி பல்கலை மாணவர்களின் விளம்பரம் வரவேயில்லை.

இந்த நிலையில் மீளவும் போர் தொடங்கிய கையோடு யாழ். பல்கலைக்கழகத்துக்குள் அரசியல் தலையீடுகள் உள்நுழையத் தொடங்கின. சிற்றூழியர்கள் முதல் விரிவுரையாளர்கள், மூதவை உறுப்பினர்கள் என்று அநேக நியமனங்களில் அரசின் கைப்பொம்மைகளே நியமிக்கப்பட்டனர். அவர்கள் மூலம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மூளைச்சலவை செய்து தம் பக்கம் இழுக்க அரசும், அரசின் அமைச்சரும் முயல்கின்றனர். ஆயினும் மாணவர்கள் அசைவதாக இல்லை.

இப்போதும் பல்கலைக்கழகத்துக்குள் புற்றெடுத்திருக்கும் அரசியல் கறையான்களைப் பற்றி துணிந்து அறிக்கையும் வெளியிட்டு விட்டனர். மாணவர் சக்தி மகத்தானது. இதை இனியாவது உணர்ந்துகொண்டு அரசின் தாளத்துக்கு ஆடாமல் மாணவர்களின் கல்வி நலனில் மட்டும் உரியவர்கள் கவனம் செலுத்தினால் நல்லது.

# விதியின் விளையாட்டு

■ *தமிழில்: வீயெஸ்ரீ*

மூலம்:- உப்புல் யோசெப் பெர்னாண்டோ

"நீங்கள் இன்று மேற்கொள்ளும் செயற்பாடுகள் தவறானவை என்று எதிர்காலத்தில் சிலவேளை நீங்களே கூற நேரிடும். எதிர்காலத்தில் அத்தகையதொரு தவறு இடம்பெறும்போது, நாமும் முன்னர் தவறு செய்துள்ளோம், பல பிழையான விடயங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றியுள்ளோம் என்று நீங்கள் சிந்திப்பீர்கள். அத்தகையதொரு நிலை என்றோ ஒருநாள் ஏற்படும். செய்த தவறு குறித்து சிந்திக்கும் நிலை , இன்று இந்த நாடாளுமன்றத்தில் இருக்கும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது''

1984 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராகவிருந்த நெவில் சமரக்கோனுக்கு எதிரான குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்ய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றினை நியமிக்கும் பிரேரணை ஐ.தே. கட்சி அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது, அந்த வேளையில் எதிர்க்கட்சியாகவிருந்த சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த திஸநாயக்கா வெளியிட்ட கருத்தின் ஒரு பகுதியே இது.

அன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த திஸநாயக்கா வெளியிட்ட கருத்து முற்றிலும் உண்மையானதே. இன்று தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணையொன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அன்று பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் மீது குற்றஞ் சுமத்தி அதனை விசாரணை செய்ய நாடாளுமன்ற தெரிவிக்குழு ஒன்றை நியமிக்க ஐ.தே. கட்சி மேற்கொண்ட முயற்சி குறித்து, நாம் அன்று இதுபோன்ற பெரும் தவறொன்றைப் புரிந்துள்ளோம் என ஐ.தே.கட்சியினர் மனம் வருந்த நேரிட்டுள்ளது.

இத்தனைக்கும் அன்றைய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் பகிரங்கமாக அரசை விமர்சித்தாரா? என்பதை விசாரித்தறிவதற்காகவே அன்று ஐ.தே.கட்சி அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றினை நியமித்தது. ஆனால் இன்றோ, இன்றைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் கணவர், அரச வங்கியொன்றின் தலைவர் என்ற ரீதியில் வங்கியின் கொடுக்கல் வாங்கல்களில் ஊழல் புரிந்ததாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளமையைக் காரணம் காட்டியே, இன்றைய அரசு பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளது.

இத்தனைக்கும் பிரதம நீதியரசரின் கணவரை அரச வங்கியொன்றின் தலைவராக மட்டுமன்றி, வேறு சில நிறுவனங்களின் பொறுப்பான பதவிகளில் நியமித்ததும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே. அது ஷிராணி பண்டாரநாயக்காவை பிரதம நீதியரசராக நியமிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களே. அந்த வகையில் பிரதம நீதியரசரின் கணவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக, தகுதியற்ற ஒருவரை பொறுப்பான உயர் பதவிகளில் நியமித்த தவறுக்காக தமது பதவியைத் துறக்க வேண்டியவர் ஜனாதிபதியேயல்லாது பிரதம நீதியரசரல்ல.

ஆனாலும் சட்டத்தின் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் குற்றவாளியே என தீர்ப்பளிக்கப்படும் வரை , அவரை தவறிழைத்தவராக குற்றம் சுமத்த இயலாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னர் பிரதமர் பதவி [illegible]
[illegible] தொடர்பாக அவருக்கு எதிராக குற்றஞ் சுமத்தப்பட்ட போது, அவர் தமது பிரதமர் பதவியைத் துறக்கமுன்வரவில்லை. மாறாக தம்மீதான குற்றச்சாட்டு நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்படும் வரை, தாம் எதற்காகவும் அலட்டிக்கொள்ளப்போவதில்லையென அவர் வாதிட்டார்.

அத்தகைய வாதம் இன்றைய பிரதம நீதியரசரின் கணவருக்கும் பொருத்தமாக வேண்டும். அவ்வாறானால் பிரதம நீதியரசரின் கணவரது நியமனம் தவறான முடிவால் ஏற்பட்டதென தற்போது வாதிட இயலாது.

அதுவுமன்றி பிரதம நீதியரசரின் கணவருக்கு எதிரான ஊழல் குற்றஞ்சாட்டு இந்த ஆண்டு மே மாதத்தில் முன் வைக்கப்பட்டது. ஆறு மாதங்கள் வரை அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாததேன் என்று எவராவது கேள்வி எழுப்பினால் அது நியாயமான தொன்றாகவே கொள்ளத் தோன்றும். 'திவிநெகும' சட்ட மூலம் தொடர்பாக அரசின் எதிர்பார்ப்புக்கு மாறாக உயர்நீதிமன்றத்தீர்ப்பு அமைந்த பின்னர் அரசு நீதியரசரின் கணவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க அவசரம் காட்டுவது ஏன்?

அரசினால் இக் கேள்விகளுக்கு எவ்வித பதிலும் வழங்க இயலாது. இது உண்மையில் சரத் பொன்சேகா இராணுவத் தளபதிப் பதவியினின்றும் விலகி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்த பின்னரே அரசு போராயுதக் கொள்வனவு தொடர்பாக சரத் பொன்சேகாவின் மைத்துனரான தனுன திலகரத்னவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த சம்பவத்துக்கு ஒப்பானதொன்றே.

இவை குறித்து இந்த நாட்டு மக்களுக்கு எதுவும் புரியாதென்று கூற இயலாது.தனக்கு சவால் விடுத்த பொன்சேகாவை அடக்கி ஒடுக்க அரசு இராணுவத்தரப்பையும் நீதித்துறையையும் பயன்படுத்தியது. தற்போது அரசு எதிர்பாராததொரு தீர்ப்பை திவிநெகும சட்ட மூலத்துக்கு வழங்கிய பிரதம நீதியரசருக்குப் பாடமொன்று கற்பிக்க லஞ்ச ஊழல் ஆணைக்குழுவையும் நாடாளுமன்றத்தையும் பயன்படுத்த அரசு முனைகிறது. இவற்றினூடாக பிரதம நீதியரசரை அடக்கி ஒடுக்க அரசு முயற்சிக்கிறது.

பிரதம நீதியரசரை அடக்கி ஒடுக்குவதொன்றும் அரசுக்கு இலேசான காரியமொன்றல்ல. தாம் உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டமைக்கு எழுந்த பல தரப்பட்ட எதிர்ப்புக்களையெல்லாம் தாண்டித் தமது பதவியைத் தொடர்ந்தவர் அவர்.

பிரதம நீதியரசரின் கணவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மூலம் பிரதம நீதியரசரை அடக்கி ஒடுக்க அரசு முனையுமானால் அது அரசுக்குப் பாதிப்பானதொன்றாகவே அமையும்.

ஷிராணி பண்டாரநாயக்கா ஒரு பெண். அதிலும் பிரதம நீதியரசர் என்ற உயர்ந்ததொரு பதவி வகிக்கும் இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசர். சரத் பொன்சேகா என்ற இராணுவத் தளபதியை அடக்கி ஒடுக்க அரசு முயன்ற வேளை பொது மக்களது பச்சாதாபம் பொன்சேகாவுக்குக் கிடைத்ததென்றால், பிரதம நீதியரசர் என்ற உயர் பதவி வகிக்கும் பெண்மணியொருவரை அரசு அடக்கி ஒடுக்க முயலும் போது ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு இந்த நாட்டின் பெண்களது மட்டுமன்றி சகலரது பச்சாதாபமும் ஆதரவு கிட்டுவதைத் தவிர்க்க இயலாதே.

ஐ.தே. கட்சி அரசு முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்றை முன்வைத்து நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க முயன்றபோது அவ்வேளைய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் முத்தட்டுவேகம, பிரதம நீதியரசர் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்தோன்ற மறுப்புத் தெரிவித்தால் நாடுபெரும் சிக்கலுக்கு உள்ளாக நேரிடுமென எச்சரித்தார். அவ்விதம் பிரதம நீதியரசர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் பிரசன்னமாக மறுத்தால் அரசு அவரைக் கைது செய்யுமா? அவ்விதம் அரசு அவரைக் கைது செய்தால் அதற்கெதிராக பொது மகனொருவர் நீதிமன்றத்துக்குச் சென்று அவரை விடுதலை பெற வைத்தால் அவ்வேளை நாட்டின் நிலை என்னாகும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஆயினும் ஐ.தே. கட்சி அரசு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் முத்தட்டுவேகம எழுப்பிய அக்கேள்விகளில் பொதிந்திருந்த பாரதூரமான உண்மையைக் காலந்தாழ்த்தியே புரிந்து கொண்டது. கடைசியில் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனை அவர் சேவையிலிருந்து இளைப்பாற வேண்டியிருந்த தினத்தில் இளைப்பாற வைப்பித்ததன் மூலம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையால் பிரதம நீதியரசரை அசௌகரியத்துக்கு உள்ளாக்காமல் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டது.

அன்று அப்போதயை பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தமை சட்ட விரோத, அரச அமைப்புக்கு எதிரான செயற்பாடெனக் குற்றம் சாட்டிய சுதந்திரக் கட்சித் தரப்பினரே இன்றைய பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையொன்றை முன்வைத்து இன்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க முயற்சிக்கின்றனர். ஆயினும் அன்றைய ஐ.தே. கட்சி அரசின் செயற்பாட்டுக்கும் இன்றைய அரசின் செயற்பாட்டுக்கும் நிறையவே வேறுபாடுகளுண்டு. இன்றைய அரசின் முயற்சிக்கு எதிராக நீதித்துறைத் தரப்புக்கள் எதிர்ப்புக்காட்ட நிறையவே இடமுண்டு. ஏனெனில் அரசுக்கு பாதகமான விதத்தில் தீர்ப்பொன்றை வழங்கும் எந்தவொரு நீதிபதியும் எதிர்காலத்தில் இத்தகைய குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என்பதாலாகும்.

மற்றொரு புறம் பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து விலக்குவது ஓரிரு வாரங்களில் மேற்கொள்ளப்படத்தக்கதொரு விடயமல்ல. முதலில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்தாக வேண்டும். அக்குழு முன் அரசு முன்வைக்கும் குற்றச்சாட்டு பிரதம நீதியரசரின் கணவருக்கெதிரானதாயின், அதில் அவர் குற்றவாளியா, சுற்றவாளியா எனத் தீர்ப்பளிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும். அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அதற்காக அவரது மனைவியான பிரதம நீதியரசர் , பதவி விலக வேண்டுமெனக் கோருவது பெண் இனத்தை அவமதிப்பதாகும்.

தவிர நாடாளுமன்றத் தெரிவிக் குழு தனது விசாரணைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்ட காலம் எடுத்துக் கொள்ளும். தமக்கெதிரான குற்ற விசாரணையின்போது பிரதம நீதியரசர் தமது சார்பில் வாதாட சட்டத் தரணியொருவரை நியமிக்க இயலும். இவற்றுக்கெல்லாம் நாள்கள் பல செலவாகும். விசாரணை அறிக்கை வெளியிடப்படும் வரை பிரதம நீதியரசர் தமது பதவியில் தொடர்ந்தும் செயற்படுவார். அரசுக்கும் , நீதித்துறைக்குமிடையில் முரண்பாடுகள் தலையெடுக்கத்தக்க வேளை இடைப்பட்ட இந்தக் காலகட்டமேயாகும்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டே அன்று ஐ.தே. கட்சி அரசு பிரதம நீதியரசருக்கு எதிராக களமிறங்கியது. இன்று ஐ.தே. கட்சி அதன் பலனை அனுபவிக்க நேர்ந்துள்ளது. இன்று அதே விதத்தில் செயற்பட விளையும் இன்றைய அரசு, அன்று ஐ.தே. கட்சி அரசு தனது தவறுக்காகச் செலுத்த நேர்ந்த தண்டத்தை விட பல மடங்கு அதிகமான தண்டம் செலுத்த நேரிடும். இதனையே விதியின் விளையாட்டு எனக்கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு



கோவி.மதிவரன்

பண்பட்ட எல்லா மொழிகளிலும் இசை வாழ்கிறது. ஆனால், எந்த மொழியிலும் இதை முக்கியக் கூறாகச் சொல்வதில்லை; சிறப்பித்தும் போற்றுவதில்லை. ஆனால், தமிழில் மட்டுந்தான் இசைத் தமிழ் என்ற பிரிவே விளங்குகின்றது.

சுதி, பாட்டு, பண், தாளம், பாடுவோர் உள்ளம், கேட்போர் உள்ளம் ஆகியவை இசைந்தால் தான் அதை இசையென்று தமிழர்கள் கூறுவர். அப்படி இல்லையென்றால் அதன் பெயர் இரைச்சல் என்றாகிவிடும். இசைக்குப் புகழ் என்ற பெயரும் உண்டு என்பதைத் திருவள்ளுவம் இயம்புகின்றது.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

எனும் திருக்குறள் இதனை மெய்ப்பிக்கும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் பண்டைய தமிழர்கள் இசையை எந்த அளவுக்குப் போற்றினார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இறைவனையே இசைமயமாகக் கண்டவர்கள் தமிழ் மக்கள். ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவனே இறைவன் எனக் குறிப்பிட்டனர்.

அதனால் தான் இறைவனைப் பன்னிசையால் பாடிப் பரவினர். இம்முறையில் பண்ணோடு கூடிய பத்திப்பாடல்கள் பைந்தமிழில் பல உள்ளன. அவற்றுள் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் முதலியவை குறிப்பிடத் தக்கன.

இந்த நூல்களில் உள்ள பக்திப் பாடல்கள் தமிழ்த் தேனோடு இசைத்தேனையும் கலந்து சுவை தருவனவாகும்.

தமிழிசை தோன்றிய காலம், தமிழ்மொழி தோன்றிய காலமே! தமிழ் மக்களின் எண்ணம், சொல், செயல், வாழ்வு அனைத்தும் இசை கலந்தவையாகவே காட்சியளிக்கின்றன. தமிழர் வாழ்வின் பெரும்பங்கை இசையே ஏற்றுள்ளது. குழந்தைப் பருவத்தில் தாலாட்டு, திருமணத்தில் நலுங்குப்பாட்டு, கர்ப்பக் காலத்தில் வளைக்காப்புப் பாட்டு, இறப்பின் போது ஒப்பாரிப் பாட்டு, என்று தமிழரின் வாழ்வில் பிறப்பு முதல் பிறப்பு வரை இசை இடம் பெற்றுள்ளதும் இசையோடு தமிழர்கள் வாழ்ந்தார் என்பதும் தெளிவாகிறது.

இசை, இனிய கலை என்பதால் அது பயிரையும் வளர்க்கும் ஆற்றல் கொண்டது; மேலும் இசை மருந்தாகவும் பயன்படுகிறது. மனிதர்கள் மட்டுமின்றி அஃறிணை உயிர்களுக்கும் இசை பல வழிகளில் துணைபுரிகிறது.

மேலைநாட்டுத் தத்துவ மேதையான ஷேக்ஸ்பியர் இசைக்குக் கட்டுப்படாதவன் எத்தகைய கொடுஞ்செயலையும் செய்யக் கூடியவன் என்று கூறுகின்றார்.

இதனால்தான், இசையால் வசமாகாத இதயம் இவ்வையகத்தில் இல்லை என்று தமிழிசைச் சான்றோர்கள் இயம்புகின்றனர்.

# வாழ்வை வளமாக்கும் நேர முகாமைத்துவம்

கலாநிதி க.குகதாசன்

எமது வாழ்க்கையில் உயிர், நேரம் இரண்டு விடயங்களையும் இழந்தால் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாது. புதிதாக மலரும் இன்றைய பொழுதில் 24 மணித்தியாலங்களை கடவுள் எமக்கு தந்துள்ளார். அந்த 24 மணித்தியாலங்களையும் பயனுள்ள வகையில் விரயமாக்காது சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு நேர முகாமைத்துவம் முக்கியமான ஒன்றாகவுள்ளது.



**எல்லோருக்கும் ஒரே மாதிரியாக 24 மணி நேரத்தைத்தான் கடவுள் கொடுத்திருக்கிறார். சிலர் அந்த நேரத்தை மிகவும் நன்றாக பயன்படுத்தி நன்மைகள் பல அடைகின்றனர்.**

**"நேரம் பொன்னானது"**

எல்லோருக்கும் ஒரே மாதிரியாக 24 மணி நேரத்தைத்தான் கடவுள் கொடுத்திருக்கிறார். சிலர் அந்த நேரத்தை மிகவும் நன்றாக பயன்படுத்தி நன்மைகள் பல அடைகின்றனர். சிலரோ எல்லா வேலைகளையும் மன அழுத்தத்துடன் ஆரம்பித்து நல்லவகையில் சாதனை அடைய முடிவதில்லை. ஒரு சிலரால் முடிந்த விடயம் ஏன் பெரும்பாலானோரால் முடியவில்லை என்று பார்த்தால் அவர்களுக்கு நேரத்தை பயன்படுத்தும் சூட்சுமங்கள் தெரியவில்லை என்பதுதான் உண்மை.

சர்வதேச மாற்றங்களுக்கேற்ப எமது மூளை, மன, உடல் செயற்பாடுகளை மேம்படுத்த முடியும். மனோதத்துவ நிபுணர்கள் அந்த நேரங்களை ஏழு வகையாக பிரிக்கின்றனர்.

1. அதிகாலை 5 மணி தொடக்கம் அதிகாலை 6 மணிவரை இது எண்ணியவற்றை எண்ணியவாறு அடைய வல்ல சக்தியைத் தர வல்ல காலமாகும்.

அதிகாலையில் மலர்கள் மலர்வது போன்று அடிமனமும் மலரும். சிறுவயது முதல் இன்று வரை அடிமனதில் ஆழமாக பதிந்துள்ள தோல்வி எண்ணங்கள், துன்பங்கள், துயரங்கள், சோகங்கள் ஆகியவற்றை அடியோடு நீக்கி அங்கே புதிய எண்ணங்கள், புதிய சிந்தனைகள், வெற்றி மனப்பான்மை, சித்த மனஉறுதி, சிறப்பான எண்ணங்களை பதிவு செய்வதற்கு உகந்த உத்தம நற்காலம். அடிமனதில் தேங்கியுள்ள எதிர்மறை எண்ணங்களும், தோல்வி எண்ணங்களுமே எமது முன்னேற்றத் துக்குத் தடைக்கல்லாக இருக்கின்றன. ஆகவே அடிமனதில் வெற்றி எண்ணங்களைப் பதிவு செய்ய இந்தக்காலம் உகந்தது.

அல்பா நேரத்தில் மூன்று முக்கிய மன வளர்ச்சி பயிற்சிகள் மூலம் உங்கள் அடி மனதில் புதிய வெற்றிப் பதிவுகளைப் பதிக்கலாம்.

1. இன்மகிழ்நல வெற்றி எண்ணங்களுடன் சாதனை மனப்பான்மையுடன் விழித்தெழுதல்.

2. எனது இலக்கு என்ன? இலட்சியம் என்ன? என்று எண்ணி அவற்றை அடைவதற்கு நான் இன்று எவ்வாறு முனைந்து முயற்சித்தல் வேண்டும் என்று எண்ணுதல்.

3. மனப்படம் ஏற்றுதல் இன்று என்ன கருமங்களை எவ்வாறு ஆற்றிடல் வேண்டும்? நான் ஆற்றும் கரு மங்கள் எவ்வாறு சிறப்புடன் அமைய வேண் டும்? ஆற்றும் கருமங்கள் சிறப்புடன் அமைவது போன்றும், அமைந்து விட்டது போன்றும் மனக்கண் மூலம் உற்று உணர்ந்து மகிழ்ந்து காண்பது அகக்கண் காட்சிகள் கட்டாயம் நிறைவு பெறும் என்பது உளவளவல்லுநர்களின் கருத்தாகும்.

2. காலை 6 மணியிலிருந்து 8.30 மணிவரை. புதிய சிந்தனைகள், யுக்திகள் மூலம் புது யுகம் படைத்திடும் நேரம்.

ஆக்கமும், ஊக்கமும், உவகையும், உற்சாகமும் மலர்ந்திடும் நற்காலமாகும். இந்த நேரத்தில் எமது வலது பக்கத்தின் மூளையின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படும். மேல்மனம் (செயற்பாட்டு மனம்) விரிவடையும் நேரம். இதன்போது புதிய சிந்தனைகளும், புதிய யுக்திகளும் ஏற்கனவே நோக்கிய பிரச்சினைகளுக்குரிய தீர்வினையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் அன்றைய நாளை வினைத்திறன் மிக்கதாக மாற்றிவிட முடியும். முதல் நாள் இரவு நாளைய கடமைகள் யாவை எனச் சிந்தித்து துயில் செய்வதனால் உண்டாகும் புதிய எண்ணங்கள், புதிய சிந்தனைகள் உருவாகும் நேரம். இன்று என்ன சாதனைகளைப் படைக்க வேண்டும், எவ்வாறு கருமங்களை நன்றாக ஆற்றவேண்டும், எவ்வாறு பாடசாலையில் நன்றாகக் கல்வி கற்க வேண் டும் என்று திரும்பத் திரும்ப எண்ணும் பொழுது இவ்வகையான மறுமலர்ச்சிச் சிந்தனைகள் தோன்றிடும்.

3. காலை 8.30 திலிருந்து பகல் 12.30 வரை. இன்றே செய்வோம் அவற்றை நன்றே செய்வோம்.

வலது பக்க மூளையும், மேல் மனமும் இணைந்து செயற்படும் இனிய காலம். இந்தப் பொழுதினை பெரும்பாலானவர்கள் தொழில் ரீதியான கடமைகளில் பயன்படுத்துகின்றார்கள். வலது பக்க மூளை நன்றாகச் செயற்படும் நேரம். வலது பக்க மூளை தரும் புதிய ஆக்கம், தீர்மானம் எடுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகிய கடமைகள் ஆற்ற உகந்த நேரம். தொழில்புரியும் தளத்திற்கு சென்றதும் இன்முகம் காட்டி, புன்முறுவல் பூத்து, நல்வாழ்த்துக்கள் கூறி தொழில் புரியும் சூழலை சுத்தமாகவும், அழகாகவும் மெருகூட்டுவதன் மூலம் அகச்சூழலையும், புறச்சூழலையும் ஒழுங்குபடுத்தி புதுத்தென்புடன் கடமையை ஆற்றலாம்.

இந்த நேரத்தில்,

★அவசரமும் அவசியமுமான கருமங்களை முன்னிலைப் படுத்தி பட்டியலிட்டு கடமையை ஆற்றுவோம்.

★அதன் பின்னர் அவசரமற்ற அவசியமான கருமங்களை செய்வோம்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் திட்டமிட்டவற்றை திட்டமிட்டவாறே திடமுடன் நிறைவேற்றக்கூடியதாக இருக்கின்றது.

4. பகல் 12.30- மாலை 5 மணி வரை. சோர்வையும் சோம்பலையும் போக்கி ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அதிகரித்து கடமைதனை ஆற்றும் நேரம்.

இந்தக்காலப்பொழுதினில் இடப்பக்க மூளையின் செயற்பாடு அதிகரித்து காணப்படும். அன்றாட வழமையான கடமைகளை நிறைவேற்றுவதற்கு உகந்த பொழுதாகும். எமது நாளாந்த கடமைகளில் எவற்றை இன்று ஆற்றப்போகின்றோமோ என்பதனை பட்டியல் படுத்தி கடமையை செவ்வன ஆற்றுவோம். அதன் பின்னர் முற்றுப் பெறாத கருமங்களை முற்றுப் பெறும் வண்ணம் செம்மைப் படுத்தி முற்றுப்பெற வைப்போம்.

இந்த நேரத்தில் ஏற்படும் உடல், மனச்சோர்வினை அகற்றுவதற்கு பின்வரும் பயிற்சிகளை செய்வதன் மூலம் பயனுள்ளதாக மாற்றிவிட முடியும்.

நடத்தல், மூச்சுப் பயிற்சி எடுத்தல், தலைகீழாக 100 இலிருந்து 1 வரை எண்ணுதல்.

5. மாலை - 5.00- 6.30 வரை

இப்பொழுதினிலே ஞாபகசக்தியை அதிகரிப்பதற்கு நடு மூளையை செயற்படத் தூண்டும் கருமங்களை ஆற்றுதல் அவசியம் ஆகும். நடு மூளையானது வலது பக்க மூளையும், இடது பக்க மூளையும், இடது பக்க மூளையும் சரி சமமான வீதத்தில் பயன்படுத்துவதினாலேயே தொழிற்படுகின்றது.

துவிச்சக்கரவண்டி மிதித்தல், நடத்தல், கரப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், பாஸ்கற்போல், ஓடி விளையாடுதல், உடற் பயிற்சி செய்தல்

இதன் மூலம் இரவிலே தோன்றும் நடுமூளை பலத்தினைப் பாவித்து புத்துணர்வையும் ஞாபகசக்தியையும் அதிகரிக்கச் செய்யலாம்.

6. பிரபஞ்ச சக்தி நேரம் மாலை 6.30- 10 மணிவரை.

படைப்புத்திறன், ஆக்கத்திறன், புதுமைத்திறன், வளர்ச்சிக்கு உகந்த நேரம்

நடுமூளை நன்றாக செயற்பட்டு ஞாபக சக்தி, வெற்றி மனப்பான்மை, செயற் துணிவு, ஆத்மசக்தி ஆகியவை பொங்கிடும் நற்காலம்.

மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விடயங்களை எண்ணுவதற்கு நல்ல நேரம்.

கடமை புரிபவர்கள் நாளை நாங்கள் என்னென்ன தீர்மானங்களை எடுக்க வேண்டும், எவ்வாறு பிரச்சினைகளை அணுக வேண்டும், வெற்றி மனப்பான்மையை எவ்வாறு மேம்படுத்த வேண்டும், ஆத்ம பலத்தை எவ்வாறு பேணவேண்டும் என்று புதிய சிந்தனைகள் மலர்ந்திடும் நேரம்.

7. உள்ளுணர்வு நேரம் இரவு 10 அதிகாலை 5 மணிவரை

கடமை காரியங்களை நிறைவேற்றி இரவுத் தூக்கத்திற்கு தயாராகும்வேளை, இன்றைய அதிகாலையில் நாம் வகுத்த திட்டங்கள் இனிதே நிறைவேறியதா? அல்லது எங்கு தவறு விட்டோம் என ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே சுய மதிப்பீடு செய்து ஆய்வு செய்யும் நேரமாகும். இவ்வாறு சுயமதிப்பீடு செய்வதன் மூலம் இன்றைய தவறுகள் குறைந்து மலர இருக்கும் நாளைய நாளின் செயற்பாட்டினை சிறப்பாக அமைத்துக் கொள்ளமுடியும். அதன் பின்னர் நாளைய திட்டத்தினை வடிவமைத்து நாளைய பொழுதினை சிறப்பாக மாற்றிட முடியும்.

அடுத்ததாக, உங்களுடைய சேவை மேம்பாட்டுத் திட்டம், இலக்கு, இலட்சியம், குறிக்கோள் ஆகிய சுய ஊக்க சிந்தனையுடன் உறங்குவதன் மூலம் சோதனைகளினை வென்று சாதனைகள் பல நிலைநாட்டலாம். சரித்திரம் படைக்கலாம்.

ஒரு சமுதாயம் தன்னம்பிக்கை அற்று வாழ்கின்றதென்றால், அச்சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் இலக்கு இலட்சியம், குறிக்கோள், தூரநோக்கு, மனவள முதலீடு, மூளைவள முதலீடு, உடல்வள முதலீடு, ஆத்மவள முதலீடு, நேரவள முதலீடு ஆகியவை இன்றி "கண்டதே காட்சி கொண்டதே கோலம் போல" மனப்பாங்கில் காலத்தை கடத்தும் மனநிலையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் வியப்பு

ஓர் ஆற்றில் முட்டை ஓடுகள் மிதந்து வந்து கொண்டிருந்தன. அப்போது சில மாணவர்கள் அவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. முட்டை ஓடுகளை குறிபார்த்து அந்த மாணவர்கள் சுடத் தொடங்கினார்கள்.

ஆனால், அவர்களுடைய குறி தவறிக் கொண்டே இருந்தது. ஓர் ஓட்டினைக் கூட அவர்களால் குறி பார்த்து சுட முடியவில்லை. இந்தக் காட்சியை ஒரு சான்றோர் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த மாணவர்கள் மிக ஆர்வமாகச் சுடுவதற்கு முயல்வதையும், ஆனால் குறி தவறிக் கொண்டே வந்ததால் அவர்கள் முகத்தில் ஏமாற்றத்தின் ரேகை படிந்திருப்பதையும் அவர் கவனித்தார். அந்த மாணவர்களின் அருகில் வந்த அவர், ''என்னிடம் உங்கள் துப்பாக்கியைத் தருகிறீர்களா...?'' என்று கேட்டார்.

வியப்படைந்த அந்த மாணவர்கள், எதற்காக துப்பாக்கியைக் கேட்கிறீர்கள்...?'' என்று கேட்டனர்.

''நீங்கள் இந்த ஆற்றில் மிதந்து வரும் ஓடுகளைச் சுடுவதற்கு பலமுறை முயற்சி செய்தும் பலன் தரவில்லை. நானும் ஒரு முறை முயற்சி செய்து பார்க்க விரும்புகிறேன். அதனால்தான் உங்கள் துப்பாக்கியைக் கேட்கிறேன்'' என்றார் அவர்.

''ஒரு முறை முயற்சி செய்தால் போதாது... நாங்கள் பல முறை முயற்சி செய்தும் வெற்றி கிடைக்கவில்லை. நீங்கள் ஒரே முறையில் வெற்றி பெற்று விடுவீர்களா...? என்று அந்த மாணவர்கள் கேட்டார்கள்.

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது துப்பாக்கியைக் கொடுங்கள்'' என்று அவர் கேட்டார்.

அந்த மாணவர்கள் அவரிடம் துப்பாக்கியை அளித்தார்கள். அதை வாங்கிய அந்தச் சான்றோர் ஆற்றில் மிதந்து வந்த ஓடுகளைக் குறிபார்த்து சுடத் தொடங்கினார். ஒவ்வொரு முட்டையும் சுடப்பட்டு உடைந்து போயின. ஒரு முறை அல்ல... பல முறை அவர் சுட்டுக் கொண்டேஇருந்தார். ஒரு முறை கூட அவருடைய குறி தவறவே இல்லை.

இதனைக் கண்ட அந்த மாணவர்கள் வியப்புக் கொண்டவர்களாய் பிரமித்து நின்றனர். '' ஐயா... தாங்கள் துப்பாக்கி சுடுவதில் மிகவும் பயிற்சி பெற்ற வல்லுநரா? என்று அவர்கள் கேட்டனர்.


அதற்கு அவர், ''முதல் முறையாக இப்போது தான் நான் துப்பாக்கியையே தொடுகிறேன். நீங்கள் பலமுறை முயன்று ஏமாற்றம் அடைந்தவர்களாக காணப்பட்டீர்கள். உங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே உங்களிடமிருந்து நான் துப்பாக்கியை வாங்கிச் சுட்டேன்'' என்று அவர் பதிலளித்தார்.

அதனைக் கேட்டு அந்த மாணவர்கள் மேலும் வியப்பினை அடைந்தார்கள். "இப்போதுதான் முதல் முறையாக துப்பாக்கியை நீர் தொடுகிறீரா...?" என்று மீண்டும் மீண்டும் அவரைப் பார்த்து அவர்கள் வினவினார்கள். "ஆமாம்... இப்போதுதான் உங்களுக்காக முதல் முறையாகத் துப்பாக்கியை தொட்டிருக்கிறேன்'' என்று அவர் உறுதியாக மொழிந்தார்.

''அப்படியென்றால் நாங்கள் பல முறை முயன்றும் எங்களால் அந்த ஓடுகளைச் சுட முடியவில்லை. ஒரே முறையில் நீங்கள் வெற்றி பெற்றதன் காரணம் என்ன...? என்று அவர்கள் அதே வியப்பு கலந்த குரலில் வினவினார்கள்.

அதற்கு அந்தச் சான்றோர் பதில் கூறினார்.. "நீங்கள் ஆற்றில் மிதந்து வந்த ஓடுகளைச் சுட வேண்டும் என்று ஆர்வம் மிக்கவர்களாக இருந்தீர்கள். ஆனால் உங்கள் மனம் அந்த ஓடுகளில் முழுவதுமாகப் பதியவில்லை. உங்கள் எண்ணம் சிதறியிருந்தது. நான் துப்பாக்கியைச் சுட ஆரம்பித்ததிலிருந்து என் மனத்தைச் சிதற விடவில்லை இதுவே என் வெற்றிக்கு காரணம். ஒன்றினை எண்ணும் போது மற்ற எதையும் மனதில் எண்ணக்கூடாது. இதுவே மனதை ஒருமுகப் படுத்தும் இரகசியம். நீங்கள் இது போல மனதைச் சிதற விடாமல் இருந்தால் நீங்களும் எளிதாக வெற்றி பெறலாம். என்னைப் போலவே ஆகலாம்...'' என்றார்.

அந்தச் சான்றோர் யார் தெரியுமா..? பாரதத் திருநாட்டின் பெருமைகளை அமெரிக்காவின் சர்வ மத சபையிலே சிங்கமென கர்ஜனை செய்த சுவாமி விவேகானந்தர்தான். மாணவர்களுக்கு அறிவுச்சுடர் ஏற்றிய சுவாமி விவேகானந்தரின் அருமையான கதையினைத்தான் மேலே விளக்கியிருந்தோம். மன ஒருமைப்பாடு என்பது தான் இந்த வையகத்தின் வெற்றிகள் அனைத்துக்கும் மூல காரணமாக உள்ளது.



மாணவர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து தரப்பினரும் மன ஒருமைப்பாட்டின் மூலமே வெற்றியினை அடைய முடியும். இதற்கு முன்பு கூறப்பெற்ற 'குருபக்தி' கதையில் அரிச்சுனனைச் சிறந்த வில்லாளி என்று துரோணாச்சாரியார் பாராட்டிதற்கான காரணத்தை விளக்கமாகக் கூறியிருந்தோம்.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் [illegible]**

# தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றிணைந்த மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்



(சென்றவாரத் தொடர்ச்சி....)

எஸ்.ஆர்.லெம்பேட்

2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்தப்பாடசாலையில் பல மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

**மனைப்பொருளியல் மன்றம்**

மனைப்பொருளியலானது ஏனைய பாடங்களைப்போல ஒரு முக்கியமான பாடமாகவும்,வாழ்க்கைக்கு இன்றி அமையாத ஒன்றாக ஆண்,பெண் வேறுபாடுகளின்றி கற்றறிந்து வாழவேண்டிய பாடமாக உள்ள போதிலும் பலரால் அது உணரப்படவில்லை.

உணவைப்பற்றி அதனை எவ்வாறு போசணைக் குரியதாக்கி அளவறிந்து உண்பதனால் நோயற்ற வாழ்க்கை வாழலாம் என்பதை அறிவுறுத்தும் பாடமாக இது அமைந்துள்ளது.

வளர்ந்து வரும் எமது பாடசாலையில் மனைப்பொருளியல் பாடத்தைக் கற்கும் மாணவர் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.க.பொ.த உயர் தர வகுப்பிலும் 2010 ஆம் ஆண்டு மனைப்பொருளியல் பாடம் ஆரம்பிக்கப் பட்டுள்ளமையும் மகிழ்ச்சிக்குரிய விடையமாகும்.

இன்றைய கலைத்திட்ட மாற்றங்களுடன் இணைந்த வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் ஓர் அங்கமாக பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. இந்த வகையில் எமது பாடசாலை நூலகமும் கல்வித்துறையிலான உன்னத நிலையை அடைய வழியமைத்து வருகின்றது.

பாடசாலை நூலகமானது ஆரம்ப காலங்களில் ஒரு வகுப்பறைக் கட்டடத்தில் குறைந்தளவிலான நூல்களுடன் இயங்கி வந்தது.பின் 27-07-2009 ஆம் ஆண்டு தொடக்கம் மாடிக்கட்டடத்தில் சகல வசதிகளுடனும் இயங்கி வருகின்றது. எமது நூலகத்தில் தற்போது 1500 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காணப்படுகின்றன. இந்த நூலகத்தில் உள்ள பல நூல்கள் பலரினால் வழங்கப்பட்டவையாகும்.

பாடசாலை நூலகம் ஆரம்ப காலங்களில் ஒரு வகுப்பறைக் கட்டடத்தில் குறைந்தளவிலான நூல்களுடன் இயங்கி வந்தது. பின் 27-07-2009 ஆம் ஆண்டு தொடக்கம் மாடிக்கட்டடத்தில் சகல வசதிகளுடனும் இயங்கி வருகின்றது. நூலகத்தில் தற்போது 1500 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காணப்படுகின்றன. இந்த நூலகத்தில் உள்ள பல நூல்கள் பலரினால் வழங்கப்பட்டவையாகும்.

**பாண்ட் வாத்திய இசைக்குழு**

இந்தப்பாடசாலையில் பாண்ட் வாத்திய இசைக்குழுவானது 1998 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சிறப்பாக இயங்கி வருகின்றது. பாடசாலையில் இடம் பெறுகின்ற விளையாட்டுப்போட்டி, ஆசிரியர் தினம் உட்பட சகல நிகழ்வுகளுக்கும் வருகை தருகின்ற விருந்தினர்களை வரவேற்பதற்கும், குறித்த நிகழ்வுகளை சிறப்பிப்பதற்கும் இந்த பாண்ட் வாத்திய இசை இசைக்கப்படுகின்றது.

இப்பாடசாலை மாணவர்களுக்கு மேலைத்தேய பாண்ட் வாத்தியக்கருவிகள் குறைவாகக் காணப்படுகின்றமையினால் இருப்பதை வைத்துக்கொண்டு அவ்வப்போது அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் புதிய பாடல்களும் இசைக்கப்படுகின்றன.

இந்தப்பாடசாலையில் கா.பொ.த சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களில் அதிக மாணவர்கள் சித்தியடைகின்றனர். கா.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் அதிகளவானவர்கள் உயர்தரம் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளுகின்றனர். கா.பொ.த. உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றுகின்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை செல்லுகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்தப் பாடசாலையில் பௌதிக வழங்களைப் பொறுத்த வரையில் பலரது உதவிகள் எமக்குக் கிடைத்துள்ளன. மன்னார் வலயக்கல்வி அலுவலகம், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் இப்பாடசாலைக்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளனர்.

குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள இப்பாடசாலையின் பழைய மாணவர்களும் இப்பாடசாலைக்கு தம்மாலான உதவிகளை தொடர்ந்தும் வழங்கி வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பாடசாலையில் கிறிஸ்தவ, இந்து, முஸ்ஸிம் மாணவர்கள் ஒற்றுமையாக ஒரே குடையின் கீழ் கல்வி கற்று வருகின்றமையும் சிறப்பிற்குரிய விடயமாக காணப்படுகின்றது.★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஹக்கீமின் திட்டத்துக்கு இப்போதுதான் சந்தர்ப்பம்

## மு.காவின் ஆதரவாளர்கள் ஆவேசம்

மட்டக்களப்பு,நவ.5

கிழக்கில் முஸ்லிம் மக்களின் குரலாக இருந்த, மர்ஹூம், அஷ்ரப் வளர்த்துவிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அழிப்பதற்கு நீண்டகாலமாகத் தீட்டிவந்த திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு இப்போதுதான் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பம் வருவதற்கு அவருக்கு ஆதரவு அளித்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாகாண ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பதவி மோகம் பிடித்த ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவராக உள்ளார் என்பது முஸ்லிம் மக்களுக்கு வெட்கக்கேடாக உள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம்களை ஏமாற்றிவந்த முகமூடி இப்போதுதான் கிழிந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் எந்தக் காரணம் கொண்டும் மஹிந்த அரசுடன் இணைந்து ஆட்சியமைக்காது என்று கடந்த தேர்தல் பிரசாரத்தில் மேடை முழக்கம் செய்த ஹக்கீமை நம்பித்தான் முஸ்லிம் மக்கள் மு.காவுக்கு வாக்களித்தார்கள். ஆனால், கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறி அரசுடன் ஒட்டிக் கொண்டார் ஹக்கீம். இதற்கு முஸ்லிம் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களும் ஆதரவளித்துள்ளார்கள்.

இதேவேளை, கிழக்கு மாகாணசபையில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட, தமிழ் - முஸ்லிம் மக்களின் வயிற்றில் அடிக்கும் 'திவிநெகும' சட்ட வரைவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்துள்ளது.

எனவே, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் குரலாக இருந்த, மர்ஹூம் அஷ்ரப் வளர்த்துவிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அழிப்பதற்கு நீண்டகாலமாகத் தீட்டிவந்த திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு இப்போதுதான் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பம் வருவதற்கு அவருக்கு ஆதரவு அளித்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. இவர்களுக்கு இனி வரும் தேர்தல்களில் கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.-என்றனர். (ச)

## ஆஸ்பத்திரியில் இறந்த பெண்; சிகிச்சையில் குளறுபடியா?

### மட்டக்களப்பில் பரிதாபம்

மட்டக்களப்பு,நவ.5

மட்டக்களப்பு, பழுகாமத்தில் இருந்து கை உடைவு காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவந்த குடும்ப பெண்ணொருவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக அவர் உயிரிழந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

பழுகாமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான சிவனேசன் சிவகலா (வயது-30) மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்.

இந்தப் பெண் கடந்த புதன்கிழமை வீட்டில் வழுக்கி விழுந்ததால் அவரது கை மணிக்கட்டுப் பகுதியில் உடைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், மறுநாள் வியாழக்கிழமை அவருக்கு கை மணிக்கட்டுப் பகுதியில் சத்திரசிகிச்சை செய்யவென அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.


சத்திரசிகிச்சையின்போது குறித்த பெண் உயிரிழந்துள்ளார். சத்திரசிகிச்சையின்போது இடம்பெற்ற சில பிழையான சிகிச்சை காரணமாகவே குறித்த பெண் உயிரிழந்திருக்கலாம் என்று குடும்பத்தினரால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நீதிபதி மரண விசாரணையை மேற்கொண்டதுடன், உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதால் கொழும்பில் இருந்து பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியர்களை வரவழைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளபோதும், ஒரு சிலரின் கவனயீனங்களால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அருள் கிடைக்கட்டும்...



மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட புன்னக்குளம் நரசிம்ம சுவாமி ஆலயக் கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

## பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,நவ.5

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடிப் பகுதியில் பெண்ணொருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

ஆயித்தியமலை, நரிப்புல் தோட்டக் கிராமத்தைச் சேர்ந்த ரதிகா (வயது 20) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

கல்லடி, சரவண வீதியிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதியின் பின்புறமாக இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் கடமையாற்றும் அரச அதிகாரியொருவரின் குடும்பம் தங்கியிருந்த விடுதியில் இவர் வீட்டு வேலை பார்த்துவந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## துஷ்பிரயோகத்தை ஒழிக்க மட்டு.நகரில் விசேட திட்டம்

### சிறுவர் பாதுகாப்பு குழு நடவடிக்கை

எருவில்,நவ.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிக்க, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் ஆலோசனைக்கமைய விசேட திட்டங்களை பொதுமக்கள், சிறார்கள் ஒன்றுகூடும் பொது இடங்கள் மற்றும் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கமைய இந்த மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வுகளை மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸின் வழிகாட்டுதலில் நடத்த மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு முன்வந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஊடக அதிகாரி பீ.அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாக்க பொதுமக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலே மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது என்று மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

இந்த விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த சிறுவர் பாதுகாப்பு தேசிய செயலகம், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் மாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்களம் என்பன இணைந்து செயற்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச-31)

## குளவி கொட்டி 17 பேர் வைத்தியசாலையில்



எருவில்,நவ.5

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் குளவி கொட்டி 17 பேர் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

5 சிறுவர்கள் உள்ளிட்ட 17 பேர் குளவி கொட்டலுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர், மீராகேணி வீதியில் பனை மரமொன்றிலிருந்த மட்டைகள் விழுந்துள்ளதையடுத்தே, குளவிக் கூடு கலைந்து வீதியால் சென்றவர்களை தாக்கியுள்ளது. (ச-31)

## தேசத்துக்கு மகுடம்; அபிவிருத்திக்கு நிதி

அம்பாறை,நவ.5

அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ள தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 10 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தொலைத்தொடர்பு, தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள நடமாடும் சேவையை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரால் சுமார் 30 வருடங்கள் பாதிக்கப்பட்ட மக்களை மகிழ்வூட்டுவதற்காகவே தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை அம்பாறை மாவட்டத்தில் நடத்துகின்றோம்.



இந்த நடமாடும் சேவையில் தீர்வுகள் வழங்கப்படாத பொதுமக்களின் பிரச்சினைகள் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படும். - என்றார்.

இந்த நடமாடும் சேவையில் ஆள் அடையாள அட்டை, கடவுச் சீட்டு, பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

காணிப் பிரச்சினைகள், சமுர்த்தி நிவாரணம் மற்றும் சமூகசேவை உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்களுக்கு உள்ள சிக்கல்களுக்கு தீர்வுகளும் வழங்கப்பட்டன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனதில் உற்சாகமும் செயல்களில் திறமையும் பரிமளிக்கும். நிலுவைப்பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சிறந்து ஆதாய பணவரவைத் தரும்.

**இடபம்:** உங்களுக்கு அறிமுகம் இல்லாதவரிடம் தேவையற்ற விடயம்பற்றிப் பேசக் கூடாது. புதிய பணிகள் உருவாகி உங்கள் அவசர கதியில் செயற்பட வைக்கும். எதிர்பார்த்த பணவரவு ஓரளவு கிடைக்கும். கௌரவ சூழ்நிலைகளுக்காக போட்டி, பந்தயங்களில் ஈடுபடக் கூடாது.

**மிதுனம்:** திகைப்புக் கொடுத்த பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியுாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் பணவரவு கிடைக்கும். இயன்றளவில் அறப்பணி செய்வீர்கள்.

**கடகம்:** உங்களின் வெளிவட்டாரத் தொடர்பு தொந்தரவு தரலாம். கடிணப் பணிகளில் கூடுதல் தற்காப்பு பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைக்கிற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்த வேண்டும். பணவரவு சிக்கன செலவுகளுக்கு பயன்படும்.

**சிங்கம்:** சில நெருக்கடியான சூழ்நிலைகளை புதிய யுக்தியால் சரி செய்வீர்கள். நல்ல பலன் கிடைத்து, சமூகத்தில் இருக்கிற மதிப்பு மரியாதையை அதிகரிக்கும். தொழில், வியாபார வகையில் சிலருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் மனதில் புதுமையான எண்ணங்கள் உருவாகும். பகைவரால் வந்த கெடுசெயலை முறியடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு, சன்மானம் கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி -21 செவ்வாய்க்கிழமை 06.11.2012
திதி: ஸப்தமி பி.ப. 01.36 வரை
நட்சத்திரம்: பூசம் மாலை 06.36 வரை
சுபநேரம்: 10.35 - 12.05 வரை
ராகுகாலம்: 03.05 - 04.35 வரை

**துலாம்:** சிலர் சொல்லும் தேவையற்ற ஆலோசனை தர்ம சங்கடத்தை உருவாக்கலாம். பொறுமையுடன் நடந்து கொள்வதால் நட்புக்கு குறையேதும் வராது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைய கூடுதல் பணிபுரிவது அவசியம்.

**விருச்சிகம்:** உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். இதனால் குடும்பத்தினருடன் விரக்தி மனதுடன் பேச வேண்டாம். பாதுகாப்பு குறைவான இடங்களில் பிரவேசிக்கக் கூடாது. உத்தியோகத்தர் நிர்வாகத்தின் எதிர்பார்ப்புக்களை கூடுதல் கவனமுடன் நிறைவேற்றுவது நல்லது.

**தனுசு:** எவரிடமும் உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். செயல்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவீர்கள். குடும்பச் செலவுகளை தாரள மனதுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உங்களுக்கு பார்க்கிற செயல்கள் எல்லாம் நன்மையாகவே இருக்கும். மாறுபட்ட மனம் கொண்டவர்கள் கூட விரும்பி அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் இருந்த தாமதம் விலகும்.

**கும்பம்:** உங்கள் மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்படலாம். அன்றாடப் பணிகளில் மனமுவந்து ஈடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ற வகையில் பலன் கிடைக்கும். பணவரவை முக்கிய செலவுகளுக்குப் பயன்படுத்துவது நல்லது.

**மீனம்:** உங்களின் உறவினர் சில எதிர்பார்ப்புடன் அணுகுவர். இயன்றளவில் உதவி செய்து, அன்பை வளர்ப்பீர்கள். தொழில், வியாபாரம் சீராக சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 4 | | 8 | | | | 9 |
| 9 | | | 2 | | 6 | | | |
| | | 8 | | 3 | 4 | | 6 | |
| 2 | | 6 | | | 7 | | | |
| 5 | | 7 | 3 | 1 | 2 | 6 | | 4 |
| | | | 4 | | | 2 | | 5 |
| | 9 | | 6 | 4 | | 8 | | |
| | | | 1 | | 5 | | | 3 |
| 4 | | | | 2 | | 7 | 5 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 5 | 2 | 4 | 8 | 9 | 1 | 6 |
| 2 | 6 | 4 | 5 | 9 | 1 | 8 | 7 | 3 |
| 8 | 9 | 1 | 6 | 3 | 7 | 4 | 5 | 2 |
| 4 | 5 | 9 | 3 | 8 | 6 | 1 | 2 | 7 |
| 6 | 7 | 2 | 4 | 1 | 9 | 5 | 3 | 4 |
| 3 | 1 | 8 | 7 | 5 | 2 | 6 | 9 | 4 |
| 1 | 2 | 3 | 8 | 6 | 5 | 7 | 4 | 9 |
| 9 | 4 | 6 | 1 | 7 | 3 | 2 | 8 | 5 |
| 5 | 8 | 7 | 9 | 2 | 4 | 3 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிவராஜா



யாழ். வதிரி, புலவராவோடையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, பரந்தன், அல்வை, மாலுசந்தி, லண்டன் (CROYDON) ஆகிய இடங்களை வதிவிடங்களாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராஜா கடந்த 30-10-2012 செவ்வாய்க்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சறோஜினிதேவியின் (அனுஷா) அன்புக் கணவரும், நவநீதன் (லண்டன்), மஞ்சுளா (லண்டன்), செல்வநீதன் (பிரான்ஸ்), பிரேமிளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாகினி, ஜேம்ஸ், பிரபாகரன் ஆகியோரின் அருமை மாமனும், சுஜோஸ்தன், அமஸ்தன், அஜீத்சன், மேகனா ஆகியோரின் அன்புப் பேரனும், சதாசிவம், சிவபாதம், இராஜேஸ்வரி, சிவஞானம், சிவலோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருநாவுக்கரசு (பிரான்ஸ்), சுந்தரலிங்கம், யோகராணி, நவரத்தினசாமி (பிரான்ஸ்), ஈஸ்வரன் (பிரான்ஸ்), உருத்திராதேவி (பிரான்ஸ்), அன்னம்மா, நிர்மலாதேவி, கலா, சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகநாதன், கிருபா, ராதா, செல்வநிதி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், மதிவதனன், இராஜேஸ்வரன், இராஜபிரபா, ராஜ்குமார், சுரேயா ஆகியோரின் சிறிய தந்தையும், அமிர்தினி, தினேஷ், தாட்ஷாயினி ஆகியோரின் பாசமிகு மாமனும், வர்ஷினி, சுயன், திவ்யா வர்திகா, தீவந் திகா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று (05-11-2012) திங்கட்கிழமை காலை 7-00 மணிமுதல் 10-30 மணிவரை அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு, பின்னர் Croydon Cemeterries and Cremetoriam, Mitcham Road, Creoydon, Surrey, CR9 3AT இற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகள்: லண்டன்- 00442086830767
நவநீதன் - 00447985193123
[illegible] - 00447507855066
[illegible] - 00447879683739
செல்வநீதன் (பிரான்ஸ்) - 0033658588426

(24813) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் 'எதிர்க்கட்சியின் எதிர்ப்பு, என்ற தொனிப்பொருளில் நீர்கொழும்பு நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தன, ரவி கருணாநாயக்கா, நீர்கொழும்பு மாநகரசபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மு.கா. உறுப்பினர்கள் இருவர் பிரேரணையில் கையொப்பம்

## கட்சிக்குள் பெரும் குழப்பம்

கொழும்பு,நவ.5

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் இருவர் கையொப்பமிட்டுள்ளனர். அது கட்சிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என அறிய முடிகின்றது.

நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையில் கைச்சாத்திடுவதில்லை என்ற மு.காவின் தலைமைப் பீடம் தீர்மானித்திருந்த நிலையில் அதை மீறி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கையொப்பமிட்டுள்ளமையே சர்ச்சைக்கு காரணம் என்று தெரியவருகின்றது.

எனவே இந்த சர்ச்சைக்குரிய விவகாரத்தையடுத்து

**மு.கா.உறுப்பினர்கள் இருவர் பிரரே ரணையில் கைச்சாத்திட்டுள்ளதால் கட்சிக்குள் பெரும் குழப்பம்.**

கட்சியின் அதிஉயர்பீடக் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு மு.காவின் தலைவருக்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் மு.காவின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் அந்தக்கட்சியின் செயலாளரிடம் கேட்பதற்கு பல தடவைகள் முயற்சித்த போதிலும் பலன் கிட்டவில்லை. (ச-சி)

# அதிக சம்பள உயர்வை எதிர்பார்க்கவே முடியாது

## அடித்துச் சொல்கிறார் பஸில்

கொழும்பு,நவ.5

அரச பணியாளர்கள் இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் அதிக சம்பள உயர்வை எதிர்ப்பார்க்க முடியாது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனினும் விதை மானியம் மற்றும் சுகாதாரத்துறைக்கான ஒதுக்கீடுகள் உரியமுறையில் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஈரானில் இருந்து எரிபொருள் இறக்குமதி தடை உட்பட்ட பல வழிகளிலும் இலங்கை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்தநிலையில் அதிக சம்பள உயர்வை எதிர்ப்பார்ப்பது பொருத்தமற்றது என்று அவர் கூறினார்.

'திவிநெகும' மற்றும் 'புறநெகும' போன்ற அபிவிருத்தி திட்டங்கள் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு சுற்றுலாத்துறை முன்னேற்றப்படும் என்று



அவர் தெரிவித்தார்.

இதேவேளை உரிய சம்பள அதிகரிப்பு வரவு- செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படாவிட்டால், எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படும் என்று இலங்கையின் எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மக்களின் அபிலாஷைகள் அமைச்சர்களால் உதாசீனம்

## இவர்களுக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதில்லை என்கிறார் சஜித்

கொழும்பு,நவ.5

மக்களின் அபிலாஷைகளை ஆளும்கட்சி அமைச்சர்கள் உதாசீனம் செய்கின்றனர். எனினும் இவர்களுக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வீரவில பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் மோசடி செய்யப்பட்ட ஹெய்ஜின் கொடுக்கல் வாங்கல்களுக்கு பணம் செலுத்த வேண்டாமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதுமட்டுமல்ல ஒரு லீற்றர் பெற்றோலை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஹெய்ஜின் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை பணி நீக்குமாறு உத்தரவிட்டிருந்தது. மக்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பாதுகாக்கும் வகையில் உயர் நீதிமன்றம் செயற்பட்டு வருகின்றது.

எனினும், மக்களின் அபிலாஷைகளை ஆளும் கட்சி அமைச்சர்கள் உதாசீனம் செய்கின்றனர். இவ்வாறான நபர்களுக்கு எதிராக எந்த



விதமான குற்றப் பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்படுவதில்லை. இதுவே நகைச்சுவையான சம்பவமாகும்- என்றார். (ச)

# மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.5

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவால் இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரமிட் கொடுக்கல் வாங்கல், ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல், கிரேக்க பணப்பத்திரங்கள் கொள்வனவு உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளுடன் மத்திய வங்கியின் ஆளுநருக்கு தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அனைத்து மோசடிகளிலும் அஜித் நிவாட் கப்ராலுக்கு தொடர்பு இருக்கிறது. எனவே இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று ரவி கருணாநாயக்கா கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# காலியில் குழு மோதல்; நால்வர் உயிரைப் பறித்தது

கொழும்பு,நவ.5

காலி, பலாங்கொடை சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நான்கு ஆண்களின் சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பலாங்கொடை பிரதேசத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே நான்கு பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது குழு மோதலே கொலைக்கான காரணம் என்று தெரியவந்துள்ளது. (ச)

# புலனாய்வுப் பிரிவுக்கு மூடுவிழா

கொழும்பு,நவ.5

இலஞ்ச, ஊழல் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து, கொழும்பு பொலிஸ் மோசடி தடுப்பு புலனாய்வுப் பிரிவு மூடப்பட்டுள்ளது.

அங்கு கடமையாற்றிய பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநடவடிக்கையை பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

குறித்த மோசடி தடுப்பு பொலிஸ் பிரிவின், நான்கு பொலிஸ் அதிகாரிகள் மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டனர். கப்பம் மற்றும் இலஞ்சம் பெற்றமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பணத்தை பெறுவதற்காக குறித்த பொலிஸ் அதிகாரிகள் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றின் உரிமையாளரை பணயம் வைத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 13 ஐ அரசு நிச்சயம் ஒழிக்கும்

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் விமல்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் எண்ணம் தன்னிடமில்லை என்று இலங்கை அரசு திடமாகக் கூறிவரும் நிலையில், 13 ஐ முற்றாக நீக்கும் நிலைப்பாட்டை அரசு நிச்சயம் எடுக்கும். அதற்கு, தேவையான அழுத்தங்களை தமது தரப்பு பிரயோகிக்கும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

அத்துடன் 13 ஐ இல்லாதொழிக்கும் போராட்டத்தில் இணையுமாறு ஐக்கிய தேசியக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் விமல் தலைமையிலான அந்த முன்னணி, இறுதிவரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் சூளுரைத்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்காவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விவகாரம் அரசுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் அதில் தான் கையொப்பமிடவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, சர்ச்சைக்குரிய 'திவிநெகும' சட்டவரைவு, 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஆகிய விடயங்கள் தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிப்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக பேசிவருகிறோம். அத்துடன் அதை நீக்குவதற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

குறிப்பாக அதிகாரங்களை வழங்குவதோ அல்லது வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளக் கையகப்படுத்துவதோ அல்ல 'திவிநெகும' சட்ட வரைவின் நோக்கம்.

இதேவேளை நிறைவேற்றுக்கும், நீதித்துறைக்குமிடையில் பிரச்சினைகள் இல்லை. அதாவது தனிப்பட்டரீதியில் எவ்விதப் பிரச்சினையுமில்லை. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் முதன்முதலில் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

பிரதம நீதியரசருக்கெதிரான குற்றவியல் பிரேரணையில் நான் இன்னும் கையொப்பமிடவில்லை. எமது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க அதில்கையொப்ப



மிட்டுள்ளார். தன்னிடம் கோரிக்கை விடுக்கப்படுமானால் அதில் நான் கைச்சாத்திடுவேன்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கும் நிலைப்பாட்டுக்கு அரசு வரும் என நாம் நம்புகின்றோம். அவ்வாறு அதுவரர்விட்டால் நிச்சயம் வரவேண்டுமென்ற நிலைப்பாட்டில் நாம் இருப்போம். அதற்குத் தேவையான அனைத்து வித அழுத்தங்களையும் பிரயோகிப்போம் என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15th YEAR REMEMBERANCE



Born 14.07.1935 — Died 23.10.1997

### MR. N. RATNAVEL

(FCMA, FPFA, Dip.in -Accy, Dip. in -P.F.M)
S.L.Ac.S - I, Rtd. Chief Accountant

You blazed the trail
Set the standards high
To follow your foot steps
Forever we will strive

132/9, G.P.S. Road,
Kalviyankadu, Jaffna. (25071)(6.7.8)

Wife & Children.

## மரண அறிவித்தல்

### மகேசன் இராசமணி



இலகடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இமையாணன் பிறவளவை வசிப்பிடமாகவும் கொண்ட மகேசன் இராச மணி (03.11.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தையன் - அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - அசுவதி தம்பதியரின் அன்பு மருமகளும், மகேசனின் அன்பு மனைவியும், சேகர், ரமேஸ், நிரேஸ், ரசிகலா, கர்ஜனா, ரஜிந்தா ஆகியோரின் அன்புத் தாயும், ராஜேஸ்வரன், கிருபா, ரம்மியா, செல்வி, சுமதி ஆகியோரின் அன்பு மாமியும், ஆர்த்திகா, அபிநாத், அக்சனியா, அக்சயா, ராகவி, ரஸ்கவி, சஜிசயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குண்டுமணி, காலஞ்சென்ற தங்கவேலு மற்றும் மாசிலாமணி, சின்னமணி, ருக்குமணி, அரியமணி, காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் நவமணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறவளவு,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர். (23684)(6.7.8)

## சேவை நலன் பாராட்டு



தொழிற்துறைத் திணைக்கள நெசவுப் போதனாசிரியராக அளப்பரிய சேவையை ஆற்றி, தேசிய ரீதியிலும் எமது நிலையத்துக்குப் பெருமை சேர்த்து இன்று 05.11.2012 தனது சேவையை நிறைவு செய்யும்

செல்வி அருந்ததிதேவி செல்லையா

அவர்களது சேவையைப் பாராட்டி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
பயிற்சியாளர், நெசவாளர்,
நெசவு நிலையம்,
மட்டுவில், நுணாவில். (25073)(45.6.7)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி கிழக்கு, அணிஞ்சிலடி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் 5 பரப்புக் காணியில் அமைந்த சகலவசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 8665126 (25078) (6.7.8)

## வியாபார உதவியாளர் தேவை

ஆவரங்காலில் உள்ள பிரபல வாகன உதிரிப்பாகம் மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு விற்பனை உதவியாளர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 7148 146 (சி/4651)(6-7-45)

## வாழ்த்துகின்றோம்




### திரு. கனகசபை சிறிபதி

இலங்கை வங்கியில் மூன்றரைத் தசாப்தங்கள் அர்ப்பணிப்புடன் கடமைபுரிந்து இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையில் வாடிக்கையாளர் சேவை முகாமையாளராகக்கடமையாற்றி வாடிக்கையாளர் நெஞ்சங்களில் நிறைந்து இன்று (05.11.2012) ஓய்வு பெறும் கனகசபை சிறிபதி அவர்களை சுன்னாகம் இலங்கை வங்கிச் சமூகம் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றது.

Best Wishes

இலங்கை வங்கி, சுன்னாகம். (சி/4524)(6.7.8)

## மூன்றாம் ஆண்டின் நினைவுகளாய்



வாழ்வோடு 1976 ★ 08 ★ 21
வரலாறோடு 2009 ★ 11 ★ 05

### ஜேசுதாசன் பயஸ்ராஜா

(ஓவியர் பயஸ் - ஆசிரியர்)

கலைக்காக பிறந்தவனே நீங்கள் மாயமாய் மறைந்து நம் மனம் சிதைந்து மூன்றாண்டோ....?
வாடி உயிர்சோர்ந்து - இங்கு நாடி இருக்கின்றோம் - உங்கள் நிழல் தானும் காண்பதற்காய் முழு நிலவே நீ....
மூன்றாம் பிறையாகவேனும் எம்மோடு வந்து விடு.

துயரோடு : குடும்பத்தினர்
மனைவி (காயா), மகன் (யதி). (சி/4554)(6.7.8)

## சேவை

விமான டிக்கட்டுகள் மிக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள.............
றெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(6.6.7) தொ.பே - 0212219686

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் A-9 வீதியில் இருந்து 700 மீற்றருக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடும், காணியும், கிளிநொச்சி A-9 வீதியை நகரப்பகுதியில் A-9 வீதியை முகப்பாகக்கொண்ட வியாபார ஸ்தலங்களுக்குரிய காணிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 1988 083, 077 7112 807

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு, திருவோண நட்சத்திரம் கிரகபாவம் 68, உதயத்துச் செவ்வாய் உள்ள அரச தொழில் புரியும் BA பட்டதாரி மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்பு: 0777 286050

## தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

கொழும்பை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் நிறுவனத்திற்கு கொழும்பில் வேலை செய்ய பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.
★Dish Antenna பொருத்துநர்.
★Repair செய்யக்கூடிய Technician
உணவு தங்குமிடம் இலவசம். திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

T.Kumar- 077 771 0785,
I.Prasanth-077 979 8053 (24836)(5-6-7)

## IDEAL CURTAIN DECOR


பிரசித்த உள் அலங்கரிப்பு நிலையம்

உங்கள் இடங்களுக்கு நேரடியாக வந்து அளவுகளைப் பெற்று நீங்கள் விரும்பிய டிசைனில் நியாயமான விலையில் செய்து தரப்படும்.

மேலும்
வேட்டிக்கல் Blinds (Vertical Blinds)
அலுமினியம் பார்ட்டிசன் (Alluminium Partition & Fitting)
கண்ணாடி பார்ட்டிசன் (Glass Partition)
போன்றவையும் செய்துதரப்படும்.

IDEAL CURTAIN DECOR
பிரசித்த உள் அலங்கரிப்பு நிலையம்
ஐடியல் கேட்டின் டெக்கோ
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
(கற்பக பிள்ளையார் கோயில் அருகில்) 077 3013239, 077 9947466

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம் 12.10.1937

மறைவு 07.10.2012

### அமரர் முருகேசு சங்கரப்பிள்ளை

(அம்பனி, குடத்தனை)

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எம்மைவிட்டுப் பிரிந்து
31 ஆம் நாளானதோ!
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

கடந்த (07.10.2012) அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (06.11.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது மருமகளான திருமதி நவலீலாவதி விஜயரத்தினம் அவர்களின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]நொரடி,
[illegible]ன கிழக்கு,
குடத்தனை. (25008) (45.6.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# நுளம்புப் பெருக்கத்தைத் தடுத்து ஆரோக்கிய வாழ்வை அமைப்போம்

அளவெட்டி, ஒக்.5


நுளம்பு உற்பத்தியை மேற்கொள்ளும் தொழிற்சாலைகளாக, கைவிடப்பட்ட கிணறுகள், பாழடைந்து காணப்படும் வீடுகள், பராமரிப்புகளின்றி காணப்படும் பற்றைக் காணிகள் கைவிடப்பட்ட மலசல கூடக்குழிகள் என்பன காணப்படுகின்றன. இவற்றின் உரிமையாளர்கள் நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்காகவும், தேசிய நலனுக்காகவும் தமது சிரமத்தைப்பாராது இவற்றை, மூடியும்,துப்புரவு செய்வதன் மூலமும், டெங்கு ஆபாத்திலிருந்தும் நோய்த் தொற்றுக்களில் இருந்தும் எமது சமூகத்தை பாதுகாக்க முடியும். இவர்கள் ஆரோக்கிய வாழ்வுக்கு பெரும் பணி செய்பவர்களாக கருதப்படுவர். தவறுவோர் மீது சுகாதார விதிமுறைகளுக்கமைய டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவுவதற்கு ஒத்தாசை புரிபவர்களாகக் கருதி உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே சம்பந்தப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் விரைந்து செயற்பட வேண்டும். நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அடையாளம் காணவும், உரிமையாளர்களைத்தொடர்புகொள்ளவும் அந்தந்தப் பிரதேசங்களைச்சேர்ந்த பொது மக்கள், சமூக அமைப்புகள், சன சமூக நிலையங்கள் முன்வர வேண்டும்.

கிராம சேவையாளர் ஊடாகவோ, அல்லது அருகிலுள்ள பிரதேச சபைகள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள், பொலிஸ் நிலையங்களில் முறையிடுவதன் மூலமோ, சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளார்கள். (3-36)

# ஹவாய் தீவுடன் ஒத்துப்போகும் மாதிரிகள்

## கியூரியோசிட்டி ஆய்வில் தகவல்



செவ்வாய்க் கிரகத்தில் சில மாதங்களுக்கு முன்னர் இறங்கி அதன் தரை மேற்பரப்பை ஆய்வு செய்து வரும் கியூரியோசிட்டி விண்கலம் தனது முதலாவது ஆய்வுப் பணியை நிறைவு செய்துள்ளதாக நாசா விஞ்ஞானிகள் அண்மையில் தெரிவித்துள்ளனர். அதாவது கிரிஸ்டல் சடப்பொருள் அற்ற எரிமலைத் தன்மையுடைய கண்ணாடித்துகள்களுடன் கூடிய அதன் ஒரு நிலப் பகுதியை கியூரியோசிட்டி தோண்டி ஆய்வு செய்து வந்தது.

இதன்போது அது கண்டெடுத்த மண் மாதிரிகள் அமெரிக்காவின் ஹாவாய் தீவின்கெயா மலையில்அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்மாதிரிகளுடன் ஒத்துப் போவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆய்வின் போது கியூரியோசிட்டி ரோவர் விண்வண்டி எக்ஸ்றே கதிர்களைப் பாவித்து செவ்வாயிலுள்ள மண் மாதிரிகளின் மூலக்கூற்று கட்டமைப்புக்களைப் படம் பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ளது.

இதேவேளை ஹாவாய்த் தீவின் கடற்கரையோரங்களிலுள்ள பாறைகளின் கட்டமைப்பு செவ்வாயிலுள்ள பாறைகளின் கட்டமைப்போடு மிகவும் ஒத்துப் போவதாகவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மேலும் செவ்வாயின் மேற்பரப்பிலுள்ள மண்ணில் ஹாவாய்த்தீவிலுள்ள எரிமலைகளில் இருக்கும் கண்ணாடித் துகள்கள் போல் கிறிஸ்டல் துகள்களையும் கியூரியோசிட்டி கண்டுபிடித்துள்ளது.

கியூரியோசிட்டி ஆய்வில் நாசா விஞ்ஞானிகளின் முக்கிய இலக்கு என்னவென்றால் அங்கு நுண்ணுயிர் வாழ்க்கை காணப்படுகிறதா என்பதை அறிவதேயாகும். சூரிய குடும்பத்திலேயே பூமியுடன் மிகவும் ஒத்துப் போகும் கிரகம் செவ்வாய் ஆகும்.

வேறொரு கிரகத்தில் ஒரு விஞ்ஞான உபகரணம் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலாவது இரசாயான ஆராய்வு கியூரியோசிட்டியினுடயது என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்

இராமேஸ்வரத்தில் இருந்து 646 படகுகளில் 3 ஆயிரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். கடலில் சீற்றம் ஏற்பட்டதால் ஒரு வாரத்துக்குப் பிறகு நேற்றுமுன்தினம் காலையே அவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். சில மீனவர்கள் மாலையில் கச்சத் தீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டு இருந்தனர்.


அந்த நேரம் இலங்கை இராணுவத்தினர் 7படகுகளில் அங்கு வந்தனர். அவர்கள் இராமேஸ்வரம் மீனவர்களைப் பார்த்து எத்தனை முறைதான் சொல்வது இங்கு மீன் பிடிக்க வரக்கூடாது என்று கூறி விரட்டினர். அவர்கள் மீனவர்கள் மீது கற்களையும், போத்தல்களையும் எடுத்து சரமாரியாக வீசி தாக்குதல் நடத்தினர்.

இதனால் மீனவர்கள் உயிருக்குப் பயந்து அங்கு இருந்து படகுகளில் கரை திரும்பினர். இலங்கை இராணுவத்தினர் கற்கள் வீசியதில் சில மீனவர்கள் காயம் அடைந்ததாக கூறப்படுகிறது. அவர்கள் இது குறித்து அதிகாரிகள் யாரிடமும் புகார் கூறவில்லை.

இலங்கை இராணுவத்தினர் மீன்பிடிக்கச் செல்லும்போது தாக்குதல் நடத்தி வருவதால் இராமேஸ்வரம் மீனவர்கள் அச்சம் அடைந்துள்ளனர். இதனைத் தடுக்க மத்திய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (3)

# ஆரம்பப் பிரிவு மாணவரின் மெய்வன்மைப்போட்டி

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மைதானத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொள்வார். (3-9)



# நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | 16 ஆம் ஆண்டு |
|---|---|
| அமரர் | திருமதி |
| முருகன் சின்னத்துரை | சின்னத்துரை பூரணம் |

17.01.1945 - தோற்றம் - 11.02.1947

18.10.2011 - மறைவு - 28.12.1996

திதி - ஷஷ்டி
(05.11.2012)

விதைகள் முளைத்து பசுமை காணுமுன்
அறுவடையை எட்டாமல் மறைந்த துயரம்
ஆறாத வலியாய் இன்றும்......

பிரிவால் துயருறும்.
பிள்ளைகள் - சி.சுசீலா, சி. தயாளன் (சுவிஸ்),
சி.விமலன் (லண்டன்), சி.ரூபன் (சுவிஸ்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி

தகவல்- சி.விமலன் (லண்டன்)

(சி/4545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1961 ★ 09 ★ 03

மறைவு
2011 ★ 11 ★ 16

## திருமதி
## பரம்சோதி தேவகுஞ்சரி
(இடைப்பிட்டி, காரைநகர்)

**திதி: ஷஷ்டி**
**(05.11.2012)**

குஞ்சரித்தாய் குவலயத்தில்
குன்றனைய விளக்காகி
எம்குலத்தை வாழவைத்து
எல்லோருக்கும் வழிகாட்டி
இவ்வுலகு இறையுலகு
இரண்டிலுமே பரம்சோதி
இணையடிகள் நிழலிலே
இன்புற்றாள் தவப்பேறே!
திருவடியில் சிவனருளால்
பெருமுத்தி அடைந்தாலும்
இருவிழிகள் நீர் சொரிய
இதயத்துள் நினைவேற்றி
திருத்தாயின் அடிதொழுவோம்
மனமலரால் அர்ச்சிப்போம்...
அருள் சொரியும் அன்னைமுகம்
அன்றாடம் பூஜிப்போம்

ஒன்றென்ன ஒருகோடி
ஆண்டோடிப் போனாலும்
என்றென்றும் எமதுள்ளம்
நீயுறையும் கோயிலம்மா
நன்றெமக்கு நல்கிடுவாய்
நாளும் ஒளியூட்டிடுவாய்....
நின்னடியை சரணடைந்தோம்
நின்னருளால் அமைதிகொள்வோம்

354/7, பருத்தித்துறை வீதி,,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(C/4535) (10,6,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டராசிரியர்களைப் படையணியில் இணைக்கும் முயற்சி கைவிடப்பட்ட நிலையில்

## தொண்டர் ஆசிரியர்களின் எதிர்ப்பே காரணம்

யாழ்ப்பாணம், நவ.5

கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்களை சிவில் பாதுகாப்புப் படையணியில் இணைப்பதற்கான முயற்சி தொண்டர் ஆசிரியர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட தாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சியிலுள்ள தமது அலுவலத்தில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சிவில் பாதுகாப்புப் படையணியில் அவர்களை இணைத்துக் கொள்ளுமாறும் அதனூடாக கொடுப்பனவு களையும் ஏனைய சலுகைகளையும் பெற்றுத் தருவ தாகவும் கேட்டுக் கொண்ட போதிலும் தொண்டர் ஆசிரியர்கள் இதற்குத் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து 'உங்களது பொருளாதார நன் மைக்காகவும் குடும்ப மேம்பாட்டுக்காகவுமே உங் களை சிவில் பாதுகாப்புப் படையணியில் இணையுமாறு தாம் கேட்டதாக நாமல் ராஜபக்ஷ கூறியதாகவும் தெரிய வருகின்றது.

ஆனால் இதற் கும் தொண்டர் ஆசி ரியர்கள் இணங்காது தமது மறுப்பை வெளி யிட்டனர்.

மேலும் தொண்ட ராசிரியர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் தொண்டர் ஆசிரியர் களுக்கு நிரந்தர நிய மனம் கிடைக்கும் வரையாவது சிவில் பாதுகாப்புப் படை யணியில் இணைந்து சேவையாற்றுமாறு கேட்டதாகவும் ஆனால் அதனை தொண்ட ராசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிய வரு கின்றது. (க-426)

### சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம்

கைதடி மத்தி வளர்மதி சனமூக நிலையத்துக்கென கைதடி மத்தி வளர் மதி சனசமூக நிலை யத்தின் புலம் பெயர் வாழ் உறவுகள் புதிய கட்டடமொன்றை அண்மையில் அமைத்துக் கொடுத் துள்ளனர்.

இந்தக் கட்ட டத்தில் வாசிகசாலை கூட்ட மண்டபம், திறந்த வெளி அரங்கு உட்பட சகல வசதி களையும் கொண் டதாக அமைக்கப் பட்டுள்ளது. அத்து டன் கடந்த விஜய தசமி அன்று ஐந்தடி உயரத்தில் சரஸ்வதி சிலை ஒன்றும் அங்கு நிறுவப்பட்டுள்ளது. (வ-288)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
**கணேசன் பரமேஸ்வரி**

தோற்றம் 11.01.1941 — மறைவு 06.10.2012

கடந்த (06.10.2012) சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் கணேசன் பரமேஸ்வரி அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் பலவழிகளில் உதவியவர்கள், தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (05.11.2012) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தடங்கன் புளியடி,
முருகமூர்த்தி ஆலய வீதி, நெல்லியடி.

க. மோகன்
(மகன் - கணேசன் மோட்டேர்)
நெல்லியடி- 077 7049 364

(23685) (45.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 14.10.1988 — ஆண்டவன் அடியில் 05.11.2010

அமரர் **அருளீஸ்வரன் நர்சுதன்**

(ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3 ஆம் வருட மாணவன்)

மகனே அன்புச் செல்வமே!
ஓர் ஆண்டென்ன ஈராண்டென்ன
எத்தனை ஆண்டுகள் போனாலும்
எங்கள் உயிர் உள்ள வரை உன் நினைவாகவே இருப்போம்
எங்கள் கண்ணீர்க்காணிக்கையை
உன் பாதத்தில் வைத்து உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சந்திக்கு அருகில்,
கோப்பாய் வீதி, உரும்பிராய்.

எப்போதும் உன் பிரிவை நினைத்து வருந்தும்:
அப்பா, அம்மா, தங்கை,
மச்சான், மருமக்கள்

(24806)(6.7.8)

## கண்ணீர் அஞ்சலி



**இளையதம்பி சிவானந்தன்**

( முன்னாள் இலங்கை வடகிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், பிரதிச் செயலாளர் - வடக்குக்கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு, முன்னாள் அதிபர் உரும்பிராய் இந்துக்கல்லூரி, முன்னாள் பதிப்பாளர் - கல்வி வெளியீட்டுத்திணைக்களம்)

வடகிழக்கு மாகாண கல்விப்பணிப் பாளராகவும் பின்னர் வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிச்செயலாளராகவும் கடமையாற்றி வடகிழக்கு மாகாண மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றிய பெருந்தகை, நல்லாசானாகவும் மிளிர்ந்து இன்று இறையடி சேர்ந்துள்ள அமரர் இளையதம்பி சிவானந்தன் அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்துக்கும், கல்விச் சமூகத்துக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர் தம் துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
பிரதி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள்
மற்றும் அலுவலக ஊழியர்கள், மாகாணக் கல்வித்திணைக்களம், வட மாகாணம்.

(ஜ/4556) (45.6.7)

## மரண அறிவித்தல்

**சிவக்கொழுந்து கதிர்காமநாதன்**



நெல்லியடி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிட மாகவும் கொண்ட சிவக்கொழுந்து கதிர்காமநாதன் கடந்த (01.11.2012) வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - மகேஸ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கனகராசா மற்றும் அன்னபூரணம் (சின்னமணி) தம்பதியரின் மருமகனும், நிர்மலாவின் அன்புக்கணவரும், கனிபராஜ்ஜின் அன்புத் தந்தையும், சாந்தினி, நித்தியானந்தன், சிவானந்தன், சுமதி (பிரான்ஸ்), பவானந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம்(07.11.2012) புதன் கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
அன்னபூரணம்
(சின்னமணி - குடும்பத்தினர்).

(25075) (45.6.7)

## மரண அறிவித்தல்

**திருமதி மேரிறோஸ் ஜெயவதி பெனடிக்ற்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 236, கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி றோஸ் ஜெயவதி பெனடிக்ற் நேற்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புனித பத்திரிசியார் கல்லூரி முன்னாள் ஆசிரியர் S.E.அல்பிறேட் - ஜோசபின் தம்பதியரின் அன்பு மகளும், தும்பளை, புலோலியைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான பிலுப்பையா - அன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற P.J. பெனடிக்ற் அவர்களின் அருமை மனைவியும், ராஜகுமார், செல்வகுமார், சந்திரகுமார், சூரியகுமார், ராஜினி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற றீசா மற்றும் மொறின், செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், றொஷான், அனுராதா, றஜீவ், நிறோஷன், ரினா, மிதுன், ஜினா, கெவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஜெயராணி, ஜெயராஜா, ஜெயவேந்திரா, ஜெயநாயகம் மற்றும் மலர், மணி, றஞ்சி, நவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்திலிருந்து நாளை (06.11.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு பூதவுடல் யாழ்.மரியன்னை பேராலாயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி ஆராதனை யின் பின் யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


236, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

(23928)(6.7.8)

## மரண அறிவித்தல்

**நாகலிங்கம் இராசேந்திரம்பிள்ளை**



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி அரசடி வீதியை, வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசேந்திரம்பிள்ளை நேற்று (04.11.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - கண்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், சரவணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாரிமுத்து தம்பதியரின் அன்புமருமகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், இராசேஸ்வரி ( ஆசிரியை - யா/ மு.த. மகா வித்தியாலயம்), திலகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரதாஸ், பாலகுமாரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், மகேஸ்வரி, முத்துலிங்கம், காலஞ் சென்றவர்களான சொர்ணம்மா, ஏகாம்பரம், கந்தசாமி, அச்சுவினி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனுஜன், தனுஜா, சிந்துஜா (லண்டன்), அஜந்தன் (லண்டன்), அனுசியன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2012) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 36, அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
மயூரன் (மருமகன்), மண்டைதீவு.

(23928)(6.7.8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவை நடத்திய ஜே.ஏ.செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 5 பேர் பங்கு கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்ற இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி வீரர்கள். (ங-23)

## ஜேர்மனியத் தூதரகக் குழுவினர் பயிற்சி நிலையத்தை பார்வையிட்டனர்



யாழ்ப்பாணம், நவ.5

ஜேர்மனி அரசு, சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் என்பவற்றின் நிதிப் பங்களிப்புடன் அரியாலைப் பகுதியில் யாழ்.உதைபந்தாட்ட லீக்குக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தின் பணிகளை இலங்கைக்கான ஜேர்மன் துணைத்தூதர் மரிஜா என்னிங் மற்றும் தூதரக அதிகாரிகளான தோமஸ் ஹெல்ப்ஃபேன், குவாண்டேர் ஜோசப் ரவூர், சன்ரா சென்கி, குளோடியா ஆர்ஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று மாலை 3.30 மணியளவில் பார்வையிட்டனர்.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப் பிள்ளையிடம் ஜேர்மனியக் குழுவினர் இதன்போது ஒருதொகை உதைபந்துகளையும் கையளித்தனர்.(ங-23)

# வடமராட்சியின் பெரும் சமர் நெல்லியடி ம.ம.வி. வசம்

யாழ்ப்பாணம், நவ.5

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட வடமராட்சி பெரும் துடுப்பாட்டச் சமரின் இரண்டாவது சமரிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் வெற்றியீட்டி தொடரைத் தன் வசமாக்கியது.

இந்தப் போட்டி வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இதன்போது முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 47 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரகாஸ் 19 ஓட்டங்களையும், பிரசாந் அயந்தன், டினாலன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும், துவாரகன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணி சார்பில் சிஸ்வரூபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் பிரதீபன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கோகுலன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும், நிதூசன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணி 22 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 86 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சிதம்பராக் கல்லூரி அணி சார்பில் டிசோத்ராஜ் 20 ஓட்டங்களையும், கஜித்காந் 11 ஓட்டங்களையும், நிதூர்சன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் டினாலன் 8.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், பிரகாஷ் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், அங்கதன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.



சிறந்த பந்து வீச்சாளராக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரன் டினாலன், சிறந்த களத்தடுப்பாளராக வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணி வீரன் விஸ்வரூபன், சிறந்த துடுப்பாட்ட வீரராக வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணி வீரன் டிசோத்ராஜ், சகலதுறை ஆட்ட நாயகனாக நெல்லியடி மத்திய மகாவித்தியலாய அணி வீரன் எஸ்.பிரகாஸ், ஆட்ட நாயகனாக அங்கதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நடைபெற்று முடிந்த இரண்டு ஆட்டங்களிலும் சாதித்து தொடர் நாயகன் விருதை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரன் டினாலன் வென்றார். இவர் இரண்டு போட்டிகளிலும் மொத்தமாக 47 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளை கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-23-422)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,நவ.5

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3மணி

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் . (ங-23)

## தென்மராட்சி வலய ஆரம்பப் பிரிவு சதுரங்கப் போட்டிகளின் முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சதுரங்கப் போட்டிகள் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு.

**9 வயதுப் பிரிவு-ஆண்கள்**

முதலாமிடம் சி.பிரணவன்-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

இரண்டாமிடம் ச.சஜிந்தன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

மூன்றாமிடம்-ற.ஆகாஸ்-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை.

**பெண்கள்**

முதலாமிடம் சி.வனோசா-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

இரண்டாமிடம் ம.சிந்திக்கா-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

மூன்றாமிடம் பு.கிருஷாலி-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**10 வயதுப் பிரிவு- ஆண்கள்**

முதலாமிடம் . சி.சுஜிந்தன்-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

இரண்டாமிடம் சு.பிரணவன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

மூன்றாமிடம் செ.கீர்த்திகன்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சி.சோபிதன்-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**10 வயதுப் பிரிவு- பெண்கள்**

முதலாமிடம் எஸ்.திசோதா-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

இரண்டாமிடம் க.கவிசனா-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

மூன்றாமிடம்-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, ந.புகழினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை.

**11 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாமிடம் ஏ.கஜராஜ் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

இரண்டாமிடம் நொ.ரேணுகன்-கச்சாய் அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம் க.அரவிந்தன்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

**பெண்கள்**

முதலாமிடம்- உ.பிரியா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இரண்டாமிடம்-பா.சிந்துயன்-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

மூன்றாமிடம்-ஜெ.ஜேயமதுரா-சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**12 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாமிடம்- எஸ்.அஜந்தன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இரண்டாமிடம்-பா.சிந்துயன்-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

மூன்றாமிடம்-உ.தர்மிலன்-மட்டுவில் கமலாசனி வித்தி

**பெண்கள்**

முதலாமிடம்- சி.சங்கவி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இரண்டாமிடம்-க.லாவன்யா-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

மூன்றாமிடம்-சி.கேதுஷா-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை. (9)

# வவுனியா மாவட்ட அணித் தெரிவு நேற்று கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,நவ.5

வவுனியா கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியினருக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.



மேற்படி பயிற்சி முகாமில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம், பூவரசங்குளம் மகாவித்தியாலயம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம், செட்டிக்குளம் மகாவித்தியாலயம், சூடுகண்ட பிளவு அல்மகா வித்தியாலயம், கோவிற்குளம் இந்துக் கல்லூரி, பண்டாரிக்குளம் விபுலானந்த வித்தியாலயம், மடுகந்த பறக்கும்பா மகாவித்தியாலயம், வீரபுர மாணிக்கவாசகர் வித்தியாலயம் என்பவற்றைச் சேர்ந்த 70 வீரர்கள் இந்தப் பயிற்சி முகாமில் பங்குபற்றினர்.

இவர்களுக்கான பயிற்சிகளை வவுனியா மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர்களாக ஜெயக்குமார், புரட்சிமாறன் ஆகியோர் வழங்கினர்.

பயிற்சி முகாமின் நிறைவில் வவுனியா மாவட்ட 15 வயது கிரிக்கெட் அணிக்கு 30 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (ங-23)

## யாழ். கோட்டமட்ட உதைபந்து அரையிறுதி

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்.கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதியாட்டத்தில் குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியைச் சந்திக்கும். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வொட்சன் விளையாடுவது கேள்விக்குறி



ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொட்சனின் காலில் உபாதை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடரில் ஷேன் வொட்சன் பங்குபற்றுவது சந்தேகத்துக்கிடமான விடயமே என்று ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரின் போது, வொட்சன் ஆஸ்திரேலியாவுக்குத் திருப்பி அழைக்கப்பட்டிருந்தார். தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பயிற்சிக்காகவே இவ்வாறு அவர் சம்பியன் லீக் தொடர் முடியுமுன்னதாக ஆஸி. அணியுடன் இணைக்கப்பட்டிருந்தார். இந்தப் பயிற்சியின் ஓர் அங்கமாக நியூ சௌத் வேல்ஸ் அணிசார்பிலான ஒரு போட்டியிலும் வொட்சன் பங்குபற்றினார்.

இப்போட்டியில் ஷேன் வொட்சன் துடுப்பெடுத்தாடி 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்திருந்தார். அதன் பின்னர் பந்துவீச ஆரம்பிக்கும் போது அவர் காலில் திடீரென உபாதை ஏற்பட்டது. இதனால் உபாதை குறித்து நடுவரிடம் தெரிவித்துவிட்டு போட்டி முடியும்முன்னரே அவர் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

ஏற்கனவே ஆஸ்திரேலிய அணியின் பற் கமின்ஸ், ரிக்கி பொன்டிங் ஆகியோரும் உபாதைகளால் அவதிப்படுகின்றனர். இந்த நிலையில் ஷேன் வொட்சனும் ஆஸி. அணியில் இடம்பெறுவது சந்தேகம் என்பதால், பலமிக்க தென்னாபிரிக்கா அணிக்கு ஆஸி. அணி சவாலை வெளிப்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. நவம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் போது, ஆஸ்திரேலிய அணி தன் முழுப் பலத்துடன் களமிறங்கினால் மாத்திரமே வெல்ல முடியும்.

இதே வேளை ஆஸி. அணியின் ரிக்கி பொன்டிங்குக்கு ஏற்பட்ட உபாதை பாரதூரமானதல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.எனவே முதலாவது டெஸ்ட் தொடரில் ஆஸி. அணிசார்பில் பொன்டிங் களமிறங்கக்கூடும். (ங)

# வெல்வார்களா கிண்ணம்?

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் இறுதிச்சுற்றுக்கு இந்தியாவின் பூபதி- போபண்ணா இணை தகுதி பெற்றுள்ளது.

பிரான்ஸ் தலைநகரில் பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத்தொடரின் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 5 ஆம் நிலை இணையான இந்தியாவின் மகேஷ் பூபதி-ரோஹன் போபண்ணா இணை, ஆஸ்திரேலியாவின் போல் ஹான்லி மற்றும் இங்கிலாந்தின் ஜொனாதன் மர்ரே இணையுடன் மோதியது.

இந்தப் போட்டியில் 7-5, 6-3 என்ற செற் கணக்கில் ஹான்லி- மர்ரே இணையை வீழ்த்தி பூபதி-போபண்ணா இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

பூபதி- போபண்ணா இணை இறுதிப்போட்டியில் 7ம் நிலை இணையான பாகிஸ்தானின் ஐசாம்-உல்-ஹக் குரேஷி மற்றும் நெதர்லாந்தின் ஜீன் ஜூலியன் ரோஜர் இணையை எதிர்கொள்கிறது.

அண்மையில் டுபாய் பகிரங்க ரென்னிஸ் பட்டத்தை வென்ற பூபதி- போபண்ணா இணை, தற்போது இரண்டாவது பட்டத்தையும் வெல்லுமா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஏற்கனவே, இந்த வருடம் நடைபெற்ற ஏ.டி.பி., சின்சினாட்டி பகிரங்க ரென்னிஸ் மற்றும் ஷாங்காய் ரோலக்ஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர்களில் பூபதி-போபண்ணா இறுதிப்போட்டி வரை முன்னேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)



# சத்தியமாக நான் சொல்லவில்லை




ஹபீஸை நீக்குமாறு தான் கோரிக்கை விடுக்கவில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் '20/20' சர்வதேச அணியின் தலைவரான மொஹமட் ஹபீஸை அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று வெளியான தகவல்களை வட்மோர் மறுத்துள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள டேவ் வட்மோர், பாகிஸ்தான் '20/20' அணியின் தலைமைப் பொறுப்பலிருந்து மொஹமட் ஹபீஸை நீக்குமாறு கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை எதனையும் நான் விடுத்திருக்கவில்லை. உண்மையில் இப்போது நான் பாகிஸ்தானில் தங்கியிருக்கவில்லை. இந்த நிலையில் ஹபீஸை நீக்குமாறு நான் கோரிக்கை விடுத்ததாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை. அந்தச்செய்திகள் எந்த ஆதாரமும் இல்லாதவை.

இந்தியாவுக்கு எதிரான மிக முக்கியமான தொடருக்காகப் பாகிஸ்தான் அணி தயாராகிவரும் நிலையில் அதைக் குழப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சதியே இத்தகைய செய்திகளின் உருவாக்கத்துக்குக் காரணம்'' என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற உலகக் கிண்ண '20/20' போட்டியின் போது பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து மொஹமட் ஹபீஸை சிறப்பாக அணியை வழிநடத்தி, பாகிஸ்தானை அரையிறுதிப் போட்டி வரை அழைத்துச் சென்றிருந்தார்.

எனினும் இதன்போது, மொஹமட் ஹபீஸ் சில விமர்சனங்களையும் சந்தித்திருந்தார்.

குறிப்பாக சிரேஷ்ட வீரர் அப்துல் ரஸாக்கை அணியில் சேர்க்காமை தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையான அதிருப்தியை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ங)





# பஞ்சாப் கைவிடவில்லை கில்லியை

''அடுத்த வருடம் இடம்பெறவுள்ள இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் நான் பங்குபற்றுவதற்கான அதிக வாய்ப்புக்கள் உள்ளன'' ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவருமான அடம் கில்கிறிஸ்ட் (வயது-41) தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறிமியர் லீக் அணிகள் தாங்கள் அணியில் வைத்திருக்க விரும்பும் வீரர்களைத் தவிர்த்து ஏனைய வீரர்களை விடுவித்துள்ளன. இந்த நிலையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் வீரர்கள் பட்டியலில் கில்கிறிஸ்ட் இடம்பெற்றுள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அடம் கில்கிறிஸ்ட், ''6ஆவது இந்தியன் பிறிமியர் லீக் தொடருக்கு முன்னதாக அணிகள் ஒவ்வொன்றும் தங்களுக்குத் தேவையான வீரர்களை அணியில் தக்கவைத்துள்ளன. என்னை தன்னுடைய வீரர்கள் பட்டியலில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி இணைத்துள்ளது. இதனால் ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நான் விளையாடுவது உறுதியாகியுள்ளது.

அடுத்த ஐ.பி.எல். பருவகாலத்தில் எமது அணியை வெற்றிபெற வைப்பதற்கான திட்டங்களை வகுத்துவருகிறேன். நிச்சயமாக ஆறாவது தொடரில் பஞ்சாப் அணி சாதிக்கும்''- என்றார்.

இந்த வருடம் நடைபெற்ற ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றியிருந்த அடம் கில்கிறிஸ்ட், அநேக ஆட்டங்களில் மோசமான பெறுபேற்றையே வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் சில போட்டிகளை உடல் உபாதை காரணமாகத் தவறவிட்டிருந்தார்.

இதனால் ஆறாவது ஐ.பி.எல். தொடரில் கில்கிறிஸ்ட் பஞ்சாப் அணியில் இருந்து நீக்கப்படுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக மீண்டும் அவர் அந்த அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது இலங்கை

ஐ.சி.சியின் புதிய விதிமுறைகளுக்கு அமைய இடம்பெற்ற முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி, டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியை வீழ்த்தியது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் சர்வதேச ஆட்டம் பல்லேகல விளையாட்டரங்கில் நேற்று பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

அதனடிப்படையில் நிக்கொல், லத்தம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். மலிங்க, குலசேகரவின் வேகங்களில் நியூஸிலாந்து அணியின் ஆட்டம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தது நியூஸிலாந்தின் முதலாவது இலக்கை மலிங்க கொய்து எடுத்தார். லத்தம் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து நுழைந்த வோட்லிங், நிக்கொல் ஜோடி ஆட்டத்தை பொறுப்பாக முன்னெடுத்து ஆடியது.

120 பந்துகளில் 83 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் நிக்கொல் 46 ஓட்டங்களுடன் பெரேராவின் வேகத்தில் மடிந்தார். தொடர்ந்து நுழைந்த அணித் தலைவர் ரெய்லர் சிறப்பாக ஆடினார். மறுமுனையில் பொறுப்புடன் ஆடிய வோட்லிங் அரைச் சதம் கடந்தார். தொடர்ந்து அடித்தாட முற்பட்ட அவர் ஹேரத் சுழலில் சிக்குண்டு 55 ஓட்டங்களுடன் வெளியேறினார். வோட்லிங்கின் பிடியெடுப்பை மஹேல எடுத்தார். இதன் மூலம் ஒரு நாள் சர்வதேச தொடரில் அதிக பிடிகளைக் (193) கைப்பற்றிய வீரர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

அணித் தலைவரின் அதிரடி ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது. ரெய்லர் 62 பந்துகளில் 72 ஓட்டங்களைக் குவித்த நிலையில் குலசேகரவின் வேகத்தில் சிக்குண்டார். இருந்தும் நியூஸிலாந்து அணி இறுதிக் கட்டத்தில் வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பிராங்லின் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் மலிங்க 39 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், குலசேகரா, மத்தியூஸ், பெரேரா, ஹேரத் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட தரங்க, டில்ஷான் ஜோடி களமிறங்கியது. டில்ஷான் அடித்தாட மறுமுனையில் தரங்க 6 ஓட்டங்களுடன் ஆட்டத்தில் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். 7 பந்துப் பரிமாற்றங்களில் 37 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்தது. இதனால் சிறிது நேரம் தடைப்பட்ட ஆட்டம் மீண்டும் ஆரம்பமானதுமே சங்கா 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அணித் தலைவர் மஹேல மற்றும் டில்ஷான் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். 59 ஓட்டங்கள் மூன்றாவது இலக்குக்காகப் பகிரப்பட்ட நிலையில் டில்ஷான் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மஹேலவுடன் மத்தியூஸும் இணைந்து ஆட இலங்கை அணி வெற்றியை நோக்கி முன்னேறியது.

22.5 பந்துப் பரிமாற்றத்தில் 118 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்த நிலையில் மழை மீண்டும் குறுக்கிட்டது. இதன் போது களத்தில் மஹேல 43, மத்தியூஸ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர். மழை தொடர்ந்ததால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்டநாயகனான லசித் மலிங்க தெரிவு செய்யப்பட்டார்.

(ஙு-5)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**தொடர்பு கொள்ளவும்**
சோமசுந்தரம் பிருந்தாவன்
அவர்கள் எங்கிருந்தாலும்
என்னுடன் தொடர்பு கொள்ளவும்.
த.றொபேட்
(25084)(9.14) T.P- 0776150248

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி
ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு. (சி/4540)

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன்
இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும்
அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 05-11-2012 Batch II - 07-11-2012 Batch III - 10-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


## மரண அறிவித்தல்கள்

### செல்லத்தம்பி தங்கமலர்



இல.927, சிவிக்ஸ்சென்ரர் வட்டக்கச்சியைப் வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்தம்பி தங்கமலர் நேற்றுமுன் தினம் (03.11.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு -பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான மணியர் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பியின் மனைவியும், இராசமணி (செல்வாநகர்), தனேஸ்வரி (ஜெயபுரம்), கைலாயபிள்ளை (ஜெயபுரம்), இராசரத்தினம் (பூநகரி), குணலட்சுமி (பல்லவ ராஜன் கட்டு), துரைரட்ணம் (பல்லவராஜன் கட்டு), புஸ்பராணி (வன்னேரி), யோகவதி (ஜெயந்திநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரூபசிங்கத்தின் (கிராமசேவகர் மாயவனூர்) அன்புத் தாயும், மங்களசிறியின் (ஆனந்தநகர்) சிறிய தாயும், குகறஞ்சிதம், ஜெயபாலன் ஆகியோரின் மாமியும், சுவர்ணலோசினி, விதூசன், கஸ்தூரி, துஸ்யந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (சிவாக்ஸ் சென்ரர்) இடம் பெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணிக்கு பன்னங்கண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.927, சிவிச்சென்ரர்,
வட்டக்கச்சி.
ரூபசிங்கம் (G.S)
மகன்.
(24233)(3.14)

### நடேசு அருட்பிரகாசம் (பத்தர்)



தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு அருட்பிரகாசம் நேற்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு - விசாலாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.150, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
(25082)(3.14)


**மணல் விற்பனைக்குண்டு**
கட்டட வேலைகளுக்கும்,
பூச்சுவேலைகளுக்கும் சிறந்த மணல்
மண் இப்போது உங்கள் இடத்திற்கே
கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 20,000/=
தொடர்புகளுக்கு:- ரமேஸ்
072 26 94462
(24199)(2.6)

**வங்கியியல் கற்கைநெறிகள்**
CBF, DBF
2010, 2011, 2012 ஆகிய வருட
CBF, DBF
பரீட்சைகளில் தோற்றி
சித்தியடைந்த மாணவர்கள்
தங்கள் விவரங்களை
15.11.2012 இற்கு முன்
பதிவுசெய்யுமாறு
கேட்டுக்கொள்கின்றேன்.
(வைபவம் மற்றும் பதிவேடுகள்
பூர்த்திக்காக)
Furthur Detail
Director.
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(சி/4557)(3.6.7)

**தொழில்நுட்ப பாடநெறி**
வீடு, நிறுவன மின் இணைப்பு Wiring (7 days)
கணினி திருத்துதல் Computer Hardwere Enginearing (4 days)
பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நீங்கள் சுயமாக அல்லது நிறுவனங்களில் தொழில் புரிவது உறுதிப்படுத்தப்படும்.
IISEEES NALLUR CAMPUS
T.P 0212224728,
0777444225
762,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(25085)(9.14)

**இந்திய சாஸ்திரியார் வருகை**
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும்
வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15-14)

*Vinoth Curtains*
யாழ். மண்ணில் அறிமுகமாகிறது
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
தொடர்பு- மைக்கல்
0774906323,
0723995447
0779519144
இல-50, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
(23933)(9.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.